960

புதுமை

960
4.57
OFFICE OF ... GISTRAR OF BOOKS
... 1957
MADRAS
SL
19688

25 நயா

நவம்பர் 1 1957

போன்: 2257

தீ பாலராமவர்மா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்.,

செங்கோட்டை.

தற்சமயம் உள்ள கதிர்கள்: 14,384
மேற்கொண்டு நிர்மாணிக்கும்
கதிர்கள்: 3,472

*

கைத்தறித் தொழிலின் மகோன்னத வளர்ச்சி
உயர்ந்த ரக நூலையும், மிக நேர்த்தியான
துணியையும் பொறுத்திருக்கிறது.
எங்கள் ஆலை மிக நேர்த்தியான
உயர்ரக நூல்களை
விநியோகிக்கிறது.

மானேஜிங் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் கரையாளர் &
ரங்கசாமி நாயுடு ஸன்ஸ் கம்பெனி

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்
டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ்
பிரைவேட் லிட்.
மதுரை - திருச்சி - திருநெல்வேலி
புதுக்கோட்டை - சேலம் - கோயம்புத்தூர்
மதருஸ் ஆட்டோ ஸர்வீஸ் பிரைவேட் லிட்,
மதருஸ் - பெங்களூர்
ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிட்.
மதுரை
சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிட்.
மதருஸ்-6
தி மதராஸ் மோட்டார் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிட்.
மதருஸ்
சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்.
புதுக்கோட்டை - மதருஸ்
இந்தியா மோட்டார் பார்ட்ஸ் & ஆக்ஸஸரீஸ்
பிரைவேட் லிட்.
மதருஸ்-2
சுந்தரம்ஸ் பிரைவேட் லிட்.
மதுரை
சுந்தரம் பைனான்ஸ் பிரைவேட் லிட்.
மதருஸ்-2
டி.வி.எஸ்.
ஸ்தாபனங்கள்
TVS

P.R.A & SONS
TINNEVELLY DISTRICT
INDIA (MUKKUDAL P.O.) REGD No. 6444
அசல் ராமகிருஷ்ண மார்க்
TRADE MARK
REGD NO 6444
பீடி கம்பெனி முக்கூடல்
RAMAKRISHNA MARK BEEDI

பொருளடக்கம்

"மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்களாக்குவோம்"

மணி 1 | நவம்பர் 1957 | ஓசை 4

			பக்கம்
அரசியல் :			
முதுகுளத்தூர் முனிபுங்கவர்		...	5
கிருஷ்ண (மாச்சாரியர்): தூது!		...	14
சிறந்த மனிதர் மறைந்தார்		...	17
அட்டைப்பட விளக்கம்	ரஞ்ஜன் பி. ஏ., எம். லிட்.,	...	18
புத்தக விமர்சனம்		...	20
தொடர் கதைகள் :			
காமனை வென்ற கண்	சுகி	...	34
வள்ளியின் உள்ளம்	கு. ப. சேது அம்மாள்	...	67
கதைகள் :			
மூன்று தீபாவளிகள்	ஆர். எஸ். சுப்பிரமணியன்	...	27
அன்றே கொல்லும் . . .	சிங்காரவேலன்	...	51
மாடி அறை	ஜி. கே. பொன்னம்மாள்	...	57
கட்டுரைகள் :			
கங்கை கொண்ட சோழபுரம்	தி. சு. சனககுமாரி	...	23
நாடகம் :			
வகைக்கு ஒன்று	ராஜன்	...	79
சிறுவர் பகுதி			
பத்தில் ஒருவன்	என். எஸ். ராஜ்	...	85
போட்டித் திட்டம்		...	88
கலைப்பகுதி			
முதலாளி	ஆர். எஸ். எஸ்.	...	89
ஹலோ போலீஸ் ஸ்டேஷனா ?	எஸ். கே. மூர்த்தி	...	93

'புதுமை'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


27-6-'39
தேவர்
1957
தேவரைச்
சிறையிலடைத்த
அநியாயம்

புதுமை

ஆசிரியர் :
கோசல்ராம்.

நிர்வாக ஆசிரியர் :
P. X. ரங்கசாமி, B.A.,

சென்னை — ஐப்பசி–கார்த்திகை — நவம்பர்

முதுகுளத்தூர் முனிபுங்கவர் !

தலைப்பைப் பார்த்த உடனே புரிந்து கொள்வீர்கள், நாம் யாரைக் குறிப்பிடுகின்றோம் என்று.

ஜனநாயகம் மலர்ந்து, ஓட்டுரிமை பிறந்து, ஆண்டான்—அடிமை என்ற பாகுபாடு பறந்து, சமத்துவ சமுதாயம் உருவாகி வரும் வேளையிலே, நவகாளியை மீண்டும் தென்னகத்திலே உருவாக்கிய பெருமையை வரலாற்று ஏடுகளில் தனக்கு வகுத்துக்கொண்ட வள்ளலைத்தான் கூறுகின்றோம்.

சென்ற 'புதுமை' இதழிலே 'முதுகுளத்தூரிலே' என்ற நமது தலையங்கம் பலருடைய பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது.

நாம் அதிலே கூறியுள்ள கருத்துக்களையே மத்திய அமைச்சரும், நடுநிலை நின்று விருப்பு வெறுப்பின்றி முதுகுளத்தூர் பிரச்னையை ஆராய்ந்துள்ள திரு. தத்தார் அவர்களும், தெளிவுரையாகத் தந்துள்ளார்கள்.

இந்த நிலையிலே, முதுகுளத்தூர் பிரச்னையின் பின்னணியிலே பின்னிக்கிடக்கும் சில வரலாற்று உண்மைகளை வாசகர்கள் பார்வைக்கு வைத்து, அவர்கள் தீர்ப்பைக் கோருகின்றோம்.

கொலை ! கொள்ளை ! கொள்ளி வைப்பு ! மற்றும் பல கொடூரச் செயல்கள்...! நாடே நடுங்குகிறது முதுகுளத்தூர் சம்பவங்களைக் கண்டு.

அவைகளின் விளைவாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளைச் சிலர் பாராட்டுகின்றனர்... சிலர் வேண்டுமென்றே தூற்றுகின்றனர் அல்லது திரித்துக் கூறுகின்றனர்... இடையிலே சிலர் உண்மையான செய்தியைப் பிரித்துக் காண முடியாது தடுமாறுகின்றனர்...

இந்தக் கடைசி வகையினருக்காகவே இதை எழுதுகின்றோம். "உண்மை என்ன ?" என்ற கேள்வியை எழுப்பி விடை கூறவும் போகின்றோம். ஆனால் இந்த நிகழ்ச்சிகளோடு பின்னிப் பிணைந்து ஒன்றி நிற்கின்ற ஒருவர் முதுகுளத்தூர் முனிவர்...(அந்த முனிவர் என்ற பதப் பிரயோகம் விசேஷப் பொருள்

கொண்டது...மனத் தத்துவ ஆராய்ச்சியாளர் ஊன்றி ஆராய்ந்து பரம்பரையும் சூழ்நிலையும் எவ்வாறு சமுதாயத்திற்கே ஓர் பொது விரோதியை படைத்திருக்கின்றன என்று பார்க்க வேண்டிய தன்மை கொண்டது...) அவரைப் பற்றிய விமரிசனம், நாட்டிற்கு அவசர அவசியத் தேவை. அந்த விமரிசனம், பலரது கண் களைத் திறக்கும்.,. அது கருதியே இந்தச் சேவை... இனி, மேலே படியுங்கள் !

நீறணிந்த நெற்றி; உருட்டுவது உத்திராக்கதம்; சமய மேடைகளில் சங்க நாதம்; கோலமா முருகன் திருப்புகழ் பாடுவதே பணி—இது தான் முதுகுளத்தூர் முனிவரின் 'தவத்' திருக்கோலம்.

ஆலயங்களில், அறச்சாலைகளில், திருவிழாக் கால மேடைகளில், சிவனடியார் திருக்கூட்டங்களில், 'முருகா, முருகா' என்று அவர் நெக்குருக, நெஞ்சுருக, கண்ணீர் வார, கசிந்துருகச் சைவப் பிரசங்க மாரி பொழியும் போது, எந்த அடியார்தான் 'சிரக் கம்பம், கரக் கம்பம்' செய்ய மாட்டார் ?

"ஆகா...சைவம் பெற்ற செல்வம்...சிவனடியார் திருக்கூட்டச் சிங்கம்!...வேதாந்த கோளரி!...முதுகுளத்தூர் முனிவர்!...பசும் பொன், பசும் பொன்" என்று தானே 'அப்பாவி' அடியார்கள் பேசுவார்கள் !

சமய மேடையிலே, சன்னிதானத்தின் சங்க நாதம் இப்படி யென்றால், அரசியல் மேடையிலும் எப்படி என்று கேட்க எண்ணுகிற தல்லவா, உங்கள் இருதயம் ?

அரசியல் மேடைக்கு அவர் வகுத்துக் கொண்ட பாதையோ முற்றி லும் புதுமையானது; கருத்தோ, புரட்சிக் கருத்து...என்றோ மறைந்த மதிப்புக்கு உரிய தலைவரை (சுபாஷ் பாபுவை) இன்றும் இருக்கிறார் என்று சிறிதும் அஞ்சாது செப்பும் புதிய பாணி. இதுவரை வேறு எந்த நாட்டிலும், எந்தத் தலைவராலும் கையாளப்பட்டிராத, வரலாற்றிலே இல்லாத, சரித்திரம் சந்திக்காத சாதனை!...இது நகர மேடைகளில் அவரது 'வேடம்'...

நாட்டுப்புறங்களிலே, நல்ல உள்ளமும் ஆனால் கல்லாமையும் கொண்ட சாது மக்களிடம் பேசும் போது, அங்கோர் 'வேடம்'!...நகரத் திலே பேசுவதோடு பலப் பல புதிய சரக்குகள் அங்கே கையாளப்படும்...! அந்தச் சரக்குகளில் சில 'சாம்பிள்'களைக் கொடுப்பது அவசியமில்லை என்றே நினைக்கிறேன்—பொது மக்கள் அவற்றை நன்கு அறிந்தவர்கள் தான்—இருந்தாலும், அவற்றினுடைய 'சுவை' கூறுது மேலே செல்ல என்னைத் தடை செய்கின்றதே! இதோ...ஒன்றிரண்டு தருகின்றேன்...

"நேற்றிரவு என்னுடன் சுபாஷ் சந்திரபோஸ் வந்து சாப்பிட்டு விட்டுச் சென்றார்...!"

"கடந்த மூன்று மாதங்களாக அடியேன் கொரியா யுத்தத்திலே நேதாஜியின் உத்தரவுப்படி விமானப் படைத் தலைவராகப் பணியாற்றி குண்டுமாரி பொழிந்து வந்தேன்..."

"சென்ற ஆறு மாத காலமாக அடியேனை யாரும் பார்த்திருக்க முடியாது. ஏன் தெரியுமா? காஷ்மீரின் மீது பாயும் பாகிஸ்தான் படைகளை நிர்மூலம் செய்வதற்காக நேபாள எல்லையிலே காத்திருக்கின்ற ஐந்து லட்சம் இந்திய தேசீய ராணுவ வீரர்களுக்காக இமயமலை வழியாகப் பாதைகளை அமைக்கவே அடியேன் போயிருந்தேன்... !"

பார்த்தீர்களா...நாட்டிற்கு • எத்தகைய தொண்டு செய்கிருர் என்று? இந்த 'ஏர் மார்ஷலே'...'நவீன டென் சிங்கை'... 'இராணுவ மேதை'யைப் பயன்படுத்திக் கொள்ள நமது அரசாங்கத்திற்கு...... இல்லையே?

மேலே தரப்பட்ட உதாரணங்களெல்லாம் சாதாரணமானவை... இன்னும் பலப் பல...கற்பனை ஆழத்திலும், நெஞ்சுத் துணிவிலும் நேரும், நிகரும் இல்லாதவை.

"முதுகுளத்தூரிலே அடியேனுடைய வீட்டிலே அணுக் குண்டுகளை உற்பத்தி செய்கின்றேன்...இதோ...அடியேனுடைய மடியிலே கூட இருக்கின்றன. அடியேனைக் கைது செய்கின்ற நேரத்திலே, டில்லியிலே நேருவின் தலையிலும், சென்னையிலே காமராஜர் தலையிலும் இவை வீசப்படும்! என்ன எண்ணுகிறீர்கள்...? நேருவையும், காமராஜரையும் கடவுள் காப்பாற்றட்டும் என்ரு? இல்லையானுல்...ஈன்ஸ்டீனும்...ரூதர் போர்டும் 'ஐயா'விடம் தான் அணுக் குண்டு செய்யக் கற்ருர்கள் என்று நினைக்கிறீர்களா?

இல்லை. 'ஐயா'வைக் கைது செய்தும்—இன்னும் எங்கும் அணுக் குண்டு விழவில்லையே! ஒருவேளை அது என்ன...அவருடைய மடியில் இருந்தது? ஸ்ரீமான் விஷம மூர்த்தியிடம் (இது கீழ்ப்பாக்கத்தார் சூட்டிய திருநாமம்) கொடுத்துப் போனுரே!...அதுதான் ஐயா...உத்திராட்சக் கொட்டை என்று நினைக்கிறீர்களா?

எப்படியோ போகட்டும். உதாரணம் கூற வந்து எங்கேயோ வந்து விட்டோமே?

பொது மேடைகளில் கூசாது பொய்களை வீசும் தன்மையும், மனிதத் தலைகளைக் 'கத்திரிக்காய், வாழைக்காய்' என எண்ணும் மனப் பான்மையும் இவருக்கு எப்படி வந்தன?—இதல்லவா நமது ஆராய்ச்சி!

நீறணிந்த நெற்றிதான்! ஆனுல் நெஞ்சத்தில் நெறி இல்லை!

உருட்டுவது உத்திராக்கமே. ஆனுல் உருளச் செய்வது மனிதத் தலைகளை!

பாடுவது திருப்புகழ். செய்வது பாதகம். இது ஏன்? என்பதல்லவா நமது கேள்வி.

இந்தக் கேள்விக்கு விடை—'முதுகுளத்தூர் முனிவரின்' வரலாற்றைப் பின்புறமாகத் திருப்புவதிலேயேதான் கிடைக்கும்...அந்தப் பிரயாணத்தைத் தொடங்குவோம்...வாருங்கள். அதனுடைய முடிவிலே சந்தேகப் பிராணிகள் உண்மையை உணருவார்கள்...!

★

முதுகுளத்தூர் முனிபுங்கவர், அரசியல் அரங்கத்திலே இதுவரை இரண்டு வேடங்கள் தாங்கி யிருக்கிருர்.

அவர் நாட்டிற்கு அறிமுகமானது 'காங்கிரஸ்காரர்' என்ற முறையிலே. இன்றிருப்பதோ 'பார்வார்டு ப்ளாக்'கிலே.

இந்த 'அரசியல் பண்டாரம்' காங்கிரஸிலே இருந்தார்...அவர் சொற்படியே பார்த்தால், பெரிய தலைவராக இருந்தார்! தமிழ் நாட்டின் தலை விதியையே மாற்றக் கூடிய வன்மையோடு இருந்தார். பின் ஏன் காங்கிரஸை விட்டு ஓடினுர்! அதிலேதான் இருக்கின்றது இரகசியம்...

காங்கிரஸிலே இருந்தார். ஏன்? காங்கிரஸ் வெள்ளையரை எதிர்க்கும் ஸ்தாபனமாக இருந்தது...அது போராட்டப் பாசறையாக இருந்தது. அதன் பேரால் எது செய்தாலும் நாட்டு மக்கள் ஒப்புக்

கொள்ளக் கூடிய நிலை இருந்தது...அதனால் காங்கிரஸிலே இருந்தார்... காங்கிரஸின் பெயரால் தனது 'இரத்த வெறியை' அவ்வப்போது தணித்துக் கொண்டார்...

காங்கிரஸ் ஆளுங் கட்சியாக மாறியது...காங்கிரஸ் முன்பு பெற்றிருந்த சலுகை பெற்ற நிலையை எதிர்க் கட்சிகள் எடுத்துக் கொண்டன...எனவே அவரும் சட்டையை மாற்றினர்...காங்கிரஸைத் தூற்றத் தொடங்கினர்...காங்கிரஸ்காரராக இருந்த பொழுதும் சரி, கட்சி மாறிய பிறகும் சரி, இந்த அரசியல் வேடதாரி, பலாத்கார அடிப்படையில், அரசாங்கத்தையும், சட்டத்தையும், ஒழுங்கையும், துச்சமாக மதித்து, பிறர் உரிமைகளை, தன்னை எதிர்க்க முற்பட்டோர் உரிமைகளை நசுக்கி, அவர்கள் வாழ்க்கையையே நாசமாக்கி யிருக்கிறார் என்பது வெளிப்படையான உண்மை ... சப்-மாஜிஸ்ட்ரேட் பிரமநாயகம் பிள்ளையிலிருந்து......இமானுவேல் வரை எண்ணற்ற எலும்புக் கூடுகள் இன்று உயிர் பெற்றெழுந்தால், மீண்டும் கொலை செய்யப்படாமல் பாதுகாப்புத் தரப்படும் என்ற உத்திரவாதம் வழங்கப்பட்டால், இதைத் தான் எந்த நீதி மன்றத்திலும் தயங்காமல் கூறும். கொள்கை என்று இந்த முனிவருடைய இதயத்திலே எதுவுமே இடம் பெற்றது கிடையாது. அதற்கு மாருகக் கொலை வெறியைக் காண்கின்றோம். இலட்சியம் என்றால் இவருக்குத் தெரியாது. ஆனால் இரத்த வெறி இவருக்குப் புதியதல்ல.

தான் எந்த இனத்தின் தனிப் பெரும் தலைவன் என்று சொல்லிக் கொள்கிறாரோ அந்த இனத்தின் முன்னேற்றத்தைப் பற்றி என்றாவது ஒரு நாளாவது ஒரு மணித் துளியாவது எண்ணியிருப்பாரா என்றால் "இருக்காது...இருக்காது...இருக்கவே இருக்காது" என்று முக்காலும் மொழியலாம்.

அவர்களை ஏணியாகப் பயன்படுத்தி ஏற்றம் பெறுவதே அவர் திட்டம்...அவர்களும் பணிந்தார்கள்.

அன்றே அவரது நெஞ்சில் நஞ்சிருந்தது...சமுதாயத்திற்குக் கேடு விளைவிக்கும் அபாயகரமானவராக...'கிரிமினல்' மனமுடையவராக இருந்தார்!

ஆண்டவன் இயற்கையிலேயே அளித்திருந்த நெஞ்சுத் துணிவையும், அறிவுக் கூர்மையையும் அவர் தீய வழிகளிலே திருப்பி விட்டார்... இதை நாம் சொல்லவில்லை...**இதோ மதுரை அடிஷனல் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ. எம். ஏ. குத்தாலலிங்கம் பிள்ளை அவர்கள், 5-6-1940-ல் எச். சி. நிர். 20/1939 வழக்கிலே தனது தீர்ப்பிலே எழுதியிருப்பதைத் தருகின்றோம்....படியுங்கள்.**

"அவருக்கு அளிக்கப்பட்ட அறிவு தீக்ஷண்யமும், இயற்கையான சாமர்த்தியமும், தீவிர உத்திரவும் நேர் வழியில் செலுத்தப்பட்டிருந்தால் உண்மையான பெரிய மதிப்பை அடைந்திருப்பார்; ஆனால் அவரைக் கடந்து சொல்பவர்கள், ஆபத்திலிருந்து தப்பித்துப் போக முடியாத நிலைமையில், விசாரிக்கப்படத்தக்க எதிர்ப்புகளுக்கே, உ. மு. தேவர் உபயோகப்படுத்தி இருக்கிறார்; முடிவில் உ. மு. தேவர் வழக்கமாக, கிரிமினல் குற்றங்களைச் செய்து வருகிறார் என்றும் அல்லது சமாதான பங்கம் விளைவிக்கக் கூடியதாகவுள்ள குற்றச் செயல்களைத் தூண்டிக் கொண்டு வருகிறார் என்றும், அவர் ஜாமீன் இல்லாமல் நீடித்திருப்பது, அந்தச் சமுதாயத்துக்கு மோசம் சம்பவிக்கு மென்றும், மேலும் அவருடைய நன்னடத்தைக்காக, அவரிடம் ஒரு பத்திரம் எழுதி

வாங்க வேண்டியது அவசியமாய் இருக்கிறதென்றும் நான் தீர்மானிக்கிறேன். ஆகவே உ. மு. தேவர் பேரில் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட ஆரம்ப உத்திரவை உறுதி செய்து, 118-வது கி. பு. கோ. செக்ஷன் படி, ஒரு வருஷ கால நன்னடத்தைக்கு அவர் ரூ. 3000-க்கும், அதே தொகை உள்ள வேறு இரண்டு பேர்களும் ஜாமீன் பத்திரம் எழுதிக் கொடுக்கும்படி உத்திரவு செய்கிறேன்.''

'ஐயா'வினுடைய அரசியல் அஸ்திவாரமே இந்த வகையில் தான் உருவாகி யிருக்கிறது என்பதற்கு வேறு என்ன விளக்கம் வேண்டும்?

முதுகுளத்தூர் வட்டாரம் பிற்போக்கானது; கல்வி அங்கே காண முடியாத பொருள்; போக்கு வரத்து வசதிகள் இல்லவே இல்லை; வாழுகின்ற மக்கள் உழைப்பாளிகளான, ஆனால் சிந்திக்க முடியாத நிலையில் உள்ளவர்கள். இந்தப் பிற்போக்கான நிலையைப் பயன்படுத்திக் கொண்டார், நமது அரசியல் வேடதாரி. 'தடி எடுத்தவன் தண்டல் காரன்' என்ற நியதியை அடிப்படையாகக் கொண்டு, 'எடு பிடி'களாக ஓர் கூட்டத்தைச் சேர்த்தார்; அரசாங்கத்தை ஸ்தம்பிக்க வைத்தார்; சட்டமும், ஒழுங்கும், பொது மக்களின் பாதுகாப்பும் சமாதி நிலையை அடைந்தன. இந்தக் குழப்ப நிலையிலே தன்னைக் கோமானுக்கிக் கொண்டார்; மனிதத் தலைகளைச் சொக்கட்டானுக வைத்தாடி, சொந்த சுகத்தைப் பேணிக் கொண்டார் இந்தச் சூதாடி. ஜாதி வெறியைத் தூபமிட்டு, அந்தப் பூதத்தைக் கொண்டு தான் பூமானுக வாழ்ந்தார்...

அவருடைய சுயநல வளர்ச்சியில் அந்த வட்டாரத்தின் பொது நலம் சுட்டுச் சாம்பலாக்கப்பட்டது. லட்சக்கணக்கான மக்கள் தவித்தார்கள்...

அன்றிருந்த 'ஆள வந்தார்கள்' ஏன் என்று கேட்கவில்லை... அங்கே சென்ற அதிகாரிகளில், மனச் சாட்சி உள்ளவர்கள் அவதிப் பட்டார்கள்...கடமையைச் செய்ய முன் வந்தவர்கள் தொல்லைகளுக்கு உள்ளானுர்கள்...மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ குத்தாலலிங்கம் பிள்ளை தீர்ப்புத் தருவதைச் சுருக்கி இங்கே தருகின்ருேம்... உ. மு. தேவர் கொடுக்க வேண்டிய எஸ்டேட்டு பாக்கியை வசூலிக்க வந்தமைக்காக, உதவி தாசில்தார் திரு. சிதம்பர முதலியார், 19-12-33-ல் காலையே இழந்தார்!

நாகராஜ அய்யர் என்ற உதவி தாசில்தார் கடுமையாகத் தாக்கப் பட்டார். கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்டதற்காகச் செங்குளம் அய்யரப்பன் என்பவர் ஊரை விட்டே ஓடும்படியாகக் கொடுமைப் படுத்தப்பட்டார். ஜட்ஜ்மெண்ட் நகல் கேட்கப்பட்டதும் கொடுக்கப்பட வில்லை என்பதற்காகச் சப்-மாஜிஸ்ட்ரேட் பிரமநாயகம் பிள்ளை படு கொலை செய்யப்பட்டார் (6-6-38).

தனது சுக வாழ்விற்கு இடையூருக இருந்தவர்கள், சொந்தக் காரர்களாக இருந்தாலும், அவர்களையும் விட்டு வைக்கவில்லை, முதுகுளத்தூர் முனிவர்; தனது சொந்தக்காரியாகிய கருப்பாயி அம்மாளின் மேல் தனது காலிக் கூட்டத்தை (24-3-32-ல்) ஏவி விட்டார்!

தனக்கோ... தான் ஆதரித்தவர்களுக்கோ ஓட்டுக் கொடுத்து உதவாதவர்களை ஒடுக்குவது என்பது ஸ்ரீமான் தேவருக்கு இன்றைய நேற்றைய பழக்கமல்ல...தொன்று தொட்டு அவர் உதிரத்திலே ஊறிப் போன விஷயம்.

மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ குத்தாலலிங்கம் பிள்ளை தனது தீர்ப்பிலே எழுதுகிருர்: "சாயல்குடி ஆதித் திராவிடர்களுக்கு இழைத்த தப்பிதமான செயல்களைப் பற்றிக் கூறுவது அடுத்த சம்பவமாகும்.

அவர்கள் அவருக்கு ஓட் செய்ய மறுத்தால் அவர்களைக் குண்டு குளத்தில் அடைத்து வைத்து புரோ நோட்டுகள் அவர்களிடம் எழுதி வாங்க முயற்சித்தார். கமுதி சப்-இன்ஸ்பெக்டருக்குத் தகவல் வந்து, ஒரு பார்ட்டியுடன் அங்கு போய், அவர்களைக் காப்பாற்றினுர்கள். ஆதித் திராவிடர்கள் ஓட்டுச் செய்யாததற்காக (ஆதித் திராவிடர்களை) அடைத்து வைக்க வேண்டுமென்பது எதிர் மனுதாரின் (உ. மு. தேவரின்) தூண்டுதலில்லாமல் நடந்ததென்பது நம்ப முடியாத செயல்...!

எப்படி யிருக்கிறது பார்த்தீர்களா...'ஐயா'வினுடைய அரசியல் தர்மம்!

இப்படியே கொலைக்கு மேல் கொலையாக, கொள்ளைக்கு மேல் கொள்ளையாக வளர்ந்தன...இந்தச் சிவ நேசச் செல்வர் சிதறிய தலைகளின் பட்டியலை எழுத எழுத விரியும்! அது மாத்திரமா! நெல்லைக் கொள்ளையடித்த குற்றத்திற்காக (C C 11/29), 23-1-30-ல் ரூ. 30 அபராதம் போடப்பட்டவர், இந்த அடிகளார்!

இதன் விளைவாக, அடிஷனல் மாஜிஸ்டிரேட் தனது தீர்ப்பில் எழுதுகிருர்: "சர்க்கார் சிப்பந்திகளும் முதுகுளத்தூர் தாலுகாவில் தங்கியிருப்பது அல்லது போய் வருவது ஆபத்து என்றே உணர்ந்து இருந்தார்கள்.

"ஒரு கூட்டக் காவாலிகளை, அவருடைய கூட்டாளிகளாக அல்லது கையாட்களாக—தான் திரை மறைவிலிருந்து கொண்டு அவருடைய கட்டளையை நிறைவேற்றுவதற்கு—அவர் வைத்திருக்கிருர். அவருடைய செய்கைகளும், அவர்களும் அவ்விதம் இருப்பதால் அவரே முற்றிலும் பொறுப்பாளி. சமாதான பங்கத்தைக் கொண்ட குற்றங்களைப் புரிவதற்கோ அல்லது தூண்டி விட்டு அப்படிப்பட்ட குற்றத் தொழில்களை உண்டாக்குவதற்கோ ஸ்ரீ உ. மு. தேவர் வழக்கமாக யிருந்து வந்திருக்கிருர் என்று நான் நினைக்கிறேன்."

அந்தப் பகுதியிலே அதிகாரிகளாக இருந்தவர்கள் என்ன நினைத்தார்கள்?

முதுகுளத்தூர் தாலுகாவில் மூன்று வருஷ அனுபவமுள்ள டிப்டி சூப்பிரண்டெண்டு, உ. மு. தேவர் ஒரு கூட்ட மறவர்களை வைத்திருந்தார் என்றும், அவர் மோசமான பயங்கரமானவரென்றும், அவருடைய அபிப்பிராயத்தைக் கடந்து செல்பவர்கள் பத்திரமாக இருக்க முடியாதென்றும் ஆகவே அவருக்கு மிகவும் பயந்திருந்தார்கள் என்றும் சொல்லுகிருர்"

1936-க்கும் 1938-க்கும் இடையில் 18-மாதங்கள் சப் கலெக்டராகவும், கூட்டு மாஜிஸ்ட்ரேட்டாகவும் இருந்த கே. ஜி. மேனன் ஐ. ஸி. எஸ். அவர்களின் ஆதாரமும் இதைக் காட்டுகிறது. சிவகாசி சப்-கலெக்டராகச் சிலகாலம் இருந்தவரும் உ. மு. தேவர் வகையருப் பேரில் கேசு விசாரித்தவருமான 32-வது சாக்ஷியும், உ. மு. தேவர் பயங்கரமானவரென்றும், கொடூரமான நடத்தை உள்ளவரென்றும் அக்கிரமமான செயல்கள் செய்யும்படி மக்களைத் தூண்டி விட்டார் என்றும் சொல்லுகிருர். அந்தப்பகுதியில் 4-வருஷ காலமிருந்த கனம். கோபால சுவாமி ஐ ஸி. எஸ். அவர்களுடைய வாக்குமூலம் இன்னும் அதிகத் தெளிவைக் காட்டுகிறது. அவருடைய வாக்குமூலத்தின்படி, உ மு. தேவர், இயற்கையிலேயே உக்கிரமான நடத்தையுடைய கிளர்ச்சியான தேசியவாதியென்றும், பயங்கரமான பேச்சாளி என்றும்

தெரிகிறது. அவர் நீண்டகாலமாகச் செல்வாக்குள்ள ஒரு குடும்பத்திலிருந்து வந்தவர். இயற்கையான இந்த அனுகூலங்கள் எல்லாம் நாசஞ் செய்யப்பட்டன. மேலும் எதிர் மனுதார் ஆப்பநாடு, கொண்டையங் கோட்டை மறவர்களிடையே மிகவும் பயங்கரமான குற்றவாளியாக வளர்ந்து வந்தார். அந்த தாலுகாவின் மறவர்களின் பேரில், அவர் ஆதிக்கம் கொண்டிருந்தார். அவரைக் கடந்து செல்லும் எந்த நபரையும் அவர் துன்பப்படுத்துவார். அபிராமம் ஹிந்து முஸ்லிம்களிடையே தப்பபிப்பிராயம் நிலவும்படி வளர்த்தார். கனம் கோபால சுவாமி இன்னும் சொல்வதாவது: நியாய வழிக்கு அவரைப் போலீஸ் திருப்புவதில் முற்றிலும் தோல்வி அடைந்தது. இது இன்னும் அவருக்கு ஊக்கமளித்தது. முடிவில் எந்தச் சந்தர்ப்பத்திலும், மக்கள் பேரில் தாக்கப்படும் காரியங்களில் போலீஸ் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையில்லை! 1938ல் நிலைமை உண்மையில் அவ்விதமிருந்தது. !!

மேலே நாம் குறிப்பிட்டிருக்கிற அனைத்துமே நீதிபதி ஸ்ரீ எம். ஏ. குத்தாலலிங்கம் பிள்ளை எழுதிய தீர்ப்பிலே யிருந்து தரப்பட்டுள்ளவை......

அதுவும் யாருடைய ஆட்சியில் இது எழுதப்பட்ட தீர்ப்பு தெரியுமா ?

இன்றைக்குத் தவிர்க்க முடியாத நிலையிலே அராஜகத்தை ஒடுக்கத் தேவரை சிறையிலே தள்ளும்பொழுது, எந்த அரசியல் துறவியின் அபாயத்திலும், அடைக்கலத்திலும், ஊசலாடும் உயிரோடு உலாவும் கீழ்ப் பாக்கம், ‘அநீதி அநீதி’ என்று முதலைக் கண்ணீர் வடிக்கின்றதோ அதே பெரியார்கள் (ராஜாஜி) சென்னையிலே முதலமைச்சராக ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்தபோது எழுதப்பட்ட தீர்ப்பு. இன்றைய நிலைக்காக எழுதப்பட்டது அல்ல. நாடு விடுதலையடைவதற்கு முன்னரே எழுதப்பட்ட எச்சரிக்கைப் பலகைகள். எதிர் கால இருட்டை நினைத்து ஏற்றப்பட்ட சிவப்பு விளக்குகள். இந்த வழக்கு நடந்த காலத்திலேயே, 27-6-39-ல் கைதுசெய்யப்பட்டுச் சிலகாலம் • (ராஜாஜி மந்திரிசபை ஆட்சியில்) சிறையிலும் இருந்தார், ஸ்ரீ. உ. மு. தேவர்

அஹிம்சையிலே, அன்புத் தத்துவத்திலே, காங்கிரஸின் ஆணிவேரான காந்தீயத் தலைமையிலே சிறிதும் நம்பிக்கையில்லாமலே, முதுகுளத்தூரார் காங்கிரஸ் போர்வையிலே உலாவினார், “மெய்த்தவர்பலருண்டாம்; வெறும் வேடங்கள் பூண்டவர் பலருமுண்டாம்” என்று பாரதி பாடியதற்கொப்ப.

❖

சுதந்திரம் வந்தது. வந்தும் முதுகுளத்தூர் நிலைமை முன்னேறவில்லை. அதே பழைய இடிந்த வீடுகள்; ஓட்டைக் குடிசைகள்; கல்வியறிவில்லாத நிலை ; போக்கு வரத்து வசதியில்லாத, போலீஸும், சட்டத்தின் கரங்களும் எட்ட முடியாத பிற்போக்கு நிலை.

தேவரின் திருக் கூத்துக்களும் ஓயவில்லை ! அரசியலார் அறிந்தோ, அறியாமலோ அலட்சியமாக இருந்தார்கள்.

அந்த வட்டார அப்பாவி மக்கள் தன்னை ஆண்டவரின் அவதாரம் என்று போற்றும்படி உ. மு. தேவர் பிரசங்கம் செய்தார். அவருக்காக எத்தனை தலைகளை உருட்டவும் ஒரு சிலர் தயாராகப் பட்டார்கள். போலிச் சாமியார், தென்னாட்டு போஸானார்! காலிகளின் தலைவர் கர்மயோகி யானார்! பத்து ஆண்டுகளாக அரசாங்க நிலவரி சுமார்

ரூபாய் பத்தாயிரம் வரை கட்டாமல் ஏமாற்றி வந்துள்ள எத்தர், சித்தர் வேடந் தாங்கி நாடகம் நடித்தார்! இந்நிலையிலே தேர்தல்கள் வந்தன.

1952, 1957 பொதுத்தேர்தல்கள் ! நிலச்சீர்திருத்தங்களாலும். அபிவிருத்தி நடவடிக்கைகளாலும் தாழ்த்தப்பட்டவர்களிடையே ஏற்றம் பிறந்தது ; உணர்ச்சி ஒளிர்ந்தது; அவர்கள் காங்கிரஸ் பக்கம் சாய லானார்கள் ; காங்கிரஸால்தான் கதிமோட்சம் என்று கண்டு காங்கிரஸ் பெட்டிகளில் வாக்குரிமைச் சீட்டுகளை நிரப்பினார்கள். எதிர்ப்பையே இதுவரை கண்டறியாதவர்கள் இது கண்டு கொதித்தார்கள், முனிபுங்க வர் முனிவு கொண்டார். விளைவு...

17-4-57ல் சாயல் குடியில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் முனி புங்கவரின் சதி உருப் பெற்றது.... போலீஸ்காரர்கள் கையிலிருப்பது சோளத்தட்டை, துப்பாக்கி அல்ல என்ற நம்பிக்கைப் பாமரமக்களின் நெஞ்சிலே 'இன்ஜெக்ட்' செய்யப்பட்டது. அதனுடைய எதிரொலியாக, காங்கிரஸுக்கு ஓட்டுப் போட்டவர்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டார் கள். வீடுகளும், வைக்கோல் போர்களும் எரிக்கப்பட்டன. பயிர்கள் நாசமாக்கப் பட்டன : பருவமங்கைகள் சூறையாடப் பட்டார்கள். ஆடு களும், மாடுகளும் கடத்தப்பட்டன. வாழ்க்கை...தாழ்த்தப்பட்டவர் களின் வாழ்க்கை நரகமாயிற்று.

முதுகுளத்தூர் தாலுகா சேமநல சங்கக் காரியதரிசி தோழர் அருணகிரி 50 குற்றங்களைப் பட்டியலிட்டு அரசாங்கத்திற்குச் சமர்ப்பித் தார். பொதுமக்கள் சார்பில் நிவாரணம் வேண்டினர்; சட்டத்தையும் அமைதியையும் நிலை நாட்ட வேண்டினர். அந்த வேண்டு கோள்களும் குப்பைக் கூடையிலே போடப்பெற்றன. அரசாங்கம் எதுவும் செய்யாது என்ற நெஞ்சுரம் காலிகளிடையே வளர்ந்தது.

பொதுத் தேர்தலைத் தொடர்ந்து, இடைத் தேர்தல் வந்தது. காங்கிரஸ் தலைவர்கள் பலர் முதுகுளத்தூரில் வந்து தேர்தல் வேலைகளில் முனைந்தார்கள். அடி வாங்கி வாங்கி சலித்து வெறுத்துப் போயிருந்த காங்கிரஸ் ஆதரவாளர்கள் முதுகெலும்புகள் நிமிர்ந்தன ; தேர்தல் தீவிர மாக நடந்தது.

ஆனால் மீண்டும் காங்கிரஸ் தோற்றது; தோற்றதின் எதிரொலி யாக, காங்கிரஸிற்கு ஓட்டுப் போட்டவர்கள் மீண்டும் கொடுமைக்குள் ளாக்கப்பட்டனர். பரமக்குடியிலே கூட்டப்பட்ட சமாதான மகாநாட்டில் தன்மானத்தோடு பேசிய குற்றத்திற்காக, தலைமைப் பண்புகளைத் தாங்கி நின்ற பிழைக்காக, தோழர் இமானுவேல் சேகரனின் தலைவாங்கப் பட் டது. தொடர்ந்து அருங்குளம் நிகழ்ச்சி, இலஞ்சம்பூர், வீரம்பல் என்று தீ பரவியது. நாகரிகம் மறைந்து வெறித்தனம் கிளம்பியது. எழுதக் கூசும் செயல்கள் தாராளமாக நடைபெற்றன.

துப்பாக்கி தான் வைத்துள்ளோம் ; சோளத்தட்டை அல்ல ; என் பதை போலீஸ்காரர்கள் நிரூபிக்க, சட்டத்தையும் அமைதியையும் பாது காக்கச் சுடவேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது. உடனடியாகச் செய் திருக்க வேண்டிய ஓர் செயலை பல கருதி விடுத்து, பின்னர் தாமதமாக முதுகுளத்தூர் முனிவர் கைது செய்யப்பட்டார்.

இது நடந்த நிகழ்ச்சிகளின் தொகுப்பு—ஆனால் இந்த நிகழ்ச்சி களைப் பொது மக்கள் கண்களிலே படம் பிடித்துக் காட்டியவர்கள் தங் கள் வர்ணங்களை அதிலே பூசியிருக்கிறார்கள். இதுவரை கவனமாகப்

படித்து வந்திருப்பவர்கள் இந்தக் கலகங்களின் அடிப்படை தனி ஒரு மனிதனின் வெறிச்செயல்கள், அந்த வட்டார மக்களின் வேதனையாக இருந்து வந்திருக்கின்றன என்பதைப் புரிந்திருக்கலாம். குற்றவாளியின் குறுகிய மனப்பான்மை; ஆனால் வெளியே பேசுவதோ குவலயமே பொய், என்ற வேதாந்த விசாரம்! உதட்டிலே வெல்லம், உள்ளத்திலே கள்ளம்!

தனியொரு மனிதன் தலைமைக்காக அந்த இனமே தியாகம் செய்யப்படுகின்ற கோரக்காட்சி.

அரசியல் வாழ்வின் துவக்கம் முதல் இன்று வரை—**பிரமநாயகம் பிள்ளையைப் பிணமாக்கியது தொட்டு இமானுவேலை எமனுலகு அனுப்பியது முடிய—தனது இரத்த வெறிக்காக, தனது இனத்தையே காட்டிக் கொடுக்கிறார் இந்த முனிவர்! மறவர்கள் மாணிக்கங்கள். அந்த மாணிக்கங்களின் மேல் படிந்துவிட்ட தூசு அவர்கள் தலைவர். எய்தவனிருக்க அம்பை நோவதைப் போல, தவறான வழிகளில் நடத்திச் சென்று தம் மக்களைத் தவிக்க விட்டிருக்கும் தலைவனை விட்டு விட்டுத் தொண்டரைக் குற்றஞ் சாட்டுவது முட்டாள்தனமாகும்.**

சிங்க மறவர் கூட்டம்; ஆனால் அதைச் செலுத்திய தலைவன் வேடதாரி; விஷம எண்ணம் படைத்தவர்.

'ஐயாவைக் கைது செய்தால் அணுக்குண்டுகள் விழும். தேவர் மகனைக் கைது செய்தால், இந்திய தேசிய இராணுவம் போர் தொடுக்கும்' என்று நம்பியவர்கள் இன்று தெளிந்து விட்டார்கள். தவறான தலைவனை ஆதரித்தோமோ என்று தயங்குகிறார்கள்.

எங்கே அணுக் குண்டு? எங்கே இந்திய தேசிய ராணுவம்? எல் பொய்யாய்ப் பழங்கதையாய்ப் பலிக்காத கனவாய்ப் போய் விட்டனவே என்று வெதும்புகிறார்கள்.

போலீஸ்காரர்கள் கையில் வைத்திருப்பது துப்பாக்கிகள்தான்; சோளத் தட்டைகள் அல்ல என்பது நிதரிசனமாகி விட்டது.

இந்த நிலையிலே, அவர்கள் நெறிக்கு வந்துதானே ஆக வேண்டும். தவறான தலைமையைத் தூக்கித் தள்ள வேண்டிய அவசியம் வந்து விட்டது.

இனி விரைவில், மறவ குல மாணிக்கங்கள் மீது படர்ந்துள்ள தலைமைத் தூசி மறைந்து விடும். ஒளி பிறக்கும். வாழ வழியும் பிறக்கும். தாழ்த்தப்பட்டவரும், மறவர்களும் வேறு என்ற 'வீறு' போய், ஒன்று என்ற உண்மை உதிக்கும்; சமரச மனப்பான்மை, சகிப்புத்தன்மை, சமாதான சுக வாழ்வு தோன்றும்.

ஆனால்...

இதை நடைமுறையிலே நடைபெற விடுவார்களா? 'கல்லூரி விடுதி'க் கூட்டங்கள்...

ஊர் இரண்டு பட்டால்தானே இந்தக் கூத்தாடிகள் வாழ முடியும்? தலைகள் உருண்டு மக்கள் தவித்தால்தானே, இவர்கள் பாண்டிச்சேரியிலே போய்க் குடித்துக் கூத்தடிக்க நிதி பிறக்கும்? அமைதி வந்து விட்டால் இவர்கள் என்ன ஆவது...? உண்மையைத் திரித்துக் கூறி இவர்கள் உலவ, இவர்களுக்கு விளம்பரம் கொடுத்துப் பத்திகளை நிரப்பும் பத்திரிகைகளின் பிழைப்பு என்ன ஆகும்?

தனி ஒருவரின் தவறான போக்கால் ஏற்பட்ட சண்டையை, கண் வைத்துக் கால் பொருத்தி, "காங்கிரஸின் வெறி ஆட்டம்; கட்டி வைத்துச் சுடுகிறார்கள்; மறவர்களை ஒடுக்குகிறார்கள்; ஒரு தலைப்

பட்சமாக நடத்துகிறார்கள்'' என்று வர்ணம் பூசும் இந்த "ஸ்டண்டு மாஸ்டர்கள்" இனி என்ன செய்யப் போகிறார்கள்? இவர்கள் இலட்சியமே, கலகம் பரவ வேண்டும்; பக்கத்து மாவட்டங்களிலும் பரவ வேண்டும்; அரசாங்கம் நிலை குலைய வேண்டும்; பிறகு நாற்காலியில் தாங்கள் அமர்ந்து...இதுதானே இவர்கள் கனவு...பாவம்... ஏமாந்து போனார்கள்.

ஆகவேதான் இந்த ஜனநாயகத்தின் அரிச்சுவடி தெரியாத அன்பர்களுக்குச் சொல்லுகிறோம்: இந்த முறையும் நீங்கள் தோற்று விட்டீர்கள். வெற்றி கிடைத்திருப்பதைப் போல நீங்கள் எண்ணி இறுமாந்திருந்தால் மாற்றிக் கொள்ளுங்கள் உங்கள் கருத்தை. அல்லது விரைவிலே நீங்களே உணருவீர்கள்!

இதுதான் முதுகுளத்தூர் முனிவரின் சாபக்கேடான சரித்திரம்.

'ஒரு பொய்யைப் பல முறை அழுத்திச் சொன்னால் அது மெய் போல ஒலிக்கும்' என்றான் ஷேக்ஸ்பியர்.

அது நூற்றுக்கு நூறு இந்த வரலாற்றில் உண்மையாகப் பட்டுள்ளது. சுயநலம் படைத்த அரசியல் சூதாடிகள், தாங்கள் வளர ஏழை மக்களைத் தவிக்க விட்டுள்ள சோக வரலாறு இது.

இந்தக் கலவரங்களின் உண்மையான அடிப்படைக் காரணத்தைக் காண வேண்டும் என்று வேதனையிலே வெதும்பிச் சொன்னார் பிரதம மந்திரி நேரு. காரணத்தைக் கண்டுபிடித்து, குற்றவாளிகளைக் கிருமிகளைப் போல நசுக்க வேண்டும் என்று முழக்கமிட்டார் உள்நாட்டமைச்சர் பந்த். இந்தக் கோரக் காட்சிகளை உருவாக்கிய குற்றவாளிகளை ஆதார பூர்வமான சாட்சியங்களோடு மக்கள் மன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் ஏற்றியுள்ளது 'புதுமை'! மத்திய அரசியலாரும், சென்னை அரசியலாரும் வேண்டுவன செய்யட்டும்! சமுதாயத்தின் வேரை அரிக்கும் இந்தச் சண்டாளக் கிருமிகள் ஒழிக்கப்படட்டும்!

இனியும் இந்தக் கோரக் காட்சிகள் தமிழகத்தில் நடைபெறாது தடுக்க, பொது மக்களே! பொறுப்புள்ள தலைவர்களே! 'புதுமை' வாசகர்களே! வழி வகுத்துக் காட்டுங்கள்!

உண்மைகள் இவ்விதமிருக்க இந்த மகானுபாவருக்காக சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகின்றன சில அரசியல் கக்ஷிகள். இவர்களின் செயல் பற்றிநாம் அழுவதா? சிரிப்பதா?

கிருஷ்ண (மாச்சாரியார்) தூது!

'இந்தியா தோற்றால், ஆசியா அழிந்துவிடும்'... இது மகாத்மாவின் மணிமொழி.. அரசியல் விடுதலைக்காக நாம் போராடிய காலத்தில் அந்தப் போராட்டத்தின் வெற்றி, தோல்விகளைப் பற்றிய விளைவு குறித்து கூறப்பட்ட விவேகம் நிறைந்த தீர்க்க தரிசனம்.

அரசியல் விடுதலைப் போராட்டம் முடிந்து, பொருளாதார விடுதலைக்காகப் போராடி வரும் தற்கால நிலைக்கும் அந்த உரை பொருந்தும்!

இந்தியா தோற்றால், ஆசியா அழிந்துவிடும். இந்தியாவின் ஜனநாயகப் பாதையா, செஞ் சீனாவின் பொதுவுடைமை வழியா என்பதை ஆசிய நாடுகள் நிர்ணயிக்கின்ற முக்கிய

மான கட்டத்தில் ஏழை நாடுகள் புதிதாக விழிப்பும், உணர்ச்சியும் பெற்ற சுதந்திரக் குழந்தைகள் உள்ளன. இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி பெற்று, பாலைவனம் சோலைவனமாகி, தொழில் பெருகி, வளம் கொழித்து, ஜனநாயக சோஷலிஸ சமுதாயம் மலர்ந்தால், இந்தியாவின் வழியிலே ஆசிய நாடுகள் நிற்கும்... இல்லையென்றால்... 'கம்யூனிஸம்... சோவியத் ரஷ்யாவிலிருந்து நேரடியாக ஐரோப்பாவிற்குப் பரவாது... ஆனால் பீகிங், கல்கத்தா, கெய்ரோ வழியாகத்தான் லண்டனை அடையும்' என்ற லெனின் வாக்குப் பலித்துவிடும்.

இந்த சரித்திரம் முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பத்திலே இந்திய அரசாங்கத்தினர் எவ்விதமாகவும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற உறுதி கொண்டுள்ளார்கள்.

பற்றுக்குறையை ஈடு செய்ய பல புதிய வரிகள், தேர்தல் காலத்திலே பலரால், பலமுறை முதலாளிகளின் கையாள் என்று வர்ணிக்கப்பட்ட திரு. கிருஷ்ணமாச்சாரியாரால் முதலாளிகள் மீதே கடுமையாக விதிக்கப்பட்டன. (போடப்பட்ட வரிகள் அனைத்தும் நியாயமானவை அன்றோ அல்லது வேறுவிதமாகவோ, அரசாங்க ஆதரவு அல்லது எதிர்ப்பு விவாதத்தில் நாம் ஈடுபட இப்போது விரும்பவில்லை!) சிக்கன நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டன. இருந்தாலும்கூட, கடுமையான அயல் நாட்டுச் செலவாணிப் பற்றுக்குறையும், பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டுள்ளன...

அதேபோல இதே நிலையிலே தனது பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படை இட்ட பொழுது ருஷ்யா இருந்தது... அந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக, அமெரிக்காவிடம் கடன்பெற்றது... அமெரிக்கப் பணத்தில், அமெரிக்கத் தொழில் நுணுக்க உதவியில் 'நீப்பர்' அணைக்கட்டு உருவாக்கப்பட்டது என்பது வரலாற்று உண்மை. பாரத அரசாங்கம், நிதி அமைச்சர் திரு. கிருஷ்ணமாச்சாரியாரை அயல் நாடுகளுக்குக் கடன் கேட்டு அனுப்பியது. வனவாசத்தை முடித்து, அஞ்ஞான வாசத்தையும் நிறைவேற்றிய பிறகு உரிமையைக் கோரி துரியோதனனிடம் பாண்டவர்கள் கிருஷ்ணபரமாத்மாவைத் தூது அனுப்பினார்கள்!

அது பாரதக் கதையில் நடைபெற்ற நிகழ்ச்சி. இன்று, அந்நியனை வெளியேற்றி அரசியல் சுதந்திரம் பெற்றபின், ஜனநாயகமா? கம்யூனிஸமா? என்ற கேள்விக் குறியோடு நிற்கின்ற ஆசிய நாடுகளின் நாயகமான பாரதம், தனது நிதி அமைச்சரை, ஐசுவரிய அமெரிக்காவிடம் கடன் கேட்டுத் தூது அனுப்பியது!

இது இன்றைய வரலாற்றின் முக்கியமான சம்பவம்!

ஆனால் 'கிருஷ்ணன் தூத'ப் பாடிப் பணியும் பரம பாகவதர்கள், 'கிருஷ்ணமாச்சாரியார்'

தூதை ஏனோ கிண்டல் செய்கிருர்கள்!

'வியாபாரி கிருஷ்ணமாச்சாரியார், இந்தியாவை விற்றுவிடுவார்' என்று எழுதினர் ஓர் அரசியல் அஞ்ஞாதவாசி! இந்தியாவை விற்க கிருஷ்ணமாச்சாரியாரை விட்டுவிட்டு இருப்பார்கள் இந்த நாட்டு மக்கள் என்று எவ்வளவு இலேசாக நினைக்கிருர் பாருங்கள். அடாடா! நம் நாட்டு மக்களையும் தேச பக்தர்களையும் எவ்வளவு குறைவாக இந்த மேதை மதிப்பிட்டிருக்கிருர். யார் இந்த கிருஷ்ணமாச்சாரியார்?

"கோயில் பூசை செய்வோர்—சிலையைக்
கொண்டு விற்றல்போலும்,
வாயில் காத்து நிற்போர்—வீட்டை
வைத்திழத்தல் போலும்"

செய்துவிடுவாரா இவர்? நாட்டை விற்றுவிட இவருக்கென்ன உரிமை? வாயில் காப்போன் வீட்டை விற்கமுடியுமா? கோயில் பூசை செய்வோன் சிலையை 'ஏலம்' போட முடியுமா? இதையெல்லாம் உண்மையான தேசபக்தியோடு அந்த மேதை சிந்தித்து இருக்கலாமே?

அமெரிக்க உதவி பெற்றதற்காக ருஷ்யா சுதந்திரத்தை இழந்துவிடவில்லையே! அதை யாவது இவர்கள் எண்ணிப் பார்த்தார்களா?

சரி; அதாவது போகட்டும்; "கொள்கையை விட்டுக் கொடுக்கமாட்டோம், கடனுக்காக" என்று திரு. கிருஷ்ணமாச்சாரியாரே கூறியதை இவர் பார்க்கவில்லையா? படிக்கவில்லையா? நிதி கேட்டு ஒரு புறம் நிதி அமைச்சர் சுற்றுப் பிரயாணம் செய்ய, அதே நாட்டில் திரு. கிருஷ்ண மேனன் கொள்கை முழக்கம் செய்கின்ருரே, அது கூடவா இவருக்குத் தெரியவில்லை?

ஜப்பானிய நாட்டில் வல்லரசுகளுக்குச் சாட்டை கொடுத்து வரும் பிரதம மந்திரியின் பிரசங்கங்களை இவர்கள் ஏன் புறக்கணிக்கிருர்கள்? வேண்டுமென்றே இந்த விஷமமா?

'கண்ணை விற்றுத்தான் சித்திரம் வாங்கினல்
கைகொட்டிச் சிரியாரோ' என்ற வாக்கை நூற்றுக்கு நூறு அடிப்படையாகக் கொண்டு, கடன் கேட்பதற்காக முதுகை வளைக்காமல், கொள்கையைத் திரிக்காமல் நிமிர்ந்து நிற்பதை ஏன் இந்தக் கோணல் மதி படைத்த கிழ்ப்பாக்கம் கூட்டம் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறது?

இவர்கள் இவ்வளவு கோபமடைய டி. டி. கே. என்னதான் சொல்லிவிட்டார்?

"இந்தியாவில் அந்நிய மூலதனத்தை வரவேற்கிருேம். அவர்களுக்குப் பூரண பாதுகாப்புத் தரப்படும். இந்திய மார்க்கெட் அவர்களுக்குத் திறந்திருக்கிறது", என்றுதானே சொன்னர்.

“நல்ல பொருள், நீங்கள் எடுத்துக்கொள்ளும் தகுதி வாய்ந்த பொருள்” என்று அவர்களே தங்கள் பத்திரிகையில் விளக்கம் தந்துள்ளார்கள்.

அந்த நல்ல பொருள் எது? இந்திய மார்க்கட் தவிர இந்திய சுதந்திரமல்லவே?

ஆனால் இந்த மேதாவிகளின் மேதாவிலாசமோ குள்ளநரித்தனமான குறுக்கு வழியிலே உண்மைகளைத் திரிப்பதற்குப் பயன்படுகின்றது!

இன்று டி. டி. கே. யின் தூதின் பலன் எதுவாகவு மிருக்கலாம்.

எனினும் தூதின் பயன் அவர்கள் திட்டியது போலல்லாது பாரதத்தின் நிலை பற்றி பிற நாட்டினர் நன்கு புரிந்து கொள்ள ஒரு நல்ல வாய்ப்பு அளித்தது குறித்து டி. டி. கே. யின் திறமையை நாம் பெரிது பாராட்டுகிறோம்.

சிறந்த மனிதர் மறைந்தார்!



சென்னை கவர்னர் திரு ஏ. ஜே. ஜான் அவர்கள் திடீரென காலமான செய்தி நம் நாட்டின் மக்களை துக்க சாகரத்தில் ஆழ்த்திற்று. சென்னை மாகாணத்தின் கவர்னராக அவர் பதவியேற்று சில மாதங்களே ஆகின்றன. எனினும் அவருடைய உயர்ந்த குணத்தால் மக்கள் யாவருடைய உள்ளத்திலும் நிரந்தர இடம் பெற்றுவிட்டார். சிறந்த தேச பக்தர். அடக்கமே உருவானவர். அன்பு உள்ளம் படைத்தவர். தெய்வ பக்தி மிகுந்தவர். இந்த நல்ல மனிதரை நாம் இழக்க நேர்ந்தது நம் அதிர்ஷ்டக் குறைவேயாகும். அவரது பிரிவாற்றாமையால் வருந்தித் தவிக்கும் அவரது மனைவியாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எந்தச் சமயத்திலும் மரணம்என்பது ஒரு பாக்கியமாகும். ஆனால் சத்தியமென்னும் இலட்சயத்திற்காக மடிவது இரட்டிப்புப் பாக்கியமாகும். மரணம் என்பது பேயல்ல, வேதனையிலிருந்து மீட்கும் உண்மையுள்ள நண்பனே ஆகும்.

கரு மேகத்தைக் கண்டு மயிலினங்கள் ஆடுகின்றன. பாம்புகள் மகுடியைக் கேட்டு ஆடுகின்றன. பசுவினங்கள் குழலோசையைக் கேட்டு ஆனந்தத்தில் அசைந்தாடுகின்றன. மிருக—பக்ஷிகள் யாவும் இயற்கையில் நர்த்தனம் செய்கின்றன.

ஆதியில் மனிதன் பூமியில் ஜனித்ததும்...அவனுக்குப் பாஷா ஞானம் உண்டாகி விடவில்லை. அவனும் மற்ற மிருகங்கள், பட்சிகள் போல் தன் சந்தோஷத்தையோ, கஷ்டத்தையோ வெளிக்காட்டக் கத்திக் கொண்டும், உறுமிக் கொண்டும் பலவிதமாகச் சப்தமிட்டுக் கொண்டுமிருந்தான். படிப்படியாக அந்தச் சப்தங்களிலிருந்து பாஷையை உண்டாக்கிக் கொண்டான். ஒரு நிமிஷம் யோசிப்போமானால், மிருகத்தைப் போல் வாழ்ந்த மனிதன் பாஷா ஞானம் பெற்று, பல அரிய கலைகளை உண்டாக்க எவ்வளவு ஆயிரக் கணக்கான வருஷங்கள் கடந்திருக்க வேண்டுமென்றும், அதற்காக மனிதன் எப்பேர்ப்பட்ட கஷ்டங்களை யெல்லாம் அனுபவித்திருக்க வேண்டுமென்றும் அனுமானிக்கலாம்.

மனிதனுக்குச் சந்தோஷமிருந்தால் சிரிப்பதும், கூத்தாடுவதும், கோபம் மிகுந்தால், பரபரப்புடன் பேசுவதும், நடப்பதும் அல்லது பலமாகச் சப்தமிடுவதும் இயற்கை. அதே மாதிரி ஒவ்வொரு விதமான அவஸ்தையில் இருக்கும் போது, மனிதன் வெளிப்படையாக ஏதாவது சேஷ்டைகள் செய்வது இயற்கை.

மனிதன் குதூகலமான நிலையிலிருக்கும்போது தன்னிஷ்டப்படி கூச்சலிட்டிருக்கலாம். சில சமயம் அவனை யறியாமல் அந்தச் சப்தங்கள் அவனுக்கு இனிமையாக இருக்கவே அவைகளைத் திரும்பவும் திரும்பவும் எழுப்பி யிருக்கலாம். மேலும் தன் சிநேகிதர்களை அழைத்து அவர்களிடமும் அதே மாதிரி கூச்சலிடும்படிக் கூறியிருக்கலாம். அவர்களும் அதை இனிமையாகக் கருதி, கும்பலாகச் சேர்ந்தாற் போல் கூச்சலிட்டிருக்கலாம். இவ்வாறு ஒருவாறுக மட்டமான பாட்டு (இசை) முதன் முதலாக உண்டாகி யிருக்க வேண்டும்.

போகப் போக, இந்தச் சப்தங்களில் உயர்வு தாழ்வுகள் ஏற்பட்டு, 'ஸ்தாயி'களையும், ஸப்த ஸ்வரங்களையும், ஸ்வரங்களின் பேதங்களையும் அறிந்திருக்கலாம்.

ஒவ்வொரு விதமான நிலையில் இருக்கும் போது மனிதனுக்கு வெளிப்படையாகச் சேஷ்டைகள் செய்வது இயற்கையென்று ஏற்கனவே கண்டிருக்கிறோம். சந்தோஷம் மிகுந்ததும் மனிதன் கூச்சலிட்டான்; குதித்துக் கூத்தாடினான்; கைகளைக் கூத்துக்குச் சரியாகக் கொட்டினான். அவன் குதித்தது கூத்தாக மாறியது; அவன் கூச்சலிட்டது இசையாகவும், அவன் கைகளைக் கொட்டியது தாளமாகவும் மாறின. இசை, கூத்து, தாளம் இம் மூன்றையும் மனிதன் தானறியாமலேயே கண்டுபிடித்து விட்டான்.

கூத்து பின்வருமாறு வளர்ந்தது.

(1) தன்னையும் மீறிய மிகுந்த ஓர் உற்சாகத்தினால் ஒருவன் ஆடியது.

(2) கூத்தாடுபவனும், அவனைக் கண்டு பலரும் சேர்ந்து ஆடி அனுபவித்தது.

(3) கூத்தாடுபவன் தன் சாமர்த்தியத்தினால் சபையோர்களின் மன நிலையைக் கவர்ச்சி செய்து நவரஸங்களையும் அவர்கள் அனுபவிக்கும்படிச் செய்தது. மூன்றாவதாகச் சொல்லிய கூத்தே மனித நாகரீகத்துடன் போட்டி போட்டுப் பண்பட்டது. நாளாக நாளாக நாட்டியமெனவும் பெயர் பெற்றது.

நாட்டிய வேகத்தை முதன் முதலில் பயின்றவர் பரத முனிவர் என்று கருதப்படுகின்றது. பரதர் தாம் கற்றவைகளை ஒன்று சேர்த்து சாஸ்திரமாக முனிவர்களுக்கும் மற்றவர்களுக்கும் போதித்தார்.

இன்று நம் நாட்டில் பரதநாட்டியம் உச்ச நிலையை அடைந்துள்ளது. அழகுள்ள அணங்குகளும் ஆடவர்களும் அதைப் பயின்று நம் நாட்டின் தலை சிறந்த கலையாக அதை வளர்த்து வருகின்றனர். பரதநாட்டியம் ஆடும் பெண்ணின் ஒரு நிலையைத்தான் அட்டைப் படம் விளக்கிக் காட்டுகின்றது.

—ரஞ்சன், பி. ஏ., எம். லிட்.,

[அடுத்த இதழிலிருந்து திரு ரஞ்சன் அவர்கள் பரத நாட்டியத்தைப் பற்றித் தொடர்ந்து பல கட்டுரைகள் 'புதுமை'யில் எழுதுவார்கள்.]

வளர்க கைத்தறி ! வாழ்க அவர் சமுதாயம் !

பசவேஸ்வரர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சொஸைட்டி லிட்.

No. K. 1587

சுக்கிரவாரப்பேட்டை :: கோயமுத்தூர்.

தலைவர் : G. E. சின்னதுரை, B.Sc., M.C.

துணைத்தலைவர் : M. மருதாசலம் செட்டியார்

BASAVESWARAR

எங்களிடம் 100 நெ. நூலினால் கண்கவரும் கலர்களில் தயாரிக்கப்பட்ட எமது "பசவேஸ்வரர்— —சேலைகளையே" வாங்குங்கள்.

எல்லா கோ-ஆப்டெக்ஸ் எம்போரியங்களிலும் எமது எஜண்டுகளிடமும் கிடைக்கும்.

M. N. பொன்னுசாமி செட்டியார்
Secretary.

ஆணியும் நிமிஷமும்—
[முதியோர் கல்வி மடல் 1]
கண்டு கற்போம்—
[முதியோர் கல்வி மடல் 5]

சென்னைக் கல்வித்துறை வெளியீடு—விலை ஒரு அணா.

முதியோர்கள் கல்வி கற்று பயன் பெற எழுதப்பட்டிருக்கும் இவ்விரண்டு புத்தகங்களும் எளிய தமிழ் நடையில் எழுதப் பட்டிருப்பது மன்றி, வாழ்க்கையில் சில அரிய குணங்களை மனிதன் உடையவனாயிருக்க வேண்டுமென்ற உண்மைகளையும் போதிக்கின்றன. கவர்ச்சியான அட்டை. பெரிய எழுத்துக்கள். வரவேற்புக்குரிய அம்சங்கள்.

தம்பதிகள் சுகமாய் வாழ்க !

[ஆசிரியை : சீதாலக்ஷ்மி அம்மாள். வெளியிட்டோர் : ராமன் பதிப்பகம், சென்னை-17. விலை ரூ. 1.25]

இல்லற இன்பத்தில் ஈடுபடும் புதுமணத் தம்பதிகளின் வாழ்க்கைக்கு வேண்டிய பல கருத்துக்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. மணவாழ்க்கைக்கு முன்னும், பின்னும் இரு பாலருக்குமுள்ள உடல் வனப்பு, தாய்மை, மகப்பேறு போன்ற விஷயங்கள் வெகு அழகாக விளக்கப்பட்டுள்ளது. இந்நூல் ஒவ்வொரு இளந் தம்பதிகளுக்கும் இன்றியமையாததாகும்.

—சுப்பு

மணமாலை

[ஆசிரியர் : ஆர். எஸ். மணி. பிரசுரம் : வெண்முகில் பதிப்பகம். தி. நகர். சென்னை-17 விலை ரூ. 1.25]

இலக்கணத்தில் நவரஸங்கள் என்று சொல்வார்கள். அந்த நவரஸங்களும் இந்த மணமாலை என்னும்புத்தகத்திலுள்ள ஒன்பதுகதைகளிலும் மிளிர்கின்றன. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு கோணத்தில் சென்று ஒரு நல்ல கருத்தை போதிக்கும் முறையில் அமைந்திருக்கிறது. இதைத் தாராளமாக புது மணத் தம்பதிகளுக்கு வாங்கி வழங்கலாம். இப்பொழுது இரண்டாம் பதிப்பாக வெளிவந்திருக்கிறது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

—கு. ப. சேது அம்மாள்.

புஷ்பபாணம்

[எழுதியவர் எம்.ஜே. ராமலிங்கம் (ரூலி) வெளியிட்டோர்: ஒளவை நூலகம். விலை ரூ.1-50]

மறு மலர்ச்சி எழுத்தாளர்களில் அமரர் எம். ஜே. ராமலிங்கமும் ஒருவர். அவருடைய புஷ்பபாணம் என்ற இந்தத் தொகுதியில் உள்ள நான்கு கதைகளும் நாலுவித சுவை

யோடு கூடியவை! புஷ்பபாணத்தி லுள்ள நாராயணய்யரும், அனுகூல தாம்பத்தியத்திலுள்ள பரமேசுவர னும், பார்வதியும் வாழ்க்கையில் நாம் காணும் குணசித்திரம் படைத்த பாத்திரங்கள்! கதைகள் தெவிட் டாத சுவையுடையவை.

சிறு கதைக்கு விற்பனை கிடை யாது என்ற எண்ணம் வெகுவாகப் பரவியிருக்கிறது ஆனால் அது தவறு; நல்ல விஷயங்களுக்கு என்றுமே செல்வாக்கு உண்டு என் பதைப் பதிப்பகத்தார் நிரூபித்திருக்கி ருர்கள்.

கு. ப. சேது அம்மாள்.

பாலர் பாடல்

[ஆசிரியர் : கோசுதா. கிடைக்கு மிடம்: வள்ளுவர் பண்ணை, 140, விவேகானந்தா மேடு, கொழும்பு. விலை 50 சதம்.]

இந் நூலில், கவி மன்னர்கள், சிந்தனையாளர்கள், பிற இலக்கியப் படைப்பாளர்கள் ஆகிய 55 மேலை நாட்டு மேதைகளின் வாழ்க்கைக் குறிப்புக்கள் குழந்தைகளுக்குக் கவிதைகளாகத் தரப்பட்டுள்ளன. பிற்காலத்தில் பல துறை அறிஞர் களாக வரவிருக்கும் இளஞ் சிருர்க்கு இந்நூல் மிக்க பயனுடை யது. அவர்களது பிஞ்சு உள்ளங்களில் இலட்சியத் தடங்களைப் பதிப்பிக்க இது ஓரளவு துணை செய்ய வல்லது. எனினும் குழந்தைகள் உள்ளக் களிப்போடு பாடும் பல சந்தங்களில் இப்பாடல்கள் அமைந்திருந்தால் இன்னும் மிக நன்ருக இருந்திருக் கும். நண்பர் கோசுதா இத்தகைய முயற்சிகளில் மேலும் ஊக்கம் செலுத்தி, குழந்தை இலக்கியத் தைச் செழுமைப்படுத்துவார் என எதிர்பார்க்கிருேம்.

கவிக்குயில்.

கிடைக்கப் பெற்ருேம்.

1. உதிர்ந்த ரோஜா: H. R. சென்னகிருட்டினன் எழுதி யது. பதிப்பாளர் G. R. G. பாலன். விலை ரூ. 0-2-0. விற்பனையாளர்: T. பொன்னு சாமி, செவ்வாய்ப் பேட்டை, சேலம்.

2. வாக்குறுதி தவருத வைஸ்ராய்: திருமறைதாசன் எழுதியது. விலை ரூ. 0 3-0 வெளியிட் டோர்: 15/5, ஜமேதார் தெரு. கோயம்புத்தூர்.

3. உயிர் சித்திரம்: சிறு கதைகள் தி. ச. வாசுதேவன் எழுதியது. விலை ரூ. 0-8-0 வெளியிட் டோர்: பைந்தமிழ்ப் பண்ணை. 180, பெரிய கம்மாளத்தெரு, திருச்சி.

4. மார்தட்டும் பெருமான்: ஆசி ரியர் K. S. சுப்பிரமணியன். வெளியிட்டோர்: முருகன் திரு வருட் சங்கம், 28, சாமிபிள் ளைத் தெரு, சென்னை-5.

MADRAS CITY AGENT
The Madras News Agency.
13, Narasingapuram Street.,
MOUNT ROAD. Madras-2

32 இனிய மணம் கமழும்
302 ஜவ்வாது
3002 பத்திகள்
: தயாரிப்பவர்கள் :
S. V. செல்லக்கனி & கோ
மீனுக்ஷி கோயில் தெரு, மதுரை.

தந்தி : 'குமரன்' டெலிபோன் : { மில் 98 / ஆபீஸ் 533

குமரன் மில்ஸ் லிமிடெட்,

பூளைமேடு P. O; கோயமுத்தூர்.

நிறுவப்பட்டுள்ள கதிர்கள்	...	19,044
மேற்கொள்ளப்பட்டுள்ள விஸ்தரிப்பு	...	5,900

நாங்கள் உயர்தரமான 20s 36s 40s 60s 80s நிர். பருத்தி நூலும், 20S நிர். ஸ்டேபிள் பைபர் நூலும் தயார் செய்கிறோம்.

எங்கள் நூலை

சென்னை, ஆந்திர மாகாணங்களில் மிகுதியாக உபயோகப்படுத்துகிறார்கள்.

Sri. G. V. RAMASWAMY NAIDU &
Sri. G. V. MUTHUSWAMY NAIDU
Committee of Directors.



தயாரிப்பாளர் :

அரசினர் தீப்பெட்டி தொழிற்சாலை,

பெரம்பூர், சென்னை

வியாபார விஷயமாக விசாரிக்குமிடம் :

தொழில் & வர்த்தக டைரக்டர், சென்னை-5.

கங்கைகொண்ட சோழபுரம்

நாடு முற்றும் நம்முடையது!

சோழ குல திலகமாகிய ராசேந்திர சோழனின் ஆட்சிக் காலத்திலே தமிழ் ராச்சியம் எல்லையற்றுப் பரவியிருந்தது. தமிழனின் வெற்றி முரசு கங்கை நதி தீரத்தில் முழக்கம் செய்தது; பதினோராம் நூற்றுண்டில் ஆட்சி பீடத்தில் கால் வைத்த ராசேந்திர சோழன் முப்பத்திரண்டு வருடகால போராட்டத்தனிடையே தமிழ் ராச்சியத்தை இலங்கைத் தீவு வரையிலும் பரப்பினுன். மைசூர் சமத்தானத்தின் ஒரு பகுதியும் அவன் காலத்தில் நமது ராச்சியத்திலே சேர்ந்திருந்தது.

தமிழனின் வெற்றி!

"தமிழனுக்கு நிகர் தமிழன் தான்! அவனுடைய வீரத்தை எதிர்த்து நிற்க யாராலும் முடியாது" என்ற உண்மையை உலகத்திற்கு எடுத்துக் காட்டுவதற்காக வடநாட்டை நோக்கி ராசேந்திரன் தன் படைகளை அணிவகுத்துச் சென்றுன். கங்கை நதி தீரத்தில் வடநாட்டு அரசர்கள் பலரைப் போர்க்களத்தில் முறியடித்தான்! அப்படித் தோற்றுப்போன அரசர்கள் தலையிலே கங்கை நீரைச் சுமத்தி, தன்னுடைய தலைநகருக்குக் கொண்டு வந்தான். அப்படிப்பட்ட மகத்தான வெற்றியின் நினைவாக நிறுவப் பட்டது தான் கங்கை கொண்ட சோழபுரம். தமிழ் நாட்டின் புராதன நாகரீகத்தின் சின்னமாகக் கங்கை கொண்ட சோழ புரம் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது.

லளித கலைகளிலே!

தமிழ்ப் பேரரசர்கள் ஆட்சி முறையில் மட்டுமின்றி கலைத் துறைகளிலும் சிறந்து விளங்கினர் என்பதற்கு அவர்கள் கலைவளர்ச்சியில் காட்டிய ஆர்வமும், கலைஞர்களை கண்ணெனப் போற்றிக் காபாற்றியதும் குறிப்பிடத்தக்கவை. தமிழர்கள் சிற்பம், ஓவியம், நாட்டியம் முதலிய லளித கலைகளில் ஒப்பற்று சிறந்து சொலித்தனர் என்பதற்கு எண்ணற்ற எடுத்துக் காட்டுகள் தமிழ்நாட்டிலே உள. இவற்றிற்கு ஒரு எடுத்துக் காட்டுதான் கங்கை கொண்ட சோழபுரம்.

அற்புதக் கோபுரம்!

தமிழ் நாட்டை அலங்கரிக்கும் ஆயிரக்கணக்கான கோபுரங்களுள், உருவாலும், உயரத்தாலும், பார்ப்பவர்களைப் பிரமிக்கச் செய்வனவும், பார்க்கப் பார்க்கப் புதிது புதிதாக தோற்றுவனவும், மறக்க முடியாத அழகு வாய்ந்தனவுமான கோபுரங்கள் இரண்டே இரண்டுதான் ஒன்று தஞ்சையிலுள்ள பிரகதீசுவரர் கோயில். மற்ரென்று கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள ராசராசேசுரம் என்ற கோயில். இவை இரண்டும் ஒப்புயர்வில்லாத தனிக் கோயில்கள். இவை இரண்டையும் ஒன்ருெடொன்று ஒப்பிடலாமே

தி. சு. சனகருமாரி



தவிர வேறு கோயில்களோடு ஒப்பிட்டுப் பார்க்க பல்லாயிரக் கணக்கான கோயில்களைப் படைத்த பாரத நாட்டிலே ஒரு கோயிலேனும் காணோம்.

கண்ணையும்கருத்தையும் ஒருங்கே கொள்ளை கொள்ளும் கங்கை கொண்ட சோழபுரக் கோயிலின் கர்ப்பக்கிரகம் 241 அடி உயரம்! விமானம் மட்டும் 174 அடி உயரம்! 241 அடி உயர முள்ள அற்புதக் கோபுரம், விமானம் முழுவதுமே கருங்கல்லால் கட்டப் பெற்றுள்ளது! இதுவே நெடுந் தூரம் வரையிலே தோற்றம் அளிக்கிறது.

அற்புத வடிவழகு!

கங்கை கொண்ட சோழபுரக் கோயிலில் சுவாமிக்கு கங்கை கொண்ட சோளீசுவரர், பெரிய நாயகர் என்றும் திருப்பெயர்கள் வழங்குகின்றன. பெரிய நாயகர் என்ற பெயருக்கு ஏற்றபடி சுவாமி மிகப் பெரியவர் தான். லிங்கத்தின் ஆவுடையார்க்கு ஐம்பத்து நான்கு முழம் இருந்தால் தான் ஒரு சுற்று ஆகும். அர்ச்சகரால் லிங்கத்துக்கு பரிவட்டம் சாத்த முடியாது. ஆகவே எதிரில் ஒரு சாரம் போட்டு அதன்மேல் நின்று அபிடேகம் செய்து விட்டு மற்றொரு சாரத்தின் மேலேயே பரிவட்டத்தைச் சாத்தி விடுகிறார் அர்ச்சகர். கடவுளை லிங்க வடிவத்திலே வைத்து வழிபடுவதே ஒரு அழகான கற்பனை தான். அந்த லிங்கத்தையும் கற்பனைக் கடந்தவொரு வடிவத்திலே ராசேந்திர சோழன் அமைத்திருப்பது அவனது சிறப்பைச் சித்தரிக்கிறது.

சிற்பச் செல்வங்கள்!

கங்கை கொண்ட சோழபுரம் கோயிலினுள்ளேயே இருக்கும் சிற்பச் செல்வங்கள் உலகிலே மற்ற எந்த இடத்திலும் இல்லாத பிரமிக்கத்தக்க வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்நாட்டுக் கலைஞர்களின் கைத் திறனுக்கு ஒரு எடுத்துக் காட்டாக அவைகள் இருக்கின்றன.



கலைச்செல்வி!

முகத்திலே தேவகளை சொட்ட, உடலிலே பெண்மை எழில் ததும்ப, கம்பீரமாகக் காட்சியளிக்கும் கலைச் செல்வி காண்பவரை பக்தியால் கனிந்து காலடியிலே விழச் செய்கிருள். சகல சௌந்தர்யங் களுடன் கையிலே செபமாலை, அமிர்த கலசம் ஏந்தி, அற்புதமாகக் காட்சி யளிக்கிருள் கலைச் செல்வி! இப் படிப்பட்ட உன்னதமான சிற்பத் தைச் செய்தவன் ஒரு தமிழன் என் பதை எண்ணுந்தோறும் நாம் மெய்மறந்து போகிறேம்.

உயிரோவியங்கள்!

நடராசமூர்த்தி தாண்டவமாடுகி ருர்! முனிவர் தவம் செய்கிருர்! உமாபதியின் வலது திருவடியின் கீழே கைகுவித்த நிலையிலே சண் டேச மூர்த்தி பணிவாக அமர்ந்திருக் கிருர்! அவரது முடியிலே தாம் அணிந்த மாலையை அவரது அன் பிற்கு அடையாளமாக எடுத்துச் சூட்டுகிருர் சிவபெருமான்! இடது கை கண்டேசுரர் முடியைப் பற்றியி ருக்கிறது. வலது கை மாலையைச் சுற்றிக் கொண்டு வருகிறது. வடி விலே மிகப் பெரியதும், அழகிலே ஒப்பற்றதுமான இந்த எழில் உயி ரோவிய சிற்பங்களைப் பாருங்கள்! பரவசப் படுங்கள்! இந்த சிற்பங் கள் தமிழகத்திலே காணும் சிற்பங் கள் எல்லாவற்றையும் விட அழகிற் சிறந்தவைகள். பரம ரசிகரான **பெர்குசன்** அவர்களும் **கால்டு வெல்** அவர்களும் இந்த அற்புதச் சிற்பங்களைக் கண்டு மிகவும் பாராட் டியிருக்கிருர்கள்.

சிங்கமுகக் கிணறு!

கங்கை கொண்ட சோழபுரத்தில் பெரிய நாயகர் கோயிலினுள் பெரிய நந்தி ஒன்று பெருவுடையா

பாண்டியன்

லாட்ஜ்

பெஸ்ட் பிரியாணி சாப்பாடு

ஹோட்டல்

8. வெங்கலக்கடை தெரு,

மதுரை.

N. B: கோழிப்பிரியாணி,

கோழிச் சாப்ஸ்

புருச் சாப்ஸ்

தினசரி கிடைக்கும்.

சனிக்கிழமைகளில்

வான்கோழிப் பிரியாணி,

வான் கோழிச் சாப்ஸ்

கிடைக்கும்

Prop- P.K.S.S.

phone : 713 Tel. ANANDJOTHI

சிற்றுண்டிகளுக்குச்சிறந்த இடம்.

ஜோதீ

ஆனந்த பவான்

காபி ஓட்டல்&போர்டிங் ஹவுஸ்

கீழமாசி வீதி, மதுரை.

N.B.—**ஜோதி ஆனந்தா காபி ஓர்க்ஸ் காபி பவுடரையே உபயோகியுங்கள்.**

னைப் பார்த்து அமர்ந்திருக்கிறது. இது தஞ்சைக் கோயிலிலுள்ள நந்தி

யைப் போலவே இருக்கிறது. கோயிலை வலம் வரும்போது சிங்க முகக் கிணற்றைக் காணலாம். ஒரு பெரிய சிங்கம்; அதன் வாயின் வழியாக இறங்கப் பெரிய படிக்கட்டுகளும் இருக்கின்றன. பகைவர்கள் நெருங்கிவிட்டால் பத்து கச தூரத்திலுள்ள பெரிய கிணற்றிலே வீரர்கள் குதித்து ரகசியப் பாதை வழியாகச் சிங்கத்தை அடைந்துவாயின் வழியாகவெளியே வருவார்களாம்! ரகசிய வழியைப் படிக்கட்டுகள் வழியாக இறங்கிப் பார்த்தபோது தண்ணீர் இடுப்புக்கு மேலே இருந்தது!

கங்கை கொண்ட சோழபுரம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலே உடையார்பாளையம் தாலுகாவில் ஒரு கிராமம். அரியலூரிலிருந்து எட்டு மைல்தான். இருமருங்கிலும் இன்பமான நிழல்தரு மரங்கள். அடிக்கடி பஸ் போவதால் பிரயாணத்திற்குச் சிரமமே இல்லை. ஒவ்வொருவரும் அவசியம் கங்கை கொண்ட சோழபுரத்திற்குச் சென்று கலைச் செல்வங்களைக் கண்டுகளிக்க வேண்டியது அவசியம்.

ஆர்.எஸ். சுப்பிரமணியன்.

காலை மணி ஒன்பது.

தீபாவளி நடந்து கொண்டிருப்பதற்கு அறிகுறியாக வேட்டுக்களின் ஒலிகள் காற்றிலே மிதந்து வந்தபடி இருந்தன.

ஜன்னலைத் திறந்தேன். என்னைத் தவிர உலகமெல்லாம் 'தீபாவளி' கொண்டாடிக் கொண்டிருந்தது. நான் மாத்திரம் தெருவிலே சிதைந்த வாணங்கள் கிடந்தனவே, அவை போல இருந்தேன்... ஆம் ... என் வாழ்க்கை இன்பம் என்றோ மத்தாப்பாய் எரிந்து வாணமாய் பொறி சிதறி, வெடியாக வெடித்து விட்டது...

படுக்கையிலே சாய்ந்தேன்... கை தானாகவே பையிலிருந்து ஓர் சிகரட்டை எடுத்துப் பற்ற வைத்தது...புகை மண்டலம் சுருள ஆரம்பித்தது...

புத்தக அலமாரியிலிருந்து நேற்றிரவு எடுத்த உமர்கய்யாமின் 'ரூபியாட்டும்' தே. வி. யின் கவிதைகளும் மேஜை மீது கிடந்தன...

"எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேற்செல்லும்" என் சிந்தனையிலே இந்த வார்த்தைகள் மிதந்தன...எண்ணமும் சிறகடிக்க ஆரம்பித்தது...

இந்த தீபாவளியைச் சுற்றியே என் வாழ்வின் திருப்பங்களெல்லாம் ஆண்டவனால் தீட்டப் பெற்று உள்ளனவோ!

ஆம்... அது கூட இரண்டாண்டுகளுக்கு முந்திய தீபாவளி நாள்தான்.. ஆனால் இன்று நான் உள்ள நிலைக்கும், அன்றிருந்த நிலைக்கும் எவ்வளவு வேறுபாடு...?

அன்று என் வாழ்வு துவங்கிய திருநாள்...இன்றோ? குறுகிய மூன்று ஆண்டுகளில் என்வாழ்க்கை மத்தாப்பைப் போல் 'குளு குளு" என்று ஒளி வீசித் தண்மை பரப்பி, வாணமாய் கண்ணுக்குக் கருத்தூட்டும் வகையிலே பொறி சிதறி, வெடிபோல வெடித்து முடிந்து என்னை இடி விழுந்த பனையாய் விட்டுச் சென்று விட்டதே!

அன்று...அந்த இன்பத் தீபாவளியில் நடந்தவை? ஆகா... எண்ணும் பொழுதே என் உணர்ச்சி செத்த உள்ளம் கூட மகிழ்ச்சியால் துள்ளுகிறதே!

அப்பொழுது நான் சென்னையில் 'லாயிட்ஸ்' ரஸ்தாவில் தனி அறையில் வாழ்ந்து கொண்டிருந்தேன்.

தனியான மாடி வாசற்படியிலே 'சேகர் எம். ஏ.' என்ற பலகை. அது தான் என் பெயர்.

கல்லூரியிலிருந்து வெளி வந்தவுடனே... விரிவுரையாளர் வேலை கிடைத்திருந்தது. குறைந்த வேலை. நிறைந்த சம்பளம். உல்லாசமாக என்னை எங்கும் தாங்கிச் செல்லப் புத்தம் புதிய சைக்கிள்...அறையிலே பொழுது போக்க 'ரேடியோ'... அலமாரி நிறையப் புதிய வெளியீடுகளான அருமையான புத்தகங்கள்...சுருக்கமாக இன்பமான தனி வாழ்க்கை... என்னைத் தட்டிக் கேட்கயாரும் கிடையாது. உடை உடுத்து அறைச் சாவியைக் கையில்சுழற்றிய வண்ணம், என் இரும்புக் குதிரையில் ஏறி மிதிக்கத் தொடங்கி விட்டால், நான் என்னவோ 'செஞ்சிராஜா தேசிங்கு' என்றுதான் எண்ணிக் கொள்வேன்!

எப்பொழுதாவது அம்மா எழுதும் கடிதம் ஒன்றுதான் என்னை உலகோடு கட்டியிருந்த 'பாசம்'. தனிமையிலே இனிமை காண்பவன் நான் கவிதைப் பைத்தியம்...உமர்கய்யாமும், ஷெல்லியும் தான் என் உற்ற நண்பர்கள். இது தான் என்னைப் பற்றிய சுருக்கமான விளக்கம்... ஆனால் இந்தச் செஞ்சிராஜாவை அடிமைப் படுத்தவும் ஒருத்தி வந்தாளே...அதுதான் விந்தை...

அந்த அரசி வந்த நாள் தான் அந்தத் தீபாவளி. எனக்கு என்னவோ அன்று காலையில் இருந்தே தலைகால் புரியாத மகிழ்ச்சி...என்றுமில்லாத திருநாளாக அந்தத் தீபாவளியைக் கொண்டாடத் திட்டம் பலமாகத் தீட்டியிருந்தேன்...

காலை ஐந்து மணியிலிருந்து ஏழு, எட்டு மணிவரை, 'பட்டாசு' விடக் கூட ஆசை காசைக் கொட்டிக் கருமருந்து வெடிகளாக வாங்கி வந்திருந்தேன்... அன்ன பூர்ணாவிலிருந்து ஒரு பொட்டலம் தின்பண்டங்கள் வேறு...தீபாவளிக் காலையும் விடிந்தது...

அவசர அவசரமாக எண்ணெய் தேய்த்து 'குழாய் ஸ்நானம்' செய்தேன்...இந்த ஒற்றைக் கட்டைக்கு இளம் சூடான வெந்நீரும், சுக்குப் பொடியும், யார் செய்து தருவார்கள்?

'தண்' என்றிருந்த நீரில் தலை முழுகி புத்தாடை பூண்டு அன்ன பூர்ணா, லட்டை வாயில் ஒதுக்கியபடி, வாணப் பொட்டலமும், விளக்குமாக பால்கனியை அடைந்தேன். அப்பொழுது தான் அது நடந்தது...நான் அழகுணர்ச்சி இல்லாதவன் அல்ல. ஆனால் எதிர் வீட்டிலும் பக்கத்து வீட்டிலும் உள்ளவர்களைப் புள்ளி விவரம் எடுப்பதில் எனக்கொன்னவோ என்றுமே நாட்டம் சென்றதில்லை.

எனவே அதற்கு முன் நான் அவளைப் பார்த்ததில்லை.

எதிர் வீட்டு மாடியிலே இருந்து வந்த மத்தாப்புக்களின் ஒளியும், அந்த ஒளியை நூறு மடங்கு விஞ்சிய புன்ன கைப் பிரகாசமும் என்னை ஈர்த் தன. முதற் பார்வை...முதற் பார்வை என்று பேசுகிறார்களே, அதன் பூர்ணத்வத்தை அன்று தான் புரிந்து கொண்டேன்.

இரண்டு சிறு குழந்தை களுடன் சேர்ந்து மத்தாப்பு எரித்துக் கொண்டிருந்தாள் அந்த 'குழந்தை'

குழந்தை என்று சொன் னேன்... தவறு... கோலம் குமிழியிட்டு நுரைத் தோடும் குமரி. முதன் முறையாக 'குற்றா லம்' அருவியல் தலையை நீட்டு பவனுக்கு ஏற்படும் இன்ப உணர்வு என்னுள்ளே கிளு கிளுத்து ஓடியது.

அவளை வர்ணிக்க நான் என்ன கம்பனா...இல்லை...காளிதாசனா... முதல் எழுத்தாளன்கூட இல்லை யே...என்னவோ... அவளைக் கண்டதும் என்னுள் ஓர் நிறைவு...ஓர் இனம் தெரியாத மகிழ்ச்சி. அவள் மத்தாப்புக் கடைக்கு எதிர்க்கடை வைக்க வேண்டும் என்ற ஓர் குறும்புத் தனமான எண்ணம் பிறந்தது. அணுக் குண்டுகள் அரை டஜன் ஒன்றன்பின்ஒன்ருக வைத்தேன்.

ஒரே சப்தம்...காதைச் செவி டாக்கும் போர்முனையைப் போல அந்த சுந்தரியின் மத்தாப்புக்களை மறந்து விட்டு என்னையும், எனது அணுக் குண்டுகளையும் 'ஏதோ' சினிமா பார்ப்பது போல அந் தக் குழந்தைகள் பார்க்க ஆரம் பித்தன.

அந்தக் குமரிக் குழந்தை கூட இந்தத் தேசிங்குராஜாவை... பார்த்ததா... இல்லை... இல்லை... 'ஹிம்னடைஸ்' செய்ய ஆரம் பித்தது.

பிறகு என் உற்சாகத்தைப் பற்றிக் கேட்கவா வேண்டும்! அவுட்டுகள்...ஸில்வர் அவுட்டு கள்...சரவெடிகள்.... மாறி மாறி வெடித்துத் தீர்த்தேன்.

ஏரோப்ளேன்கள் பாக்கெட்டை உடைத்து ஒன்றைப் பற்ற வைத்தேன்...ஏன் அதைச் செய் தேன்?

விதி...விதி என்கிருர்களே... அது தானு என்னை அதை எடுக் கச் செய்ததோ...ஆம்...அந்த ஏரோப்ளேன் தான் எங்களை ஒன்று சேர்த்தது.

அதை வாழ்த்துவதா... வைவதா? நான் அதை வானத் திலே செல்ல வெடித்தேனே தவிர எதிர் வீட்டு பால்கனிக்கா அனுப்பினேன்?

ஆம், அதைத் தீ பட்டது தான் தாமதம். என் உள்ளத் திற்குப் போட்டியாக 'ஜிவ்' என்று பாய்ந்து எதிர் வீட்டை நோக்கிப் பறந்தது.

ஓரிரண்டு கணம் தான் இருக் கும்...'ஐயோ' என்று அலறல்... அந்த அழகி...ஐயோ அவளை என்ன செய்து விட்டது!

ஒவ்வொருவனும் தன்னு டைய ஒவ்வொரு எண்ணத்தை யும் பரிசோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தடதட வென்று கீழேஇறங்கி எதிர் வீட்டை நோக்கி ஓடினேன்.

'நான் பால்கனி'யை அடைவதற்குள்.......அவளைச் சுற்றி ஓர் கூட்டமே கூடிவிட்டது 'ஆடு திருடிய கள்ளனைப் போல்' விழித்தபடி அங்கே நின்றேன்.

எனது 'ஏரோப்ளேன்' ஹிட்லரது 'வி' போன்று நா௯ வேலையை நடத்தியிருந்தது. அவளது பொன் வண்ணப் பட்டுப் புடையில் ஓர் பொத்தல்.

'அம்மா' என்று முகத்தைச் சுளித்தாள்.

யாரும் என்னைக் கவனிக்கவில்லை. ஆனல் அவள் பார்த்தாள்.

'ரொம்பவலிக்கிறதாம்மா?', அவளுடைய தந்தை கேட்டார்.

'உம்... உம்...... இல்லை'... அவள் விழிகள் என் முகத்தில் சொருகின...

'மன்னித்துக் கொள்ளுங்கள். தவறுதலாக'...... என்று இமுத்தேன்.

'வாணம் விடுகிற வயசைப்பாரு' அவளுடைய தாயார் முகத்திலே வெறுப்புப் படர முணு

முனுப்பது கேட்டது.

'அவரை ஒன்றும் சொல்லாதே அம்மா. ஏதோ பட வேண்டும்; பட்டு விட்டது. நீங்கள் போங்கள் சார்!' என் நன்றியை என் கண்கள் ஒளிக்காது காட்டியிருக்க வேண்டும். அவள் புன்னகை பூத்தாள்.

வெளியே நடந்தேன். எவ்வளவு பெருந்தன்மை! என்று எண்ணியது உள்ளம்...

இப்படித் தான் தொடங்கியது எங்கள் தொடர்பு...... அவள் பெயர் சசிகலா ......என்று தெரிந்தது.

ஒரு நாள் அவள் அப்பா என் அறைக்கு வந்து என் அம்மாவின் விலாசத்தை வாங்கிச் சென்றார். பிறகென்ன? எல்லாம் முறைப்படி நடந்தன...

ஸ்ரீமான் சேகர் நல்லதோர் நாளில் சசிகலா தேவியாரை மணந்தார்..!

உம். அது கழிந்த மூன்றாவது வருடத் தீபாவளி! என் வாழ்க்கை மத்தாப்பு ஒளி விட்டு எரிந்த நேரம்.

சென்ற வருடம் எங்கள் தலை தீபாவளி! மாமனுர் வீட்டின் மாடித் தனியறை மஞ்சத்திலே படுத்திருந்தோம். காலை மணி மூன்று அடித்தது.

'அத்தான்.'

'உம்'

'எழுந்திருங்கள். அத்தான். நேரமாகி விட்டதே!'

'உம்.'—'நைட் பல்பின்' ஒளியிலே சசியைப் பார்த்தேன். என் அழகுப் பெட்டகத்தின் மலர் முகத்திலே சுருள் சுருளான ரோமக் கற்றைகள் தான் எத்தகைய ஜாலவித்தைகளைக் காட்டுகின்றன...என்றேன். அவளது இன்பத் திருமுகம்.........புத்துணர்வை பாய்ச்சியது. இதுதான் வாழ்க்கை ; இன்ப வாழ்க்கை என்று எண்ணமிட்டேன்.

'வாணம் விடவேண்டாமா அத்தான்.'

'ஏய். குறும்புக்காரி. என்ன விளையாடுகிருய்' ஏரோப்ளேன் வீரர்' தெரியுமா உனக்கு...'

'ஓ...நன்ருய்த் தெரியுமே... உங்கள் வீரத்தனத்திற்குத் தான் நான் 'மெடல்' வாங்கி இருக்கிறேனே!...' சசி எழுந்து சென்ருள். அந்தத் தீபாவளி தான். வாழ்வில் இன்பம் தவிர வேறில்லை என்று எண்ணச் செய்து என்னை ஏமாற்றியது... அன்று பூராவும் ஒரே கும்மாளம் போட்டோம். விதி என்ன எண்ணி அன்று சிரித்ததோ... என்வாழ்க்கை. 'சில்வர் அவுட்' டைப் போலப் பொறி சிதறிய காலம் அது...ஒரே ஒளி மயம்...

ஒளிதான் உண்மை இருட்டே; கிடையாது என்று தான் எண்ணி வந்தேன், அன்று ஸ்டேஷனிலிருந்து திரும்பும் போது...

சசியின் சொற்கள் என் நினைவிலே ரீங்காரமிட்டபடி இருந்தன

'அத்தான், ஆண் குழந்தை பிறந்தால் 'ஏரோப்ளேன்' என்று பெயர் வைப்போமா ?

கடைசி வரை சிரித்தபடி தான் கண்ணீர் இருவர் கண்களிலும் பெருகியது... அன்று பார்த்த சசிதான். பிறகு அவள் உயிரற்ற உடலைத்தான் பார்த்தேன். என்னவோ சொன்ஞர்கள். என் வாழ்க்கை அவுட்டைப் போல் வெடித்துச் சிதறி விட்டது. என் சசி பிரசவத்திற்குச் சென்றவள் உலகை விட்டே சென்று விட்டாள்.

இது மூன்ருவது தீபாவளி...

நான் எப்படி இதைக் கொண்டாட முடியும்...?

தமிழ் நாட்டையே விட்டு கல்கத்தாவிலே வந்து வாழுகிற எனக்கு யார் இன்று தீபாவளி கொண்டாடத் தூண்டுதலாக இருக்கப் போகிருர்கள்...

உமர்கய்யாமைப் பிரித்தேன்.

'எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேற்செல்லும்'

'தீபாவளி' மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது...

பிரசுரமாகாத, கதை, கட்டுரை, கவிதைகளை திருப்பிப் பெற விரும்புகிறவர்கள், போதிய தபால் பில்லைகள் அனுப்ப வேண்டும். ஆ-ர்

INSTALL

DPF

PUMPS

DHANDAYUTHAPANI FOUNDRY PRIVATE LTD.,

PAPPANAICKENPALAYAM,

COIMBATORE.

Phone : 219 - P. B. No. 278 - Grams : MOTORPUMP.

காமனை வென்ற கண்

சுகி

அத்தியாயம்—3

மாளாத வேதனை

வசதிகளை அதிகமாக வைத்துக் கொள்ளுகிறவர்களுக்குத்தான் பயமும், பலவீனமும் மிகுதியாக இருக்கும். பரண்மீது கொடியால் கட்டப்பட்டுவிழுந்துவிடாமல் பாதுகாத்துக்

கொண்டிருக்கும் நான் எங்கே? பாசத்தின் காரணமாக இரவும் பகலும் அலேந்து அலேந்து இருளிலே எங்கே தங்கியிருந்தாளோ அந்தப் பெண்?

"முத்தையா, முத்தையா" என்ற அலறல் கேட்கக் கேட்க என் உடம்பிலே உறங்கிக் கிடந்த இரத்தம் துடிக்க ஆரம்பித்தது. ஒரு பெண்ணுக்கு இருக்கின்ற துணிச்சல் நமக்கு இல்லேயே என்ற ஆதங்கம் வந்தது. மறுகணம் நான் உயரமான பரணில் இருப்பதை மறந்தேன். மடமடவென மரத்தின் வழியாக இறங்கினேன். இறங்கும் வரை எனக்கு இருந்த உற்சாகம் வேறு; இறங்கிய பின்னர் ஏறிட்டுப் பார்த்தால் அத்தனே சிறு உயரத்திலிருந்து இறங்கவா நான் அச்சம் அடைந்தேன் என்ற ஆச்சர்யம்!

கீழே கிடந்த துப்பாக்கி ஒன்றை எடுத்துக்கொண்டு பாண்டித்துரை விட்டுச் சென்ற மற்றஉபகரணங்களேயும் சுமந்தபடியே சென்றேன். எனக்கு

எந்தப் பக்கம் திரும்பினுலும் அந்நிய இடம்; ஆனல் பாண்டித்துரை எவ்வாறு புலி இவ் வழியாகத்தான் போயிருக்க வேண்டும் என்று நம்பிக் கொண்டு கிளம்பினுரோ அப்படியே நானும் பாண்டித்துரையை தேடிப் போனேன். பாண்டித்துரை சென்ற தடத்தைப் பின் பற்றுவதாக எண்ணம். பரணிலிருந்து பார்த்தபோது எனக்குத் தெரிந்த திக்கை மனதில் ஒருவாறு வாங்கிக்கொண்டு நடந்தாலும் அந்த இடம் என்னுடைய ருகாக இல்லை. மனித நடமாட்டத்தாலோ அல்லது விலங்குகள் நடப்பதாலோ ஒரு சில செடிகொடிகள் மிதிபட்டுப் பாதையொன்று சுவடு விட்டுச் சென்றது. அதன் வழியாக நான் போய்க் கொண்டிருந்த போது தான் யாரோ முனகும் குரல் கேட்டது. கிளையொடிந்த மரத்தின் அடியிலே சட்டைத் துணி தெரியவே எனக்கு பயம் உந்தித் தள்ளிற்று. அது பாண்டித்துரை அணிந்திருந்த சட்டையின் நிறம் போலிருக்கவே இன்னும் வேகமாக ஓடினேன். என் நெஞ்சிலே கொழுந்து விட்டு நெருப்பு எரிவது போன்ற வேதனை.

> துன்மார்க்கருக்கு முன்பாக நீதிமான் தள்ளாடுவது கலங்கின கிணற்றுக்கும் கெட்டுப் போன சுனைக்கும் ஒப்பாகும்.

பாண்டித்துரை முக்கி முனகிக்கொண்டு கிடந்தார். அவர் மீது கிளை ஒடிந்த முரட்டுக் கொப்பொன்று கிடந்தது. நிமிஷத்திற்கு நிமிஷம் அந்தக் கொப்பின் பழு அவர் முதுகெலும்பை அழுத்திக் கொண்டிருக்க வேண்டும். ஓடிப் போய் மரத்தைப் புரட்ட முயன்றபோது எனக்குள்ள வலு மானசீகமானது என்பதைக் கண்டேன். இங்குமங்கும் ஓடியாடி யாரை யாவது துணைக்கு அழைத்து வரலாமென்ருல் எங்கே போவது? காட்டுக்கு வெளியே போகும் பாதையை அறியாதவன் நான்.

மண்டபத்தைப் போன்ற ஆனல் குகையென எண்ணிய இடத்திலிருந்து அக்குரல் இன்னும் கேட்கிறது. 'முத்தையா, முத்தையா' என்ற குரல்தான். பாண்டித்துரையின் முகத்தருகே சென்று ஏதாவது யோசனை கேட்கலாமென்ருல் முகம் தரையில் புதைந்து கிடக்க அவன் முகத்தைத் திருப்புவதே பெரிய துர்பலம். கையிலே இருந்த துப்பாக்கியின் குத்துவாளினுல் மண்ணைப் பறித்துச் சிறிது சுவாசம் செல்ல குழிதோண்டினேன். சுவாசம் விட்டாலும் முதுகிலே அழுத்தும் கட்டையின் பாரத்தை எப்படியேனும் சடுதியாக எடுத்துவிடவேண்டும். எனக்குள்ள இயலாமை காரணமாக 'ஓ'வெனக் கதறினேன். என்னுடைய எதிரொலி மலைக்கு மலை மோதி என்னிடமே திரும்பி வந்தது. யாராவது அங்கே என் குரலைக் கேட்டு உதவிக்கு வந்தாக வேண்டும்; வருவார்கள் என்ற

நம்பிக்கையில் உரத்து அழுதேன்.

இதுவரை கேட்டுக்கொண்டிருந்த 'முத்தையா, முத்தையா' என்ற குரலும் கேட்கவில்லை. இனி யார் உதவிக்கு வரப் போகிறார்கள் ?

என்ன ஆச்சர்யம்! வெள்ளுடை தரித்த மூதாட்டி ஒருத்தி என் அருகாக வந்து, "என்ன?" என்று கத்தினாள். அவள் இருந்த சோகத்திற்கு நான் துணை செய்ய வேண்டும். கண்ணும் விழியும் 'சிவு சிவு' வென இருந்தன. முகத்திலே ஏக்கத்தின் தொல்லை படர்ந்திருந்தது.

"இந்த மரம் விழுந்துவிட்டது. இதை என்னால் நகர்த்த முடியவில்லை. கொஞ்சம் உதவி செய்ய வேண்டும்." என்றேன்.

"இதுதானா பெரிது. என்னுடைய முத்தையன் அகப்பட்டுவிட்டான் என்றல்லவா ஓடிவந்தேன்."

"நீங்கள் யாரம்மா? ஒருவேளை அவனுடைய தாயாரா?"

"ஆமாம். இந்தமரத்தின் அடியிலே சிக்கிக்கிடப்பவர் யார்? ஜமீந்தாரா? பாண்டித்துரை ஐயாவா ?"

மறுகணம் அவள் பாய்ந்து வந்து பேய் பிடித்தவள் போல கிளை முறிந்து கிடந்த பழுவான பக்கத்தைப் பிடித்தாள். கிராமத்து உழைப்பிலே வலுவேறிய உடம்பும் தெம்பும் அலாக்காகத் தூக்கின. நானும் உப்புக்குச் சப்பாணியாகக் கட்டையைப் பிடித்தேன்; மெதுவாக பாண்டித்துரை புரண்டார். கட்டையை நாங்கள் இருவரும் போட்டுவிட்டு பாண்டித்துரை அருகாக வந்தோம். அவர்

> ஆபத்துக் காலத்தில் துரோகியை நம்புவது உடைந்த பல்லுக்கும் மொழி புரண்ட காலுக்கும் சமானம்.

குடிக்கத் தண்ணீர் கேட்டு சைகை செய்தார். எனக்கோ பழக்கமில்லாத இடம். பயம் வேறு.

கொண்டுபோயிருந்த தண்ணீர் தான் பயன் பட்டது. அந்த அம்மாள் ஓடிப்போய் சுனை நீர் மொண்டு வந்தாள். முகத்திலே சளம்பத் தெளித்தாள்.

பாண்டித்துரை சிறிது மூச்சு விட்டார்; அவர் மனத்துள்ளே இருந்த பாரம் நீங்கிற்று. உடம்புக்கு மட்டும் கடினமான அடி. முதுகிலே சற்று சிராய்த்து ரத்தம் அரும்பிக் கொண்டிருந்தது.

"ஏனய்யா, நீங்கள் இங்கே வந்து மாட்டிக் கொண்டீர்கள்?"

பாண்டித்துரை பேச முடியாமல் என்னைப் பார்த்து சைகை செய்தார். நான் விபரங்கள் சொல்ல ஆரம்பித்தேன்.

"அட ஆண்டவனே, என் பிள்ளையைத் தேடி வந்தா நீங்களும் கஷ்டப்பட்டீர்கள். ஜமீன்தார் ஐயா, நீங்கள் தெய்வம், உங்கள் தகப்பனார் செய்த தவறுதலை நீங்கள் செய்யவில்லை, அந்தச் சண்டாளி செண்பகம் செய்துவிட்டாள். பெற்றவள் சொன்னேன் கேட்டானா? என் நெஞ்சம் இப்போது காடு மலை

யென்று பாராமல் துடிக்கிறதே. அவளுக்கு என்ன? வீட்டிலே கட்டிலில் படுத்திருப்பாள். அவள் மான் குட்டி இருந்தால் என்ன, அது செத்தால் என்ன? என் பிள்ளையை யார் கண்டு பிடித்துக்கொண்டு வருவார்கள்.''

பாண்டித்துரைக்குப் பேச முடியாத நிலை. பேசினாலும் கஷ்டங்கள் அதிகமாகும். பல வீனமான என்னையும் அந்த அம்மாளையும் ஆபத்திலிருந்து மீட்டுப்போகக் கூடிய உடல் வலுவுள்ள அவருக்கு ஆபத்து; நாங்கள் இருவரும் தெம்பாக இருக்கிறோம்.

''அம்மா, இந்தக் காட்டில் நீங்கள் ஒருவர் தேடிப் பயன் இல்லை. இது பயங்கரமான காடு. எங்களுக்கே இரவில் பயம்.''

''முத்தனைக் காணாமல் வர மாட்டேன்.''

'' உங்களுக்கும் ஆபத்து வரும். நீங்கள் அன்ன ஆகாரம் இல்லாமல் சுற்றினால் என்ன பயன்?''



இதற்குள்ளாக நாலைந்து நபர்கள் அந்த இடத்தைத் தேடி வந்தார்கள். வந்தவர்களில் இருவர் ஜமீந்தார் பண்ணையாட்கள். செண்பகத்தின் வீட்டு ஆட்களும் இருந்தனர். வேல்கம்பும் வீச்சரிவாளும் கையுமாக அவர்கள் வந்தார்கள்.

'' ஏனம்மா, நீங்கள் ஆம்புள்ளையாட்டம் ராவு காட்டிலே எங்கண இருந்தீங்க? நல்லா இருக்குது?'' என்று கடிந்து கொண்டான்.

''உங்களோடு நானும் வருகிறேன்.''

'' முடியாதம்மா. முடியாது. நாங்கள் ஆண்பிள்ளைகள். ஓடுவோம். சாடுவோம். ஆபத்தை சமாளிப்போம். இதோ பாருங்க பெரிய ஜமீந்தாரய்யா வேட்டையிலே பெரிய பேர் பெற்றவர். அவரே ஒடியர கிளை பார்க்காமல் அகப்பட்டுக்கொண்டார்.'' என்றார்கள்.

பாண்டித்துரை மெதுவாகப் பேச ஆரம்பித்தார், '' முத்தையனின் அம்மாவின் குரல் என்று எனக்குத் தெரிய வந்தது. அந்த அம்மாள் மேல் பக்கத்து மலைக்குப் போய்விடக் கூடாதே யென்று பயந்து ஓடி வந்தேன். எங்கே நிற்கிறார்கள் என்பதைப் பார்க்கத்தான் இந்தக் கிளையில் ஏறினேன். இது காற்றில் முறிந்திருக்க வேண்டும். இதைக் கவனிக்காமல் ஏறி நிற்கவே, என் பாரத்தில் அது முறிந்து

விழுந்த வேகத்தில் என் கால் பிறழ நான் அடியில் மாட்டிக் கொண்டேன். கிளை என் மீது விழுந்துவிட்டது.''

''நான் வராமற் போனுல் என்ன ஆகும்?'' என்றேன்.

''ஆண்டவன் என்னை முத்தையன் அருகாகக் கொண்டு சேர்ப்பான்.'' என்ருர் ஜமீந்தார்,

''என் பிள்ளை இறக்கவில்லை. இறந்திருந்தால் என் மூச்சு நின்றிருக்கும். அவன் எங்கோ இருக்கிருன்?''

அங்கே நிற்பவர்கள் எங்களைக் காட்டைவிட்டு வெளியே கொண்டுவந்து விட்ட பின்னரே தங்கள் கடமையைச் செய்யப் புறப்பட்டார்கள்.

'' ஏண்டாப்பா, போதுமான காய்கனி எடுத்துக்கொண்டு தேடுங்கள்.''

'' ஐயோ பணம் கொடுக்க ஒப்புக்கொண்ட ராஜா நீங்கள். எங்களுக்குப் பட்டினி கிடக்க வேண்டாமென்று சொல்லவும் வேண்டுமா?''

பெற்ற தாய் இதைக் கேட்டு ஆச்சர்யம் தெரிக்கப் பார்த்தாள்.

''ஆமாம் அம்மா. ராசா இன்னும் ஒரு வாரத்துக்குள்ளே உண்டு இல்லை என்று தெரிந்து வரும்படி சொல்லியிருக்கிருங்க. எதைச் சொன்னுலும் எங்களுக்கு ரூபாய் ஐந்நூறு.'' என்ருன்.

''என்ன, நீங்கள் பணம் கொடுத்துத் தேடச் சொல்லியிருப்பதாக என்னிடம் சொல்லவே இல்லையே. சண்பகத்திடமும் சொல்லாமல் இருந்துவிட்டீர்களே?'' என்றேன். தன்

வேலை தேடி வந்தவன் : வேளா வேளைக்குச் சாப்பாடு மட்டும் போட்டுடுங்க. சம்பளம் வேண்டாமுங்க!

னுடைய உதவியைத் தம்பட்டம் அடிக்காத பண்புடையவர் பாண்டித்துரை.

'' சொல்லுவதால் என்ன பயன் சார்? நமக்கு வேண்டுவது முத்தையன். அவனைக் கண்டு பிடித்த பின்னர் நான் கண்டு பிடித்தேன் என்ருல் போதும்.''

முத்தையன் தாய், '' ஐயோ அநியாயமாக உங்களைத் திட்டினேன்.'' என்று கைதொழுதாள்

''நீங்கள் எனக்குத் தாய் போல. எங்கள் குடும்பத்துக்கு கெட்ட பெயர் வரக் கூடாது என்றுதான் பணத்தையும் கொடுத்து நானும் இங்கு தேட வந்தேன். அப்படியும் நீங்கள் நம்ப மாட்டீர்கள்.''

"இல்லை, ஜமீந்தாரய்யா. நீங்கள் சொல்வதை நம்புகிறேன்."

"நீங்கள் என்னோடு ஊருக்கு வாருங்கள். முத்தையனைக் கண்டு பிடிக்க வேண்டிய பொறுப்பை இவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்."

அவள் சற்றுத் தயங்கினாள்.

தேடி வந்தவர்களில் ஒருவன் உரிமையுள்ளவன் போலும். அந்த அம்மாவைக் கையைப் பிடித்து, "வாம்மா, நாங்கள் தேடுகிறோம். நீ எதற்கு இங்கே இருந்து சாகறே?" என்று முன் பாதையில் இழுத்துக்கொண்டு போனான். நாங்களும் அதே பாதையில் பின் தொடர்ந்தோம்.

அன்று நாங்கள் பங்களாவிற்கு வந்தபோது, செண்பகம் வரவில்லை. தேடிச் சென்றவர்கள் செய்தியைச் சுருக்கமாகச் சொல்லி யிருப்பார்கள். அன்றென்ன? மறுநாள், ஒரு வாரம் ஆயிற்று. முத்தையன் காட்டிலே இல்லை. அவன் இறந்து பட்டதாகவும் சொல்ல முடியாதாம். காட்டுப்பகுதியிலே கழுகுகள் வட்டமிடக் காணோமாம். எங்காவது புதருக்குள் கொண்டு வைத்தால் கழுகுகள் வட்டமிடுமா?

ஒரு வாரத்திற்குள் எனக்கே குற்றாலத்தில் இருக்க முடியவில்லை. இடம் கசந்துவிட்டது. முத்தையன் இல்லாத அருவி இருந்தால் என்ன, இல்லாது போனால் என்ன? தேடிப் போனவர்கள் வந்துவிட்டார்கள். அவர்கள் ரூபாய் ஐந்நூறு தலைக்குப் பெற்றுக் கொண்டார்கள். முத்தையன் கிடைக்கவில்லை யென்பது அவர்கள்சொன்ன தகவல்.

ஊருக்கு மூட்டையைக் கட்டிக் கொண்டு கிளம்பினேன். வருடாவருடம் வரும்போது, 'போய் வாங்க' என்று கூப்பும் கரத்தைக் காணவில்லை. பாண்டித்துரை மட்டும் துயரத்தோடு வழியனுப்ப வந்தார்.

"தம்பி, நீங்கள் என்ன செய்வீர்கள்? வருந்த வேண்டாம்"

"நீங்கள் சொல்லலாம். என் தகப்பனாருடன் முத்தையன் தந்தை வேட்டைக்குச் சென்ற இடத்தில் புலியால் அகப்பட்டு ஸ்தலத்தில் மாண்டார். முத்தையன் அப்போது சிறுபிள்ளை. விதவையான முத்தையன் தாய்க்கு ஜமீனிலிருந்து சகல உதவிகளும போகும். அவள் ஒரு துரும்பையும் தொட மாட்டாள். கலிக்கு நெல் குத்திச் சாப்பிடுவாள். முத்தையனுக்கும் என் தகப்பனார் வேண்டிய உதவிகளைச் செய்தார்."

"விதியென்பதாக ஒன்றிருப்பதை எவ்வாறு மறப்பது?"

"நான் நல்லது செய்ய எண்ணியே அவனுக்கு கார் ஓட்டச் சொல்லிக் கொடுத்து என்னுடன் சகோதரன் போல வைத்துக்கொண்டேன். படுபாவி, விதியோ சாவோ அவனைப் புலியின் பின்னால் ஓடச் சொன்னது."

"எனக்கென்னவோ முத்தையன் கிடைப்பான் என்றே தோன்றுகிறது. அவன் சாகிற பிள்ளையில்லை."

நண்பர் வருந்தாமல் இருக்க மேலெழுந்த வாரியாகச் சொல்லிக் கொண்டிருந்தபோது திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் பிளாட்பாரத்தில் வந்து நின்றது. கிடுகிடு

வென நானும் அவசரமாக உள்ளே ஏறிக்கொண்டேன்.

சோடாவைப் பாதி குடித்தும் குடிக்காமல் கீழே வைத்துவிட்டு ஒருவர் என்னுடைய வண்டிக்குள் நுழைய முயன்றபோது 'இது மேல் வகுப்பு' என்றேன்.

"ஐயா ரொம்ப அவசரம். என் பெட்டி படுக்கை அங்ஙன இருக்கு. அடுத்த ஸ்டேஷன் யான் இறங்கி ஏறும்" என்று பாதி மலையாளம் பாதி தமிழில் சொன்னார்.

வண்டி ஊதிக்கொண்டு புறப்பட்டது. தென்றல் வீசும் பொதிகையையும் சிங்காரச் சிற்றருவியின் சீதத்தையும் மறந்து ரெயிலுக்குள் சிக்கிக்கொண்டேன்.

அத்தியாயம்—4.

தின்ன வரும் புலி

இவரால் நமக்குச் சகாயமுண்டு என்று நம்மில் சில பேர் எண்ணுவோம். அதன்படி நடப்பதுண்டு. அப்படித்தான் எனக்கு அந்த மலையாளியைக் கண்டதும் ஏற்பட்டது. இன்றில்லாவிட்டால் நாளைக்கு இவர் உதவி நமக்குத் தேவை என்பதை உள்ளுணர்வு சொல்லிற்று.

"நீங்கள் இங்கே இருந்துவிடுங்கள். கூடுதலாகக் கொஞ்சந்தானே காசு?"

"அவசியமில்லாமல் பணத்தை வீண் செய்வது தப்பு. ஏதோ நோய் நொடியாக இருந்தால் இந்த வகுப்பில் போக வேண்டியதுதான்"

இரண்டாம் வகுப்பில் போகிறவர்களுக்குப் பணம் என்ற வியாதி ஒன்று உண்டு. ஆகவே அதில் போகிறார்கள். ஊர் திரும்பும் டிக்கட் செலவை பாண்டித்துரை ஏற்றுக்கொள்ளுவார். நான் செலவு செய்ய வேண்டிய மொத்தத் தொகையை வரும்பொழுது இரண்டாம் வகுப்பிற்குச் செலவு செய்து விடுவேன். பரம்பரையாக இரண்டாம் வகுப்புப் பிரயாணிபோல நடித்துக்கொண்டதற்கு எனக்குச் சூடு கொடுத்துவிட்டார்.

"உங்களுக்கு என்ன தொழில்?"

"வைத்தியம் எனக்குத் தொழில். சற்று மாந்திரீகம், தெரியும். என்ன தெரிந்து என்ன செய்ய? நம் குழந்தைகள் நம்முடைய வித்தையை நம்பிப் பிழைக்க வரமாட்டார்கள்."

"மலையாள வைத்தியம் பெயரும் புகழும் பெற்றுள்ளதே. எதற்காக உங்கள் பிள்ளைகள் உங்களுக்கு எதிராக இருக்கிறார்கள்?"

"டாக்டர் என்ற பட்டத்தைத் தொங்கவிடலாம். இதற்காக எவ்வளவு அலைச்சல். எத்தனை பெயரிடம் சிபார்சு. என் வீட்டிலே யார் யாருக்கு வைத்தியம் செய்ய வேண்டியதிருக்கிறதோ? எத்தனை பெயர் எழுதினார்களோ, என்ன கடிதங்களோ? ஒன்றுந் தெரியவில்லை."

டாக்டர் படிப்புப் படிக்க மெடிக்கல் காலேஜில் இடம் பிடித்துத் தரவேண்டும் என்ப

தையும், பையன் தொல்லை செய்திருக்கிறான்; அதற்காக அவர் சிபார்சு தேடி ஊர் சுற்றுகிறார் என்னும் விபரமும் அறிந்தேன்.

''உங்களுக்கு வைத்தியம் செய்கிற பழக்கம் பரம்பரைத் தொழிலா? அல்லது உங்கள் காலத்திலே கற்றுக்கொண்டதா?''

''பரம்பரைத் தொழில். நீங்கள் எங்கே போய் வருகிறீர்கள்?''

அப்பாடா ஒரு மட்டும் என் மனத்துள்ளே குவிந்து கிடக்கும் சம்பவங்களைக் கேட்டாரே. நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.

ரெயில் எவ்வளவு வேகமாகப் போனாலும் நானும் என் கதையை அவ்வளவு வேகத்தில் சொல்லியாக வேண்டும். இல்லாது போனால் வைத்தியர் கோபாலவாரியர் தாம் இறங்க வேண்டிய மதுரையில் இறங்கிக் கொள்ளுவார். துயரங்களை அனுபவிக்கும் போது தான் பெரிதாகப் படுகிறது; அதைப் பிறருக்குச் சொல்லும் போது இன்பமாகத்தான் இருக்கிறது.

குற்றாலத்துக்கு வடக்கே காசுமீஸ்வரம் என்ற சிறு கிராமம் இருக்கிறது. இமயமலைக்கு வடக்கே காஷ்மீரம் எப்படியோ அப்படிப்பட்ட இடம். சிறு ஊர் ஆனாலும் குற்றாலத்துக் கூட்டம் நெருக்கடி அங்கே கிடையாது; குற்றாலத்தின் சுகங்கள் அனைத்தும் கிடைக்கும். அப்படிப்பட்ட சிறு கிராமத்தின் ஒதுக்கமான சிறு வீட்டிற்குள் சிம்னி விளக்கின் அருகாக உட்கார்ந்திருக்கிறாள்; அவள் முத்தையன் தாய். மகனைக் காணோமே யென்ற கவலை.

அவள் வீட்டு முன்னால் அரை மணிப் போது தாண்டி கார் வந்து நின்றது.

மகனைக் கண்டதும், ''வந்து விட்டாயா முத்தையா. காணவில்லையென்றால் எனக்குப் பயமாக இருக்கிறது.'' என்று சொன்னாள்.

முத்தையன் சிரித்துக் கொண்டு, ''ஏனம்மா என்னைப் புலி தூக்கிக் கொண்டுபோய் விட்டதாக எண்ணினாயா?'' என்றான்.

''போதுமே உன் அப்பாவை புலியடித்துக் கொன்றது ஒன்றே போதும். இத்தனை வருடங்கள் கழித்து அதை நினைத்தாலே என் உள்ளமும் உடம்பும் எரிகிறது. நீ அப

சகுனத்தைச் சொல்லாதே. வீட்டுக்குள் வா. உனக்காக உருளைக்கிழங்கு வருவல் செய்திருக்கிறேன்.''

உருளைக் கிழங்கு வருவல் என்றால் தேனீக்குத் தேன்போல முத்தையனுக்கு. அவன் சட்டையைக் கூட கழட்டாமல் உட்கார்ந்து விட்டான்.

மலைப்பாங்கான இடத்திலே பசிய வாழைக்கு என்ன பஞ்சமா?

தளதளவென்ற இலை போட்டுப் பறிமாறிக் கொண்டிருந்தாள் தாய். வழக்கத்திற்கு மாருக தாயின் முகத்திலே ஏதோ சோகம் படர்ந்திருப்பதைச் சாப்பிடும் முத்தையன் கவனித்தான். சாப்பிடும் வரை எதுவும் கேட்கவில்லை.

''கார் எங்கே போகிறது, முத்தையா?''

''ஜமீன்தார் பங்களாவிற்குப் போகிறது. இன்ருே நாளையோ திருச்சியிலிருந்து எங்களுக்கு வேண்டியவர் வருவார். தந்தி எந்தச் சமயமும் வரும். அதனுல் கார் அங்கே நிற்கும். உனக்கு என்ன வேண்டும் அம்மா?''

''உனக்குப் பாலும் பாயஸமுமாக அங்கே கிடைக்கலாம். நீ இங்கே வந்து ஒரு கவளம் உண்டால் எனக்குச் சோறு தண்ணீர் செல்லும். அதை மறந்து விடாதே.''

''வரமுடியா விட்டால் நானே வந்து சொல்வேன் அம்மா. அம்மா, நீ ஏன் வருத்தமாக இருக்கிருய்?''

கவலையில் நீந்தும் கண்கள் துல்யமாகச் சொல்லிவிட்டன. மகன் தன் மனதை அறிந்து கொண்டான். அவள் மனத்துள்ளே அடக்கி வைத்திருந்த உணர்ச்சியைச் சொல்லிவிட இது சந்தர்ப்பம்.

''முத்தையா, உன்னைப்போல நல்ல பிள்ளையைப் பெற்றதற்கு நான் சந்தோஷம் கொள்ளுகிறேன். உன்னிடமுள்ள முரட்டுத்தனங்கள் அனைத்தும் நல்ல வழியில் திரும்பிவிட்டது. ஏதோ நீ குடியும் குடித்தனமுமாக வரப் போகிறவன். அதற்கு இப்போது ஒன்றும் சொல்ல வில்லை.''

முத்தையன் தாய் சொல்லிக் கொண்டு வந்த காரியங்களுக்கு 'உம்' கொட்டிக் கொண்டிருந்தான்.

தாயின் கண்களிலே கண்ணீர் வடிந்தது.

''அட ஏம்மா, அழவேண்டும்? சொல்லு. நான் என்ன தப்புச் செய்துவிட்டேன். அம்மா நீ என்ன சொன்னுலும் கேட்டுக் கொள்ளுவேன். செண்பகத்தை மட்டும் மறந்து விடு என்று மட்டும் சொல்லாதே.''

''நீ செண்பகத்தையே கட்டிக் கொள். நேற்றுச் செண்பகம் வந்து என்னிடம் அழமாட்டாத குறையாக அழுதாள். வீட்டில் கூட அப்பா அம்மாவுக்குப் பிடிக்கவில்லையாம்.''

''நீ சரி யென்று சொல், அம்மா. அப்பால் இந்த உலகத்தில் எவன் எதிரே நின்ருலும், இதோ பாரம்மா, பிச்சுவா! இதற்கு அவன் இரையாக வேண்டும். உன் மனம் புண்படாதிருக்கவே இத்தனை காலமாக ஒத்திப் போட்டு வந்தேன். அம்மா உத்திரவு கொடுத்துவிட்டேன் என்று மூன்று முறை சொல்லுங்கள்.''

"உன் மனசிற்குப் பிடித்த பெண்ணைக் கட்டிக்கொள். நான் சொல்ல வந்தது......"

"பகீரதனைக் கங்கையைக் கொண்டு வரச் சொன்ன மாதிரி, அனுமானை மூலிகை மலையை கொண்டுவர சொன்ன மாதிரி, முதலியாரய்யாவை கவியின்பம் கொண்டு வரச்சொன்னதுபோல கொண்டு வந்து விடுவேன்."

முதலியாரய்யா என்று முத்தையன் குறித்தது, திரு. டி. கே. சி. என்று தமிழ் உலகம் போற்றும் ரசிகமணி அவர்கள். முத்தையனுக்கும் சரி, பாண்டித்துரைக்கும் சரி முதலியாரய்யாவிடம் வெகு பிரியம். குற்றாலத்தில் அவர் மீது யாருக்குத்தான் பிரியம் இல்லை. முத்தையன் பொழுது போகாவிட்டாலும், பொழுதை நல்ல விதமாக போக்குவதற்கும் அங்கே போவான். டி. கே. சி. க்குத்தான் வந்தவர் யாராக இருந்தால் என்ன? ஜமீந்தார் பாண்டித்துரை வந்தாலும் தமிழ் இன்பம் சொல்லுவார்கள்; அவரது கார் டிரைவர் வந்தாலும் இனிமையாகத் தமிழ் இன்பம் சொல்லுவார்கள்,

"நீ கூட ஐயா பேச்சைக் கேட்கிறாயா?" என்றாள் தாய் பார்வதி.

"அம்மா, நீ என்ன சொல்ல வருகிறாயோ அதை மறந்து விடாதே."

"மறக்கவில்லை, என்ன சொல்லி வந்தார்கள், முதலியாரய்யா."

"கோவிலில் சித்தர சபையில் ஒரு கூட்டம் நடந்தது. அதிலே சொன்னார்கள். பாசம் அன்பு என்று நமக்குள் இருக்கிறதாய் பம்மாத்துச் செய்கிறோம். மகனே, மக்களே என்று பாசாங்கு செய்கிறோம். உண்மையான அன்பைக் காண வேண்டுமானால் புலியிடம் பார்க்க வேண்டும். பசுவைத் தான் அன்பிற்கு உவமை காட்டுவார்கள். புலியைப் போல கொடுமையான பிராணி வேறு கிடையாது. தான் பெற்ற குட்டிக்கு அதைப் போல் அன்புடைய தாய் இல்லை. நமக்குக் காசு இல்லை. என்ன செய்து விடுகிறோம்? கடன் வாங்கலாம், ஏமாந்து யாராவது கொடுத்தால். மாடும் ஆடும் கடன் வாங்கும் பழக்கமில்லாத பிராணிகள். ஆகவே ஓடியாடி புல்லையும் தழையையும் காட்டிக் காட்டி குழந்தை வளர்ப்பைச் செய்துவிடுகின்றன. மெட்ராஸ் யுனிவெர்சிட்டியில் படித்த பட்டதாரிக்குத் தன்னையும் வளர்க்கத் தெரியாது; தன் குழந்தையையும் வளர்க்கத் தெரியாது; பரிதாபம்.

"நேற்று புலியொன்று குற்றாலத்தில் வட்டஞ் சுற்றியது. அது யார் வீட்டு ஆட்டையோ தூக்கிக்கொண்டு போய்விட்டது. மனிதர்கள் அப்...படியில்லை. இருந்து அருகாக அமர்ந்து

கெடுப்பார்கள். புலிகள் எவ்வளவோ உயர்வான பிராணிகள். ஒதுங்கி வாழ்கின்றன. அவை எம். ஏ., பி. ஏ., பட்டம் பெற்றிருந்தால் என்ன ஆகும்? புல்லைப் போட்டால் போதும். தின்பேன் என்று சொல்லும். மெலிந்து மார்பு கூடுகட்டி இறந்து போகும். படிப்பு அத்தனை-அதாவது பயனற்ற படிப்பு பயங்கொள்ளியாக ஆக்கி விடும். புலியைக் கொடுமைக்கு உள்ளாக உதாரணம் காட்டுவது தவறு. படித்தவர்கள் செய்கின்ற ரத்தக்களறியை விடவா பசித்த புலி செய்கிறது. பாவம், ஒரு ஆட்டுக்குட்டியோ கன்றுக்குட்டியோ கிடைத்தால் மற்றவர்களைப் புலி இம்சை செய்வதில்லை. படித்த புலிகள் மந்தை மந்தையாக ஒரு பாவமும் அறியாத பாலர்களை தொம்ஸம் செய்கிறார்கள்.''

''அப்படியே முதலியாரய்யா சொல்றது போலவே சொல்றயே முத்தையா.''

'அவங்க சொல்றது படிச்சவங்களுக்கு பதியுமோ, பதியாதோ. நிச்சயமாக படியாதவங்க மனசிலே நல்லாச் சாரல் மழைபோல குளிர்ச்சியாக விழுது.''

''சரி, அப்பாலே என்ன சொன்னாங்க?''

''நேற்று புலி வந்தது முதல், ஊரிலே யாருக்கும் ஊண் உறக்கம் இல்லை. எந்தக் கவலையுமின்றி மாடு கன்றுகள் உறங்குகின்றன. மனிதனைப்போல பயந்து சாகும்பிராணி சிருஷ்டியில் இல்லை. புலியைப்போல் தாயன்பு இருப்பவர்கள் நம்மில் எத்தனைபேர்? குழந்தைக்குப் பால் இல்லை. படித்த பெண்களுக்குப் பால் எங்கே இருக்கும்? ஏழை என்ன செய்ய முடியும். நாலு வீட்டில் கேட்கலாம். காசு கொடுத்து வாங்கலாம். கிடைக்காவிட்டால், குழந்தையை அதட்டியோ கிள்ளியோ தூங்க வைக்கலாம். புலி அப்படியா? அது குழந்தையைக் கிள்ளி சமாதானம் செய்யும் படிப்பைப் படிக்கவில்லை. காடு முழுக்க அதற்கு உரிய இரை தேடும். கிடைக்கவில்லையா? மேலும் மேலும் தேடும். மைல் கணக்காக வந்து தேடும். காட்டுக்குள் கிடைக்காத போது அது ஊருக்குள் இறங்கிவிடும். நிச்சயமாக அந்தப் புலிப் பெண் புலியாகத்தான் இருக்க வேண்டும். அல்லது தன் காதலிக்கு இரை தேடவந்த ஆண் புலியாக இருக்க வேண்டும். புலி தனக்காக ஒரு நாளும் ஊருக்குள் வந்து இரை தேடாது. பத்திருபது மைல் கூடப் போய் பெற்ற பாசத்திற்காகப் புலி இரை தேடும். இது சிருஷ்டி தத்துவம். நாம் இவ்வாறு குழந்தை வளர்க்க முடியுமா? அதற்குரிய பாசத்தைத்தான் கல்வி கொன்று குவித்துவிட்டதே. படித்தால் கர்வம் வருகிறது கனிவு வருகிற தில்லைதானே?''



"ஏண்டா முத்தையா. புலிக்குத் தாய் அன்பு அத்தனை உண்டென்பது உண்மையா?''

"ஆமாம் அம்மா. குழந்தையைக் கொல்லும் ஆபத்து வந்தால் உயிரையும் கொடுக்கத் தாய்ப் பிராணிகள் உலகத்தில் சண்டை செய்யும்.''

"நம் ஊருக்குள் வந்துள்ள புலியின் அட்டகாசம், அதன் குட்டிக்கு வேண்டிய இரையைத் தேடித்தானு ?''

"இரை தேடத்தானே நாமே பல மைல் போகிறோம். கடலையும் வனவனுந்திரத்தையும் கடந்து போகும்போது, காட்டில் இருக்கும் புலி நாட்டுக்குள் வருகிறது என்று முதலியாரய்யா சொன்னுர்கள்.''

"நானும் இப்போது அந்தப் புலியைப் போல மாறியிருக்கிறேன்.''

"ஏம்மா, எனக்குப் பெண் பார்க்க எங்காவது போகப் போகிருயா ?''

தாயும் மகனும் இரைந்து சிரித்துக்கொண்டனர். உள்ளூர இருந்த வருத்தம் சட்டென மறைந்தது.

> தேனை மிகுதியாய் உண்பது
>
> நல்லதல்ல ; தற்புகழை நாடுவ
>
> தும் புகழல்ல.

"அம்மா, ஜமீந்தாரய்யா தேடுவாங்க. போகிற வழியிலே புலி வந்துவிடாது. நீ பயமில்லாமல் தூங்கு.'' என்றவன் எழுந்தான்.

"உன்னிடம் சொல்ல வந்ததைச் சொல்ல வேண்டும், என்னை மறந்துவிடாமல் நினைவுபடுத்திக் கொள்ளச் சொல்லியவன், என்னவெனக் கேட்க நீ மறந்துவிட்டாயே.''

"ஆமாம். முதலியாரய்யா சொன்ன தத்துவத்திலே மனசு சிக்கிப் போய் மறந்துவிட்டேன்''

"நான் இப்போது சொல்லப் போவது புதிதான காரியம் இல்லை. முன்பே உனக்குச் சொன்னது தான். புலியின் அட்டகாசம் நடக்கிறது. மூன்று நான்கு தினங்களாக அது ஊருக்குள் புகுந்து எதையாவது தூக்கிப் போகிறது.''

"ஆமாம். நம் வீட்டில் என்ன இருக்கிறது ? மருந்துக்குக்கூட ஒரு கன்றுக்குட்டி இல்லையே. நீ கவலைப்படவேண்டாம்.''

"நீ இருக்கிருய். ஜாக்கிரதையாக இரு. உன் அப்பாவுக்குப் புலியென்ருல் நான்கூட வேண்டாம். அவர் வேட்டைக்குப் போய் பெரிய ஜமீந்தாருடன் புலி வேட்டையாடி ஆடி முடிவிலே புலியின் வாயிலே செத்துப் போனுர்.''

தாயின் தொண்டை விக்கிக் கண்ணீர் மல்குவதைப் பார்த்தான். அடுத்த கனம் தாய் சொல்ல வந்தது புரிந்துவிட்டது.

அம்மா. இப்புலி வேட்டைக்கு ஊரிலே ஆள் சேர்ந்தால் நான் போகக்கூடாது. போகவில்லை என்று தான் முன்பே சபதம் செய்திருக்கிறேனே, இன்று சத்தியமாக நான் போக மாட்டேன்.'' என்று வீரனைப் போலச் சொன்னான்.

அழுத தாயின் முகத்திலே அத்தனையும் மகிழ்ச்சியாக மலர்ந்தது. அன்பின் சக்தியை முத்தையன் தாய் அறிந்து கொள்ளவில்லை. அன்பு எப்போதும் தன்னைவிட வயதில் குறைவானவர்கள் மீதுதான் பாய்ந்துகொண்டிருக்கும், தண்ணீரைப் போல. மேடு ஏறிப் பாய்வதில்லை. தாய்க்கு குழந்தையிடம் மட்டற்ற அன்பு; ஆனால் தாயிடம் அன்பு காட்டுவதைவிடத் தன் குழந்தையிடம் தான் உலகம் என்றைக்குமே அன்பை ஓடவிடுகிறதென்பதை எங்கே கண்டாள்?

கார் காசுமீஸ்வரத்தை விட்டுக் குற்றாலத்துக்குப் போகும்வரைபார்த்துக் கொண்டிருந்தவள் நிம்மதியாகக் கதவைச் சாத்திக்கொண்டு படுத்தாள்.

சற்றுத் தொலையில், ''ஐயோ என்னுடைய, மான்குட்டி என் மான்குட்டி'' என்ற அலறல் கேட்டது. வேகமாக ஓட்டி வந்த முத்தையன் காரின் பிரேக்கைச் சாமர்த்தியமாகப் போட்டான்.

(தொடரும்)



இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட் மதராஸ்-1.

தொழிற்சாலை : சங்கர்நகர், திருநெல்வேலி ஜில்லா

IC: 424

நவநாகரீகமான தங்க, வைர நகைகளுக்கு
சிறந்த இடம்

P.A. ராஜு செட்டியார் பிரதர்
கடைத்தெரு......கோயமுத்தூர்

For Complete Range of Cotton Spinning Plant

TEXTOOL

CARDING ENGINES

DRAWING FRAMES

FLY FRAMES

RING SPINNING FRAMES

REELING MACHINES

BUNDLING PRESS

TEXTOOL DIESEL ENGINES

For Agricultural purposes.

197688

★

ENQUIRIES SOLICITED

TEXTOOL COMPANY LIMITED

Post Box No. 221, COIMBATORE (South India)

Telephone : 409 & 1409 Telegrams : "TEXTOOLCO"

அன்றே கொல்லும் ....

'சிங்கார வேலன்'

ஆலயத்திற்குள் திருடச் சென்ற ஒருவனை மற்றொருவன் பின் தொடர்ந்தான். தெய்வம் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தது!

நள்ளிரவு. பூட்டிக் கிடக்கும் இரும்புப் பெட்டிக்குள் சூழ்ந்து கிடக்கும் இருள் கலந்த சூன்யம் மாதிரி, எங்கும் கனத்த இருள். தொட்டால் ஒட்டிக் கொள்ளும் கருப்புமை மாதிரியானது அந்த இரவின் தெளிவான அமைதி.

ஊருக்கு நடுவிலிருக்கும் லிங்கேஸ்வரர் கோவிலின் வெளிப் பிரகாரத்தின் பெரிய மதிலைத் தாண்டி உள்ளே குதித்தான் இருளப்பன். அந்த உயரமான மதிலை ஒரு கணம் அண்ணாந்து நோக்கின அவனது கண்கள். அவனுக்குத்தான் மலையும் மடுவும் ஒன்றுயிற்றே. எந்த ஜீவனாவது விழித்துக் கொண்டு தன்னைப் பார்க்கிறதா வென்று சுற்று முற்றும் ஒரு முறை பார்த்துக் கொண்டான்; ஒருவரும் தென்படவில்லை. உலகமே உறங்கும் அந்த நேரத்தில் இருளப்பனைத் தவிர யார் விழித்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்.

இருந்தாலும் முன்ஜாக்கிரதையாயிருக்க வேண்டாமா? உள்ளத்தில் கள்ளமிருந்தால் உடலிலும் கொஞ்சம் நடுக்கம் தானே. மடியில் மறைவாகச் செருகி வைத்திருக்கும் கத்தியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான் இருளப்பன். மனதில் மட்டும் சிறிது பயத்தின் சாயை. உடலில் அதிக படபடப்பு இல்லை. கன்னம் வைப்பதும், களவாடுவதும் அவனுக்கு சர்வ சாதாரணம். நினைவு தெரிந்த நாளிலிருந்தே செய்து பழக்கப்பட்டு விட்ட தொழில்.

மனிதனின் கலையுணர்வையும், கற்பனைத்திறனையும் எடுத்துக்காட்டி விந்தையுடன் உயர்ந்து நிற்கும் உள் கோபுரம். கதவு பூட்டப்பட்டுக் கிடந்தது. கனத்த கதவு. பெரிய இரும்புப் பூட்டு.

இருளப்பனின் இடுப்பிலிருந்த கத்தி, அனுபவ மிகுந்த மனித பலத்துடன் பூட்டோடு போராடிற்று. சில நிமிட நேரம் தான்; பூட்டு வேறு, கதவு வேறாகிவிட்டது — தாயும் குழந்தையும் பலாத்காரத்தால் பிரிக்கப்படுவதைப் போல. கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான் இருளப்பன்.

உள்ளே, மனதை அச்சத்திலாழ்த்தும், காரிருளுடன் கலந்த பேரமைதி. தொடர்பு விட்டுவிட்டு வௌவால்கள் இயற்கைப் படபடப்பால் சப்தம் எழுப்பிக் கொண்டிருந்தன. சுற்றுப்புறமெங்கும் எண்ணெய்க் கசண்டின் உரிய வாடை.

மேலே நடந்தான்......

விநாயகர், சுப்ரமணியர், சண்டிகேஸ்வரர், பைரவமூர்த்தி, நாயன்மார்கள், நவக்கிரகங்கள் யாவற்றையும் கடந்து நடந்தான் இருளப்பன்.

கோவிலுக்கு நடுவில், சிற்ப வேலைப்பாடமைந்த தனிச் சிறப்பான மண்டபத்தில், லிங்க வடிவில் பிரதிஷ்டை ஆகியிருந்தது இந்தப் பிரபஞ்ச உற்பத்திக்குக் காரணமான மூலசக்தி. அங்கு வந்து நின்றான் இருளப்பன். அவன் கண்கள் மிகவும் கூரியவை. சுற்று முற்றும் பார்த்துக் கொண்டான். கம்பீரமான தோற்றமுடைய அந்த லிங்கத்தை

பார்த்தான்; எண்ணெய்க் கசண்டால் கருத்துக் கிடக்கும் அந்த லிங்கத்தின் மேனியில், திருநீற்றுப் பூச்சாக மூன்று பட்டைகள் தங்கத்தால் பொருத்தப்பட்டிருந்தன. லிங்கத்திற்குச் சற்று தள்ளி ஒரு பஞ்ச உலோகச்சிலை. அந்தப் பஞ்ச உலோகத்தில் தங்கமும் கலந்திருப்பதாக அவன் கேள்விப்பட்டிருக்கிருன்.

“இந்தப் பஞ்சஉலோகச் சிலையும், அந்த மூன்று தங்கப்பட்டைகளுமே போதும். நாலைந்து மாதங்கள் கவலையில்லாமல் வாழ்க்கை ஓடும்.”

“இந்தத் தடவை தங்கத்தை உருக்கவோ, விற்கவோ, வெங்கடாஜலபத்தனிடம் போகக்கூடாது.”

‘பேமானிப் பயல். திருட்டுச் சொத்து தானே என்று ஒன்றுக்குப் பாதியாக மதிப்பிடுகிருன், பேராசை பிடித்தவன்.”

“இனி உருக்குவதும், விற்பதும் நாமேதான்செய்ய வேண்டும் ...இந்தக் காலத்தில் எவனை நம்புவது!...”

“அதெல்லாம் இப்பொழுது எதற்கு? பிறகு பார்த்துக் கொள்ளலாம்.”

மனதில் பலவித எண்ணங்கள், வெளவாலின் ஓசைபோல் விட்டு விட்டு எழுந்தன. இருளப்பனின் கையிலிருந்த கத்தி இடுப்பில் ஏறிற்று. கைகள் பஞ்ச உலோகச் சிலையைப் பற்றின. அதைத் தூக்கி அப்புறம் வைத்துவிட வேண்டும்

என்ற தணிக்க முடியாத எண்ணம்.

முடிந்தால் தானே...அது சிறிய சிலே தான்! அவ்வளவு கனமா அதற்கு? மீண்டும் முயன்ருன் இருளப்பன். அசைக்கக் கூட முடியவில்லே. ஆச்சரியமாகி விட்டது அவனுக்கு.

ஒரு பெரிய அமானுஷ்ய சிரிப்பொலி கோவிலின் சுவற்றில் பட்டு எதிரொலித்தது. இரவின் தெளிவான அமைதியில் எவ்வளவு பயங்கரம்! நிஜம்தானு? வெறும் பிரமையா?

"யார் சிரிப்பது?"

கைகள் சிலேயைப் பற்றியபடியே இருந்தன. தலே மட்டும் திரும்பியது. கண்கள் நாற்புறமும் சுழன்று வந்தன. ஒருவரும் தென்படவில்லே.

"யார் சிரிப்பது?"

"யாரா...?"

"அப்படி யென்ருல்...?"

"நான் தான்...!"

"நான் தான் என்ருல் ...?"

"உன்னுடனேயே பிறந்து, உன்னுடைனேயே வளர்ந்து, என்றென்றும் உன்னுடனேயே இருக்கும் நான்...நான் தான்..."

நிசப்தத்திற்குப் பின் பயங்கரமாக மீண்டும் அந்தச் சிரிப்பொலி எதிரொலிப்பது போன்ற பிரமை. அச்சம் அவன் மனதில் உச்சநிலே அடைந்து விட்டது! உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. மறுபடியும் சிலேயைப் பெயர்க்கும் தன் முயற்சியில் ஈடுபட்டான். முடியவில்லே. நெற்றியில் அரும்பிய வியர்வை நீரை வழித்தெறிந்து விட்டு நிமிர்ந்தான் இருளப்பன்.

இரத்த ஓட்டமும் இருதயத் துடிப்பும் தடைபட்டு விட்டதைப் போன்ற பிரமை தோன்றிவிட்டது அவனுக்கு. அவன் மனதில் தோன்றிய பீதியால் உடலிலே தடுமாற்றம்.

அவனுக்கு அருகாமையில் முனியாண்டி நின்று கொண்டிருந்தான்.

முனியாண்டிக்கும் இருளப்பனுக்கும் பரம்பரை விரோதம். முதன் முதலில் தொழில் துறையில் புகைந்து கொண்டிருந்த விரோதம் இப்போது கொழுந்துவிட்டு எரியலாயிற்று! ஒரு சமயம் முனியாண்டிக்கு விரோதமாக பொய் சாட்சியம் சொல்லி, அவன் மூன்று வருஷம் சிறைத் தண்டனே பெறச் செய்தவன் இருளப்பன். அந்த மாதிரி சில்லரைத் தொந்தரவுகள் செய்ய விரும்பவில்லே முனியாண்டி! அடியோடு இருளப்பனே ஒழித்துக்கட்டிவிட வேண்டு மென்பது தான் அவன் விருப்பம்!

அதற்கு இதைவிட வேறு நல்ல சந்தர்ப்பம் எங்கே கிடைக்கப் போகிறது? - கொலேயை யார் பார்த்துக் கொண்டிருக்கப் போகிருர்கள். தெய்வம் பார்த்துக் கொண்டிருக்கும். அதனுல் என்ன? கடவுள் வந்து கோர்ட்டில் சாட்சி சொல்லப் போவதில்லே.

இருளப்பனுக்கு இன்னது செய்வதென்றே புரிய வில்லே. முனியாண்டி பழிதீர்த்துக் கொள்ளத் தவற மாட்டான் என்று அவனுக்கு நிச்சயமாகத் தெரியும். திரேகத்தின் சர்வாங்கங்களிலும் ஒருவித நடுக்கம். உடல் வலிமையில் அவனே விட மிஞ்சிய முனியாண்டியை, அவன் என்ன செய்துவிட முடியும்?

நேரத்தை வளர்த்திக் கொண்டிருக்க விரும்பவில்லே முனியாண்டி. "சதக்" என்ற ஓசையுடன் இருளப்பனின் நெஞ்சில் ஆழப்பதிந்தது அவனுடைய கத்தி. இரத்தம் பெருக்கெடுத்தது. சிறிது நேரத்துக் கெல்லாம் இருளப்பன் கீழே சாய்ந்தான். அவனுடைய கடைசி ஓலம் அந்த மூலஸ்தானமெங்கும் எதிரொலித்தது.

சிறிது நேரம் சித்த ஸ்தம்பிதத்துடன் நின்று கொண்டிருந்தான் முனியாண்டி. அந்த சவத்தின் நெஞ்சில் ஆழப்பதிந்திருந்த கத்தியை எடுத்தான். அதிலிருந்த சில துளி இரத்தம் சொட்டிற்று; அதை வழித்தெறிந்து விட்டுத் திரும்பினன்; அப்போது அவன் கண்ணில் பட்டது அந்த லிங்கத்தின் திருநீற்றுக் கோடுகளான மூன்று தங்கப்பட்டைகள்.

" ஆமாம், இப்பொழுதுதான் கைச் செலவுக்குக் கொஞ்சம் முடையான சமயமாயிற்றே, இதைப் பெயர்த்து எடுத்துக் கொண்டால் என்ன...?" முனியாண்டியின் சித்தத்தில் சபலம் தட்டிற்று. லிங்கத்தின் அருகில் நெருங்கினன். கண்களை நாலு திசையிலும் சுழலவிட்டான்.

உள்கோபுரக் கதவு திறந்தே கிடப்பது மூலஸ்தானத்தில் இருந்து பார்க்கும் அவன் பார்வையில் நன்ருகப்பட்டது. ஆனல், யாரோ அந்தக் கதவு வழியாக உள்ளே பிரவேசிப்பது போல் தெரிந்தது. யாரது...? உருவம் சரியாகத் தெரியவில்லையே.

முனியாண்டிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை; வருவது ஒரு ஆசாமியாக இருந்து விட்டால் கவலையில்லை: பச்சை இரத்தம் உலராத அந்தக் கத்தியே வருபவனுக்கும் ஒரு முடிவைச் சொல்லிவிடும். வருபவனுடன் வேறு சிலரும் வந்திருந்து, அருகில் எங்காவது பதுங்கியிருந்து மானை வலையால் அமுக்குவது போல் அமுக்கிவிட்டால்...! எதை எப்படிச் சொல்ல முடியும். அவன் மனதில் திகில் கவிந்தது.

"இங்கிருக்கும் ஒரே எண்ணெய் விளக்கையும் அணைத்து விட்டால், ஒரே இருள் மயமாகிவிடும் இந்தக் கோயில். அந்த இருளில் வருபவன் கண்ணுக்குப் புலப்படாமல் எப்படியேனும் தப்பிவிடலாம்..." என்ற எண்ணம் தைரியத்தைக் கொடுத்தது அவனுக்கு.

கையிலிருந்த இரத்தம் தோய்ந்த கத்தியால் எரிந்து கொண்டிருந்த விளக்கின் திரியை எண்ணெய்க்குள் தள்ளி அமுத்தினன். விளக்கு அணைந்து விட்டது. எங்கும் காரிருள்.

எங்காவது சற்று நேரம் பதுங்கியிருக்கலாம் என்ற எண்ணத்துடன் ஓரடி எடுத்து வைத்தான் முனியாண்டி. வெட்டிச் சாய்த்த மரம் போன்ற இருளப்பனின் பிரேதம் கிடப்பதை அவன் அந்த நேரத்தில் உணரவில்லை. கால் இடறிவிட்டது. எதையாவது பிடித்துக் கொண்டு நிலைமையைச் சமாளிக்க முயன்ருன் முனியாண்டி. ஆனல், அந்த இருளில் ஒன்றுமே அவன் கைக்குள் அகப்படவில்லை. 'தடால்' என்று கீழே விழுந்தான். ஆம்! சற்றும் எதிர்பாராத விதமாய் ஆண்டவனுக்குத் தீபாராதனை செய்வதற்காக உபயோகப்படும் குடை விளக்கின் கூரிய பாகம் அவன் நெஞ்சில் ஆழப் பதிந்து விட்டது. பீரிட்டடிக்கும் இரத்தத்துடன் ஆண்டவன் காலடியின் கீழ் விழுந்து புரண்டான் முனியாண்டி.

"யார் என்னைக் குத்தியது?... யார் குத்தியது? என்னைக் குத்தியது யார்?" திரும்பத் திரும்பத்

மன துக்கமுள்ளவனுக்கு, பாட்டுகளைப் பாடுகிறவன், குளிர் காலத்தில் வஸ்திரத்தைக் களைகிறவனைப் போலவும் வெடிப்பின் மேல் வார்த்த காடியைப் போலவும் இருப்பான்.

தன்னையே கேட்டுக் கொண்டான். எங்கிருந்து பதில் வரும்? அளவுக்கு மீறிய இரத்தம் வெளிப்பட்டு விட்டதால் ஏற்பட்ட தளர்ச்சியையும் சமாளித்துக் கொண்டு, தட்டுத்தடுமாறி எழுந்து நின்றான். சுற்றுமுற்றும் பார்த்தான். பாழும் இருள் தான் பரவிக் கிடந்தது.

"வேற்று மனிதர்கள் வந்ததற்கறிகுறியாக சிறு காலடி அரவம்கூடக் கேட்கவில்லையே..."

"அப்படியானல்......"

"கடவுளே கொலைக்குக் கொலையாக..."

"இருக்காது. அது அடிபெயர முடியாத கற்சிலை."

"மனிதனைப் பார்க்கும் பொழுது அவன் தசையும் எலும்பும் கொண்ட வெறும் மாமிசப் பிண்டம் என்று பார்ப்பதில்லை. கல் என்பவனுக்கும், கடவுள் என்பவனுக்கும் பார்வையில் தானே பேதம்!"

"அப்படியானல் கடவுளே வந்து...?"

"இல்லை...நீ நினைத்துப் பார்க்காத—நீ எதிர்பார்க்காத, இந்தச் செயல், உன் பிரயத்தனத்திற்கும், சக்திக்கும் மீறி நடந்துவிடக் காரணம்? உன்னையும் மீறிய ஒரு சக்தியின் இயக்கமின்றி வேறென்ன? அதை ஏன் கடவுளென்று சொல்லக் கூடாது...? நம்பக்கூடாது?"

"ஐயோ...கடவுளே. என்னை மன்னித்துவிடு. நான் செய்த பாவங்களை யெல்லாம் மன்னித்து விடு..."

அதற்கு மேல் முனியாண்டியால் நிற்க முடியவில்லை. கண்கள் இருண்டன. உடலில் அசாத்தியமான தளர்ச்சி. இறுதி மூச்சு. அடியற்ற மரம்போல் சாய்ந்தான். சற்று நேரத்துக்கு முன்பு, ஒரே மூச்சில் எட்டுப்பேரை அடிக்கும் கட்டுடல் கொண்ட காளைதான் முனியாண்டி. இப்போழுது...எரிக்கவோ, புதைக்கவோ வேண்டிய ஒரு பிரேதம்.

அரசன் தான் அன்று கொல்வான். ஆனல் நின்று கொல்லும் தெய்வமும் அன்றே கொன்று விட்டது.

டெலிபோன்: 61 தந்தி விலாசம்: "ஆண்டவர்"

பழனி ஆண்டவர் மில்ஸ் லிமிடெட்

உடுமலைப் பேட்டை

நேர்த்தியான பருத்தி
ஸ்டேபிள் பைபர் நூல்
உற்பத்தியாளர்கள்

20 நிர் முதல் 100 நிர் வரை

டெக்ஸ் மார்க்	634
இயங்கும் கதிர்கள்	47,600

மானேஜிங் ஏஜண்ட்ஸ்

பாக்ய லெக்ஷ்மி அண் கோ.,

உடுமலைப் பேட்டை.

போன் : 203 தந்தி : "TRANSPORT"

சண்முகம் டிரான்ஸ்போர்ட்
பஸ் & லாரி சர்வீஸ்

அருப்புக்கோட்டை



எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்கு தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.

1. அருப்புக்கோட்டை To ராஜபாளையம்
2. அருப்புக்கோட்டை To தூத்துக்குடி
3. விருதுநகர் To பெருநாழி
4. விருதுநகர் To கடலாடி (Via) முதுகுளத்தூர்
5. மதுரை To சாயல்குடி
6. மதுரை To அருப்புக்கோட்டை

பொதுஜனங்களும் வியாபாரிகளும் எங்களை ஆதரிக்குப்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

போன் : 512 - பிராஞ்சு: மதுரை - தந்தி : "TRANSPORT"

மாடி அறை

ஜி. கே. பொன்னம்மாள்.

'லேடி டைப்பிஸ்ட்'க்கு மாடி அறை கிடைத்தது. ஆனால் அவள் சித்தப்பா உடன் வந்ததும்......

காரியாலய கடிகாரம் ஒருமுறை அடித்து ஓய்ந்ததும் நாகராஜன் மேஜை மேலிருந்த காகிதக் கட்டுக்களை நகர்த்தி விட்டு நிமிர்ந்து பார்த்தான். மற்ற குமாஸ்தாக்கள் டிபன் சாப்பிடப் போயிருந்தார்கள். பக்கத்து மேஜையில் 'லேடி டைப்பிஸ்டு' ஜயந்தி மட்டும் உட்கார்ந்திருந்தாள்.

"நீங்கள் டிபன் சாப்பிடப் போகவில்லையா? நேரமாகி விட்டதே" என்றான் நாகராஜன்.

"சரியாகப் பன்னிரண்டு மணிக்கே வேலைக்காரப் பையனைச் சாப்பாடு கொண்டு வரச் சொல்லியிருந்தேன். அவன் இன்னும் வரவில்லை; இன்றைக்குவயிற்றைக்காயப் போடவேண்டியதுதான் போலிருக்கிறது. பக்கத்து ஹோட்டலிலிருந்து காப்பி மட்டும் வரவழைத்துச்சாப்பிடப் போகிறேன்" என்று இனிமையாகப் பதிலளித்தாள் ஜயந்தி.

"நன்றாக இருக்கிறது. இதோ எனக்குச் டிபன் வந்துவிட்டது. ஆட்சேபணை இல்லா விட்டால் நீங்களும் சாப்பிடலாம்" என்று அழைத்தான் நாகராஜன்.

அதிகமாகப் பிகு பண்ணிக் கொள்ளாமல் ஜயந்தி சாப்பிட இசைந்தாள். நாகராஜன் 'டிபன் காரியரை' திறந்தான். இட்டிலியும் தேங்காய்ச் சட்டினியும் திவ்யமாக இருந்தன. ஜயந்தி ரசித்துச் சாப்பிட்டாள். அழகிய வளையல் அணிந்த கையால் அவள் நிதானமாகச் சாப்பிடும் அழகைப் பார்த்துக் கொண்டே இருந்தான் நாகராஜன். காரியாலயத்திலிருக்கும் மற்ற குமஸ்தாக்களிடம் போல் அல்லாமல் தன்னிடம் மட்டும் ஜயந்தி, தாராளமாகப் பழகுவது நாகராஜனுக்கு ரொம்பவும், பெருமையாக இருந்தது. அவள் ஒரு நாள் வரா விட்டால் காரியாலயமே சூன்யமாகத் தோன்றும் நாகராஜனுக்கு.

வழக்கமாக நேரம் கழித்து வந்து கொண்டிருந்தவன் ஜயந்தி வந்த பிறகு, 'டிப் டாப்' ஆக உடை

உடுத்துக் கொண்டு, சிக்கிரமே காரியாலயத்துக்கு வர ஆரம்பித்து விட்டதைக் கண்ட மற்ற குமாஸ்தாக்கள் ஜாடையாக அவனைக் கேலி செய்தார்கள்.

"டிபன் ரொம்ப நன்றாக இருக்கிறது மிஸ்டர் நாகராஜன். இதை உங்கள் மனைவியே செய்தார்களா?" என்ற குரல் நாகராஜனைச் சிந்தனை உலகிலிருந்து விழிப்புறச் செய்தது.

இந்த அருமையான சந்தர்ப்பத்தில் தன் மனைவியைப் பற்றிப் பேசவே அவனுக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும் மரியாதைக்காக, "ஆமாம். என் மனைவியே செய்தது தான். அவளுக்குச் சமையலைத் தவிர வேறு என்ன தெரியும்?" என்றான் கேலிக் குரலில்.

"குடும்பப் பெண்களுக்கு வேறு என்ன தெரிய வேண்டும்? வீட்டு நிர்வாகமே அவர்களுக்குப் போதுமே. இதோ, என்னைத்தான் பாருங்களேன். ஒரு சாதம், கறி பண்ணக்கூடத் தெரியாது. சமையற்காரன் தயவு இல்லையென்றால் நான் பட்டினியாக இருக்க வேண்டியதுதான்" என்றாள்.

இந்தப் பேச்சை வளர்த்த இஷ்டமில்லாததால் நாகராஜன் வேறு விஷயத்தைப் பற்றி ஆரம்பித்தான்.

"காலையில் தலைவலி என்றீர்களே, இப்பொழுது எப்படி இருக்கிறது?" என்றான்.

"இப்பொழுது கொஞ்சம் பரவாயில்லை. நான் இருக்கும் அறையில் காற்று வசதியே கிடையாது. அந்தக் கஷ்டம்தான் என்னால் தாங்க முடியவில்லை. அதனாலேதான் என்றைக்கும் தலைவலியால் அவதிப்பட வேண்டியிருக்கிறது. வேறு இடமும் கிடைக்கவில்லை. எனக்கு ஒரு நல்ல அறை பார்த்துக் கொடுங்களேன்" என்றாள் கெஞ்சும் குரலில்.

நாகராஜனுக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. "என் வீட்டு மாடியில் ஒரு பேஷான அறை இருக்கிறது. அதை உங்களுக்குக் காலி செய்து தருகிறேன். நல்ல காற்று. எல்லா வசதிகளும் இருக்கும். நாளைக்கே வந்து விடுங்கள்" என்றான்.

ஜயந்திக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. இன்று சாயந்தரமே வந்து அறையைப் பார்க்கிறேன்" என்றாள்.

அன்று மாலை ஒரு புது தெம்புடன் நாகராஜன் வீட்டுக்குப் புறப்பட்டான். வழியெல்லாம் ஜயந்தியைப் பற்றிய நினைவுகள்தான்.

வீட்டுக்குள் நுழைந்ததும் குழந்தைகள், பாலுவும் கீதாவும் வந்து காலைக் கட்டிக்கொண்டு, "அப்பா மிட்டாய் வாங்க அணா கொடு" என்று கெஞ்சினார்கள். சமையற்கட்டிலிருந்து வந்த புகை கண்ணை உறுத்தியது.

"லட்சுமி, இதுகளைக் கொஞ்சம் கூப்பிட்டுக் கொள். அடுப்பு ஏன் இப்படி அழுது வடிகிறது? சேச்சே, என்ன வீடு இது! மனுஷனுக்கு நிம்மதியே இல்லாமல்?" என்று இரைந்தான்.

புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்தபடியே லட்சுமி வந்தாள். "விறகு ரொம்ப ஈரமாக இருக்கு. நேற்றுப் பெய்த மழையில் வேறு நனைந்து விட்டது. இருங்கள். காபி கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

எண்ணெய் வழிந்த முகமும், அழுக்குப் புடவையுமாக லட்சுமியைப் பார்க்கப் பார்க்க நாகராஜ

வாயைச் சுத்தமாக வைத்துக் கொள்ள விரும்புகிறவன் ஒரு போதும் கெட்ட வார்த்தை சொல்லமாட்டான்.

னுக்குக் கோபம் கோபமாக வந்தது. இப்படி சதா சமையற்கட்டையே சரணம் என்றிருக்கும், பட்டிக்காட்டுப் பெண்ணைத் தன் தலையில் கட்டி வைத்த தாய் தகப்பனுரை மனமாரச் சபித்தான்.

அடுத்தாற்போல் ஜயந்தியும்தான் இருக்கிருள். என்ன அழகு! என்ன படிப்பு! பிறருடன் பழகுவதில்தான் எத்தனை மேன்மை? என்றெல்லாம் நினைத்துப் பெருமூச்சு விட்டான்.

சட்டையைக் கழட்டி விட்டு நாற்காலியில் உட்கார்ந்தபடி காபியைச் சாப்பிட ஆரம்பித்தான்.

"இதோ பாருங்கள். உங்களுக்குப் பிடிக்குமே என்று, வெங்காய அடை பண்ணியிருக்கிறேன்......" என்ற மனைவியை இடை மறித்து, "ஒன்றும் வேண்டாம். சதா சமையல் சாப்பாடு. உன்னைக் கலியாணம் செய்துகொண்டு வேறு எதைக் கண்டேன் நான்! சீக்கிரம் மாடி அறையைக் காலி பண்ணு. அங்கே இருக்கும் மேஜை நாற்காலியை எல்லாம் கீழே கூடத்தில் போட்டு விடலாம்" என்ருன்.

இதைக் கேட்டு லட்சுமி அயர்ந்தே போனாள். "எதற்காக இந்த ஏற்பாடெல்லாம்? யார் வரப் போகிறார்கள்?" என்றெல்லாம் சர மாரியாகக் கேள்விகளைக் கேட்க ஆரம்பித்து விட்டாள்.

"எங்கள் காரியாலய லேடி டைபிஸ்டுக்கு அந்த அறையை வாடகைக்கு விடப் போகிறேன். மாதம் இருபது ரூபாய் வாடகையும் கிடைக்கும்" என்றான் நாக ராஜன்.

இதைக் கேட்டதும் லட்சுமிக்குக் கோபம் வந்து விட்டது.

"ரொம்ப நன்றாக இருக்கிறது உங்கள் யோசனை! வீட்டில் காற்று வசதி அந்த அறையில் மட்டும்தான் உண்டு. குழந்தைகளை எங்கே படுக்க வைக்கிறதாம்? நீங்கள்தான் எங்கே படுப்பீர்கள்? இந்த இருபது ரூபாய்க்காக எவ்வளவு கஷ்டம்? அதுவும் ஒரு பொம்மனாட்டி மட்டும் தனியாகக் குடியிருக்கிறதென்றால் அது உங்களுக்கும் கெட்ட பெயர்! விட்டு விடுங்கள் இந்த எண்ணத்தை!" என்றாள்.

"நிறுத்திக்கொள் லட்சுமி. எல்லாம் எனக்குத் தெரியும். என் பெயர் கெட்டு விடுமே என்று நீ கவலைப்பட வேண்டாம். உன் பொறாமைக் குணம்தான் அப்படி நினைக்கச் சொல்லுகிறது. நான் ஒன்று நினைத்தால் அதை நடத்தி முடித்து விடுவேன். நாளை அந்த 'டைபிஸ்ட்' குடித்தனம் வரத்தான் போகிறாள். சீக்கிரம் அறையைக் காலி பண்ணி வை" என்றான் நாக ராஜன் அதிகாரத்துடன்.

லட்சுமியும் தன் பிடிவாதத்தை விடவில்லை. "முடியவே முடியாது. அவள் இந்த வீட்டில் தங்கவே கூடாது. இதை நான் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன்" என்று ஆவேசம் வந்தவள் போல் கூச்ச லிட்டாள்.

'பளா'ரென்ற ஒரு அறை அவள் குரலை அடக்கியது. தலை சுற்றுவது போலிருந்தது. அந்த அறையின் வேகத்தில் அவள் தள்ளாடியபடி கீழே உட்கார்ந்தாள். அவள் கண்களில் கண்ணீரைக் கண்ட குழந்தைகளும் கூடவே அழுவதற்கு ஆரம்பித்தன. நாகராஜனுக்கு ஒரே எரிச்சலாக இருந்தது.

"நான் உள்ளே வரலாமல்லவா?" என்ற ஜயந்தியின் இனிமையான குரல் நாகராஜனின் கோபத்தைத் தணித்தது.

"ஆகா, வாருங்கள். உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். மாடிக்குப் போகலாம்" என்று நிலைமையைச் சமாளிப்பதற்காக ஜயந்தியை மாடிக்கு அழைத்துக்கொண்டு சென்றான்.

அறையை ஜயந்தி நன்றாகப் பார்த்தாள். ஜிலு ஜிலுவென்ற காற்று, நல்ல வெளிச்சம்; அறை அவளுக்கு ரொம்பவும் பிடித்து விட்டது.

"மிஸ்டர் நாகராஜன், இந்த உதவியை நான் மறக்கவே மாட்டேன்" என்றாள் ஜயந்தி நன்றிப் பெருக்குடன்.

"இதெல்லாம் என்ன பெரிய காரியமா? இருக்கட்டும். காபி கொண்டுவரச் சொல்லுகிறேன். அடேய் பாலு! அம்மாவிடமிருந்து காபி வாங்கிக் கொண்டு வாடா" என்று குரல் கொடுத்தான்.

சற்று நேரம் இருவரும் காரியாலய விஷயங்களைப் பேசினார்கள்.

> சண்டைக் காரியோடு ஒரு பெரிய வீட்டில் குடியிருப்பதைக் காட்டிலும், வீட்டின் மேல் ஒரு மூலையில் தங்குவதே நலம்.

ஆவி பறக்கும் காபி வந்தது. தட்ட முடியாமல், ஜயந்தி காபியைச் சாப்பிட்ட பின் விடை பெற்றுக்கொண்டாள். மறுநாள் ஞாயிற்றுக்கிழமையாதலால் அன்று குடித்தனம் வர ஏற்பாடாயிற்று.

விடை பெற்றுக் கொண்டபோது ஜயந்தியின் முகத்தில் தோன்றிய இளம் புன்னகை நாகராஜனை நிலைகுலையச் செய்தது. எத்தனை அழகான பெண் என்று வியந்தான்.

மட மடவென்று மாடியறையைக் காலி செய்தான். லட்சுமி இன்னும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டுதான் இருந்தாள். நாகராஜன் அவள் அழுகையை லட்சியம் செய்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. அன்றிரவு இருவருமே சாப்பிடவில்லை.

நாகராஜனின் பிடிவாத குணத்தை நினைத்து லட்சுமிக்கு அடக்க முடியாத ஆத்திரம் வந்தது. கடைசியாக ஒரு பாணத்தைப் பிரயோகித்தாள்.

"இதோ பாருங்கள். நாளை காலை வண்டியில் நானும் குழந்தைகளும் என் அம்மாவிடம் போகிறோம். நீங்கள் இங்கே அந்த டைப்பிஸ்டுடன் ஆனந்தமாகக் கூத்தடியுங்கள். ஊர் சிரிக்கட்டும். எனக்கு இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது" என்றாள் தீர்மானமாக.

"தாராளமாகப் போயேன். பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகமே அஸ்தமித்து விடுமோ? ஹோட்டல் இருக்கிறது சாப்பாட்டுக்கு. உன் ரோதனை இல்லாமல் நிம்மதியாக இருக்கலாம். இப்பவே மூட்டை கட்டு. காலை வண்டியில் அனுப்பி விடுகிறேன்" என்றான் நாகராஜன்.

இந்தச் சொற்கள் லட்சுமியின் வேதனையை அதிகமாக்கியது. சீ! இப்படியும் ஓர் ஆண்பிள்ளை அன்பு இல்லாமல் பேசுகிறாரே—என்று மனம் நொந்தாள்.

இரவு முழுவதும் இருவரும் தூங்கவே இல்லை.

ஜயந்தியுடன் நாள் முழுவதும் பேசிக் கொண்டிருக்கலாம். இருவரும் சேர்ந்தே ஆபீசுக்குச் செல்லலாம். இந்தப் பாழாய்ப் போன சட்டம் மட்டும் இல்லாவிட்டால் ஜயந்தியைக் கலியாணமே செய்து கொண்டு விடலாம்; என்றெல்லாம் நினைத்து இன்பத்தில் மிதந்து கொண்டிருந்தான் நாகராஜன்.

கணவனின் செயலை நினைத்து மனம் பொருமிக் கொண்டிருந்தாள் லட்சுமி. பொழுது விடிந்ததுமே மூட்டை முடிச்சுக்களெல்லாம் தயாராகி விட்டன. வாசலில் வண்டியும் வந்து விட்டது. கடைசியில் ஸ்டேஷனுக்கும் வந்து ரயிலிலும் ஏறி விட்டாள். ஒவ்வொரு கணமும் "லட்சுமி! ஊருக்குப் போகவேண்டாம். இறங்கிவிடு" என்று தன் கணவன் ஒரு வார்த்தை சொல்ல மாட்டானா என்று ஏங்கினாள். ரயில் ஓடும் வேகத்தை விட அவள் சிந்தனை வேகமாக ஓடியது. "தாயார் வீட்டில் எத்தனை நாட்கள்தான் இருக்க முடியும்? "ஏண்டி இப்படி திடீரென்று புறப்பட்டு வந்தாய்?" என்று அம்மா கேட்டால் என்ன பதில் சொல்வது? நாம் கணவனுடன் இருந்தாலும் அவர் ஓரளவு கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வார். இப்பொழுது அந்தப் பெண்ணுடன் இஷ்டப்படி கும்மாளம் போடுவாரே! இதற்கு நாமே இடம் கொடுத்தாற்போல் அல்லவா ஆகி விட்டது? ஆத்திரத்தில் நமக்கு நாமே தீங்கு இழைத்துக் கொண்டு விட்டோமே!" என்று பலவாறாக எண்ணி வருந்தினாள்.

ஸ்டேஷனிலிருந்து வீட்டுக்கு வந்த நாகராஜன் குழாயடியில் நன்றாக ஸ்நானம் செய்தான். குளிர்ந்த நீர் அவனது மனப் புகைச்சலைக் கொஞ்சம் தணித்தது. சந்தன சோப்பின் மெல்லிய மணம் சுகமாக இருக்கவே ஒன்றுக்கு இரண்டு

தடவை சோப்பை தேய்த்துக் குளித்தான். தும்பைப் பூ போல் சலவை செய்யப்பட்ட வெண்மையான உடைகளை அணிந்து கொண்டு கண்ணாடி முன்னால் நின்று நிம்மதியாகத் தலையை வாரிக் கொண்டான். வீடு நிசப்தமாக இருந்தது. சமையற்கட்டில் புகையும், குழந்தைகள் அழுகைக் குரலும் இல்லாதது அவனுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. குஷியாக ஒரு பாட்டை முணுமுணுத்தபடி கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டு.

அப்பொழுதுதான் இதுவரையிலும் ஒன்றும் சாப்பிடாதது அவனுக்கு நினைவு வந்தது. கையில் "பிளாஸ்க்கை" எடுத்துக் கொண்டு பக்கத்திலிருக்கும் கிருஷ்ணா கபேயில் நுழைந்து இரண்டு இட்டிலி, பொங்கல், காபி இத்தனையும் சாப்பிட்டுவிட்டு, ஜயந்திக்கு இருக்கட்டுமென்று இரண்டு கப்பு—ஸ்பெஷல் காபியைப் பிளாஸ்க்கில் ஊற்றிக் கொண்டான்.

வெளியே நாயர் கடையில் வெற்றிலையும் வாசனைப் பாக்கும், வாங்கி மென்றுக்கொண்டே வீட்டுக்கு வந்தான்.

அதே சமயம் வாசலில் வந்து நின்ற 'டாக்ஸி'யிலிருந்து ஜயந்தியும் ஒரு பெரியவரும் இறங்கினார்கள்.

காலை இளம் வெயிலில் அவளைப் பார்த்தபோது, அன்று மலர்ந்த வெள்ளை ரோஜாவின் நினைவு வந்தது நாகராஜனுக்கு.

அழகான தோல் பெட்டிகளை எடுத்து வராந்தாவில் வைத்தான் டிரைவர்.

"மாடி அறைக்கே போய் விடலாம் வாருங்கள்" என்று நாகராஜன் குதூகலமாக அவர்களை வரவேற்றான்.

ஜயந்தி வீட்டுக்குள் நுழைந்ததும், "உங்கள் மனைவி எங்கே காணோம்? குழந்தைகளையும் காணவில்லையே" என்றாள்.

நாகராஜன் அசட்டுச் சிரிப்பு சிரித்தபடி, "அவர்கள் ஊருக்குப் போயிருக்கிறார்கள்" என்று விடையளித்தான்.

"அப்படியா—இதை நீங்கள் நேற்று சொல்லியிருந்தால் எவ்வளவோ—நன்றாக இருக்குமே. அறையை, எனக்காக நான் கேட்கவில்லை. சித்தப்பாவுக்காகத்தான் கேட்டேன். நான் ஆபீசுக்கு வந்து விட்டால் அவருக்குத் தனிமையில் பொழுதே போகிறதில்லையாம். அத்துடன் அவருக்கு 'ஆஸ்துமா' வியாதியும் உண்டு. நல்ல காற்றில்லாத அறையில் படுத்தால் தூக்கம் வராமல் கஷ்டப்படுவார். எனக்கு என் அறையே போதும்' என்றாள்.

நாகராஜனுக்கு ஏமாற்றத்தால் தலை சுற்றுவது போலிருந்தது. தன் உணர்ச்சியை மறைத்துக் கொள்ள முயன்றான்.

"வீட்டில் குழந்தைகளெல்லோரும் எப்பொழுது திரும்புவார்கள்?" என்று கேட்டார் பெரியவர்.

"அவர்கள் வர நாலு மாதமாகும்" என்றான். கிழவருக்கு அறையைக் கொடுக்க இஷ்டப்படாமல் அவன் குரல் கிணற்றிலிருந்து வருவது போலிருந்தது.

"நாம் திரும்பி விடலாம் அம்மா. எனக்கு இங்கு தனியே இருக்கப் பிடிக்கவில்லை. சிரமத்துக்கு மன்னித்து விடுங்கள் சார்" என்று விடை பெற்றுக் கொண்டார் பெரியவர்.

அவர்கள் கண்ணிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டே இருந்தான் நாகராஜன்.

சிந்தனையிலிருந்து விடுபட்டவனாகப் போஸ்டாபீசுக்கு விரைந்து, மனைவிக்கு இரண்டே வரியில் ஒரு கடிதம் எழுதினான்.

"மாடி அறையில் யாரும் குடித்தனம் வரவில்லை. உடனே வந்து சேர்."

அதன் பிறகு நாகராஜனின் இதயத்திலிருந்து நிம்மதியான பெரு மூச்சொன்று எழுந்தது.

Telegrams : 'RANGAVILAS'   Telephone : 17 & 817

SRI RANGA VILAS
GINNING, SPINNING & WEAVING MILLS LIMITED.

(Incorporated in 1922)

PEELAMEDU P. O.   COIMBATORE

SPINDLES	: :	36,368
LOOMS	: :	88

SPINNERS OF:

Superior kinds of yarn from 2^s to 80^s counts

&

WEAVERS OF:

Grey Gada and Dhoties.

Managing Partner :—

G. N. VENKATAPATHY.

நீடித்து உழைக்கும்

பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணாடி சாமான்கள், பீங்கான், எனமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவிதமான சாமான்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவினிங் பஜார், பி. டி. மதராஸ்.

S. SANTHOSA NADAR & SON

1/4. EVENING BAZAR .... PT. MADRAS.

BAROOL

கிளை ஆபீஸ்: 23, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3
37, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

Telegrams : 'PIONEER' Coimbatore.

Telephones : 160, 361.

THE COIMBATORE PIONEER MILLS LTD.,

P. B. NO. 4.

PEELAMEDU :: COIMBATORE.

FOUNDER PARTNERS:

Messrs. P. S. G. & SONS.

No. of Spindles 27,262

Manufacturing 60's, 80's and 100's Combed Yarn

Staff Employed : 41.

Labourers Employed 934.

—:o:—

'B' Mills, Perianaickenpalayam

No. of Ring Spindles ... 22,000

Manufacturing 20's to 40's Yarn.

Staff Employed: 6.

Labourers Employed 320.

Practical Training Being Given to :

DIPLOMA STUDENTS IN:

L.T.M., L.M.E., L.E.E.,

உண்மையில் உறுதியாக,

குறைந்த செலவில்

உங்கள் வீட்டை கட்ட

இதோ நவீன முறை!



நிரந்தரமானது
இணைக்க சுலபம்
பார்வைக்கு
திருப்தி
கொடுக்கும்

சிக்கனமானது
ஜலம் உட்புகாது
தீயை தடுக்கக்
கூடியது

"EVEREST"
ASBESTOS CEMENT
TRAFFORD SHEETS



A.C. ட்ராபோர்டு &
ப்ளெயின் ஷீட்டுக

A.C. மழை ஜல பைப்புகள்

M. KUPPUSAWMY NAICKER

எம். குப்புசாமி நாயக்கர்

ஸ்டாக்கிஸ்டுகள்: ஆஸ்பெஸ்டாஸ் ஸிமெண்ட் லிமிடெட்

15, செம்புதாஸ் தெரு, சென்னை-1

வள்ளியின் உள்ளம்

கு. ப. சேது அம்மாள்

அத்தியாயம் 3

தண்ணீரும் தாமரையும்

சோமுவும் துரையும் கொய்யாத் தோப்பை அணுகும் பொழுது பரிதி மலைவாயிலில் மறையும் நேரம்.

அந்தி சூரியனின் பொன்கதிர்கள் இயற்கைக்கு மெருகு தீட்டிக் கொண்டிருந்தன. கொய்யாத் தோப்பினுள் கிளிகளும், அணில்களும் கீச் கீச் சென்ற சத்தத்துடன் செங்காய்களாக இருந்த கொய்யாக் கனிகளைக் கோதிக்கொண்டிருந்தன. ஓரிரு குடியானவச் சிறுவர்கள் கீழே உதிர்ந்து கிடந்த கொய்யாக் கனிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தார்கள்.

தோட்டக் காவலாளி கையிலிருந்த கம்பை ஓங்கிக் கொண்டு, "டேய், யாருடா அது?", என்று அதட்டிக் கொண்டு வந்ததும் சிறுவர்கள் ஓட்டம் பிடித்தார்கள்!

சோமுவையும், துரையையும் கண்ட காவலாளி முகம் மலர, "வாங்கசாமி, சுகம்தானா?", என்று கும்பிட்டான்.

"சுகந்தான்! கொஞ்சம் காற்றாட இந்தத் தோப்புக்குள் சற்று உட்காரலாமா அப்பா?", என்று கேட்டான் சோமு.

"அதென்ன, உட்காரலாமா? என்று கேட்டு விட்டீங்க, சாமி! ஊரே உங்க இரண்டு பேருதும்தானே? தாராளமாகப் போய் உட்காருங்க", என்றான்.

"அப்படியா? தோப்புக்காரன் சையது ராவுத்தர், நாங்கள் கொய்யாப்பழம் தின்னத்தான் வந்திருக்கிறோமோ என்று நினைத்தால் அசிங்கமல்லவா? அதற்காகத்தான் ஒரு வார்த்தை கேட்டது! எங்களுக்காகக் கொய்யாப்பழம் கிழம் பறித்துக் கொண்டு வந்துவிடாதே! எங்கள் இருவருக்கும் கொய்யாப் பழமே பிடிக்காது! கொஞ்ச நேரம் இளைப்பாறிவிட்டுப் போய்விடுவோம்", என்று கூறிவிட்டு இருவரும் உள்ளே புகுந்து சமதரையாக, சருகு செத்தையில்லாத இடமாகப் பார்த்து உட்கார்ந்து கொண்டார்கள்.

"ஊம், இப்பொழுது பேச ஆரம்பிக்கலாம்", என்றான்

சோமு நகைமுகத்துடன்.

"சோமு, நீ என்னவேண்டுமானாலும் நினைத்துக் கொள், ஒரு உண்மையை மட்டும் நீ ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும்! உள்ளே 'லொட லொட்டை' யாகிவிட்ட தங்கள் நலிவை, மேற்பூச்சான அலங்காரங்களால் தபாய்த்துக் கொண்டு வருகிற பெண்களைப் பார்த்துப் பார்த்து என் கண்கள் பஞ்சடைந்து விட்டது. எட்ட இருந்தால் பளபளக்கும் முகம் கிட்ட நெருங்கிப் பார்த்தால் கோரம் கூத்தாடும்! பார்க்கச் சகிக்காது! அந்தக் காட்சியைக் கண்டு அலுப்படைந்து விட்ட என் கண்களுக்கு கந்தப்பன் மகளுடைய மாசற்ற மேனியும் அந்தத் தளதளப்பான அங்க அமைப்பும், கடைசல் பிடித்தாற் போன்ற வடிவமும் காண்பதற்கு ஆனந்தமான காட்சிதான்"

"அந்த ஆனந்தத்தோடு மட்டும் இரு. அதற்குமேல், போய்விடாதே துரை", என்று சொன்னான் சோமு.

அந்தக் குரலில் ஒரு எச்சரிக்கை; ஒரு தடை உத்தரவின் கண்டிப்பு. இவை பிரதி பலிக்கும் படியும், அதை துரை உணரும் வகையிலும் பேசினான் சோமு.

துரைக்கு இருந்த மனஎழுச்சியில் குரலில் ஆர்வம் குமிழியிட," அழகைக் கண்டு ஆனந்திப்பது பாவமா சோமு?", என்று கேட்கும் போது அவன் கண்களில் விழிகள் செருகின!

சோமு அதே குரலில், "அது வரையில் நிச்சயமாகப் பாவமில்லை. அதற்குமேல் ஒரு அங்குலம் முன் சென்றாலும் பாவந்தான்", என்றான் மீண்டும்.

"கேலி இருக்கட்டும். மடியில் வெற்றிலை பாக்கு இருக்கிறதா சோமு?"

"இல்லை! இங்கே வந்தால் நான் அதிகமாகப் போடுவதில்லை என்பதுதான் உனக்குத் தெரியுமே!"

"கொண்டு வந்தேனே நான்; கந்தப்பன் குடிசையிலேயே விட்டு விட்டேன் போலிருக்கிறது......"

"மையல் மயக்கிலே, வைத்து மறந்து விட்டாய்! கிடக்கட்டும். உன் தகப்பனார் ஏதோ அசலிலிருந்தே பணம் எடுத்துவிட்டாராமே, நிஜம்தானா துரை?"

"அந்தச் சங்கதியே எனக்குத் தெரியாதப்பா. அவரும் சொல்லவில்லை. நானும் கேட்கவில்லை".

"இன்று நாகுவிடம் அப்பா இதைப்பற்றி பேசிக் கொண்டிருந்தார். இரண்டொரு வார்த்தை என் காதிலும் விழுந்தது. மனசு கேட்கவில்லை. அதனால் தான் உன்னை நேரிலேயே கேட்டு விட்டேன். தப்பாக நினைக்காதே துரை", என்றான் சோமு. "சேச்சே! உள்ளதைச் சொல்வதிலே குற்றமென்ன? வீட்டு விஷயமாக அப்பாவும் எனக்கு எதுவும் சொல்வதில்லை. நானும் ஒன்றும் கேட்பதில்லை. ஆனால் இப்பொழுது கடைசி தடவையாக இரண்டொரு தடவை பணம் கேட்ட போது, அப்பாவிடமிருந்து பணமென்னவோ கிடைத்து விட்டது. ஆனால்

அவர் எழுதிய கடிதத்தின் வாசகம் நன்றாக இல்லை. நீ சொன்ன மாதிரிதான் அவரும் குறைப்பட்டு எழுதியிருந்தார். நீ சொல் நியாயம்; பணம் செலவாகக் கூடாது என்று இருந்தால் படிக்க வைப்பானேன் என்கிறேன்?''

''துரை, உன் தகப்பனாரின் குறை ஒரு அளவில் நியாயம் என்பது என் அபிப்பிராயம். மெட்ராசில் நீ செய்த செலவு அதிகம் தான்...''

''சரிதான். வேலிக்கு ஓணான் சாட்சி என்பது போல, கஞ்சனுக்குக் கஞ்சன் தானே கட்சி பேச முடியும்? இனிமேல் படிக்கவுமில்லை, செலவும் ஆக வேண்டாம் என்று வீட்டோடு இருந்து விடலாமா என்று கூடத் தோன்றுகிறது.'' ஏன் என்கிறாயா? மெட்ராஸ் வாழ்க்கைக்கே நம்மிடம் பொருள் வசதி போதவில்லை யென்றால், மேல்படிப்புக்காக வெளி நாடு செல்வது எப்படி?

''ஏன்? அரசாங்கமே உன்னைத் தனது செலவில் அனுப்பக் கூடும் என எதிர்பார்க்கிறேன் நான்''.

''ஏ அப்பா, பேராசைக்காரனாக இருக்கிறாயே! ராஜதானியிலேயே முதன்மையாகத் தேர்வு பெற்றாலல்லவா அரசினருடைய ஆதரவு கிட்டும்?''

''தேர்வு பெறுவாய் என்று என் நம்பிக்கை! எல்லாத் துறையிலும் நீ வல்லவனாச்சே!...''

''இருக்கலாம். ஆனால் எனக்கு அந்த நம்பிக்கை யில்லை. பரிட்சைக்கு முன்பு என் மனநிலை சரியாக இல்லை. பரிட்சை எழுதும் சமயமும் மனதில் அமைதியில்லை'', என்றான் ஏதோ சிந்தை செய்தவனாக.

''சொல்லுகிறேனே என்று வருத்தப்படாதே, கோபித்துக் கொள்ளாதே. பெண்கள் விஷயத்தில் மிதமிஞ்சிய அளவில் நீ பிரவேசித்து உன் புத்திக் கூர்மையையும், சாமர்த்தியத்தையும், அநியாயமாகப் பாழாக்குகிறாய்! பருவ வயதிலே நேர்த்தியில்லாத ஆண் பெண் உலகில் உண்டா? இந்த ஒரு விஷயத்தில் மட்டும் ஏனிப்படி பலவீனம் உனக்கு என்று புரியவேயில்லை எனக்கு! ஈகை, ஜீவகாருண்ணியம், பெருந்தன்மை, கள்ளமற்ற உள்ளம் ஆகிய இவ்வளவு உத்தம குணங்களை உனக்குக் கொடுத்திருக்கும் ஆண்டவன் இந்தப் புலனடக்கத்தையும்கொடுத்து அருள் புரிந்திருக்கலாகாதா என்று என் மனம் வெதும்புகிறது! உனது நற் குணங்களெல்லாம், இந்த ஒரு தீய குணத்தில் அடிபட்டுப் போய் விடுமே!...''

''போதுமடா சோமு! சென்னை கடற்கரையில் ஓதிய புத்திமதியை இந்த ஊர் கொய்யாத் தோப்புக்கும் கொண்டு வந்து விட்டாயாக்கும்'',

''இந்த ஊர் என்ன; நீ திருந்தும் வரையிலும் நான் சொல்லிக் கொண்டுதான்இருப்பேன். மனதை அடக்கியாளத் தெரியாதவன் மனித இனத்துடன் சேர அருகதையற்றவன்.

''சரி மிருக இனத்துடன் சேர்த்துவிடு! எனக்கு ஆட்சேபமில்லை'', என்று கொஞ்

சமும் கவலையற்றவனுகக் கூறிய துரையை ஒரு கணம் உற்றுப் பார்த்தான் சோமு.

கடவுளே! படிப்பிலும், அறிவிலும், ஆராய்ச்சியிலும் நிபுணத்துவம் பெற்ற இவன் சதையுணர்ச்சிக்கு இப்படியும் தன்னைப் பலிகொடுப்பானு? ஆம்! யாரோ சொன்னது போலக் கலையுள்ளம் படைத்தவர்களெல்லாம் ஸ்திரீ சபலம் படைத்தவர்கள் தானே? இல்லை, தவறு; மனதை அடக்கி ஆளும் மகான்கள் இல்லாமல் போகவில்லை; இருக்கிருர்கள்...

"என்ன, நிஷ்டையிலே ஆழ்ந்து விட்டாயே சோமு? இவனுடன் ஏனடா சிநேகிதம் செய்து கொண்டோம் என்று?" என்று இதழ்களில் புன்னகை அரும்பக் கேட்டான் துரை.

எங்கோ நினைவாக, தரையைப் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்த சோமு சட்டென்று தலைநிமிர்ந்து "என்ன கேட்டாய்?" என்றுன்.

துரை மறுபடி தன் கேள்வியைத் திருப்பிக் கேட்டதும் இன்று புதிதாக சம்பாதித்த சினேகிதமாடா இது? இந்த ஊர்த் தெரு புழுதி மண்ணில் புரண்டு விளையாட வில்லையா நாம்? வெல்லக்கட்டி ஒன்று வீட்டிலே கொடுத்தாலும் அதை இருவரும் பங்கிட்டுத் தின்று வளரவில்லையா நாம்? நமது பால்ய நட்பையெல்லாம் மறந்தா போய் விட்டாய்? நமக்குப் பத்து வயதுக்கு மேற்பட்ட பிறகுதானே நம்மைச் சேரவிடாமல் தடுத்தார்கள் நம் வீட்டில்! பிறகு கலாசாலையிலும் ஆண்டவன் நம்மைச் சேர்த்துவிட்டார். இனி நம் உயிர் உள்ளளவும் நம் சிநேகமும் உயிரோடு இருக்கும்! உனக்கு இழிவு நேர்வதையும் நீ முறை தவறி நடப்பதையும் கண்டு என் மனம் சகிக்காது. உனது இந்த வெட்க கரமான போக்கு எனக்குச் சிறிதும் பிடிக்க வில்லைதான். ஆனுல் நம் நட்பை முறித்துக் கொள்ள மாட்டேன்! தண்ணீரிலே கிடக்கும் தாமரைக்குத் தண்ணீரே ஆதாரம். ஆனுல்; தாமரையிலே தண்ணீர் என்னவோ ஒட்டுவதில்லை! அதேபோலத் தான். உன் நேர்மையற்ற செயலை நான் வெறுத்தாலும் உன்னை வெறுக்கமாட்டேனடா துரை!", என்று சொன்ன பொழுது சோமுவின் குரல் நடுங்கியது!

துரையின் முகத்திலிருந்த மகிழ்வு மறைந்து ஒளியையும் இழந்து இருண்டு விட்டது! இதயம் படபடக்க சோமுவின் கைகளைப் பற்றிக் கொண்டு, 'சோமு, நான் செய்வது தவறு என்பது எனக்குத் தெரியாமலில்லை. மனது நல்ல நிலையிலிருக்கும்போது, நானே வெட்கமடைகிறேன். ஆனுல் என்னை நான் சீர்திருத்திக் கொள்ள முயன்றும் என்னுல் முடிய

நீங்கள் எதைச் செய்தாலும் உங்கள் உள்ளத்திற்கும் உலகத்திற்கும் உண்மையாகவே நடந்து கொள்ளுங்கள்.

வில்லை. குற்றம் எனதல்ல; என்னைப் படைத்த ஆண்டவனுடையது தான்!'' என்ருன்.

இதைக் கூறிய பொழுது துரையின் அகன்ற விழிகளில் நீர் நிரம்பியதைக் கண்டபின் சோமு, முகத்தில் மலர்ச்சியைத் தருவித்துக் கொண்டு, ''பேஷாக இருக்கிறதே உன் தீர்மானம்! நொண்டி, முடம், சப்பாணி, கூன் குருடாகப் பிறந்திருந்தால் அது ஆண்டவன் தந்த குறை. அப்போது அவனை நாக்கூசாமல் சபிக்கலாம். அவன் அளித்திருக்கும் அறிவைப் பயன்படுத்தி நம்மை நாம் அடக்கியாளத் தெரியாமல், மனம்போன போக்கில் போய் விட்டு ஆண்டவன் மீது பழிசுமத்துவதா என்ன?'', என்று அதட்டி யடக்கினலும். துரையின் பேச்சு அவனுடைய உள்ளுணர்வில் பிறந்தது என்பதைச் சோமு உணராமலில்லை!

அத்தியாயம் 4.

சிலிர்ப்பு

பரிதியும் பகலும் ஒளியும் நேரம். அன்னம்மாள் அகல் விளக்கை ஏற்றி எடுத்துக் கொண்டு வாசலி லிருந்த மாடப் பிறையில் வைப்பதற்காக வெளியே வந்தாள்.

தெருத் திண்ணையி லமர்ந்து ஜபம் செய்து கொண்டிருந்த சிவராம ஐயரிடம், ''அந்தி மயங்கி இருண்டு கொண்டு வருகிறது, இந்தப் பிள்ளை எங்கே போயிருக்கிருன்? முன்னிருட்டு நாட்கள்; வழியிலே பூச்சி பொட்டு குறுக்கிட்டால் கூட தெரியாதே'', என்று அன்னம்மாள் முடிக்கு முன்பு, ''பெரிய வாய்க்கால் கரையிலே பார்த்தேன் நம்ப ஐயாவை'', என்று வாசலிலிருந்த கன்றுக் குட்டிக்கு வைக்கோலை உதறிப் போட்டுக் கொண்டே சொன்னுன் கருப்பையா.

''பெரிய வாய்க்கால் கரையிலா! நன்ருகப் பார்த்தாயோ துரை தானுவென்று?'', என்று திகைத்துப் போய்க் கேட்டாள் அன்னம்மாள்.

''ஆமம்மா, ஒத்தைத் தெரு பக்கமிருந்து நான் வரும்போது கந்தப்பன் வீட்டுக்குப் போகும் குறுக்குப் பாதையிலிருந்து சாலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தாரு'', என்ருன் கருப்பையா.

''ஊஹூம்'', என்று தனக்குத் தானுக சொல்லிக் கொண்டு உள்ளே திரும்பி வந்தாள் அன்னம்மாள். கல்லுரலில் தோசைக்கு மாவு அரைத்துக் கொண்டிருந்த கமலத்திடம் சென்று, ''கேட்டீர்களா அக்கா. குழந்தையின் சமர்த்தை! கந்தப்பன் வீட்டைத் தேடிக் கொண்டு போயிருக்கிருன்'', என்று சொல்லிக் கொண்டே தோசை மாவு எடுக்க வேண்டிய ஈய அடுக்கைக் கொண்டு வைத்தாள் அன்னம்மாள். ''யார் சொன்னுர்கள் உனக்கு?'', என்று கேட்டாள் கமலம். ''கருப்பையா பார்த்திருக்

கிறுன். அவ ஞேடு கூட பழத்தூக்குக் கூடையும் அங்கேதான் போயிருக்கிறது. அவன் சொன்ன பொழுது தூண்டித் தூண்டிக் கேட்கக் கூடாது என்று இருந்தேன். இல்லா விட்டால் இந்த மகா பட்டணத்தில் நமக்குத்

தெரியாமல் இவனுக்கு சிநேகிதன் யாரிருக்கிருன்?'', என்று பொரிந்து கொட்டிஞள் அன்னம்மாள்.

கமலத்தின் மனது தீவிரமாக சிந்திக்கத் தொடங்கிவிட்டது. அன்னம்மாள் கூறியதை அவள் கவனித்ததாகவே தெரியவில்லை! மனது சிந்தனையில் உழல அரைத்த மாவை பாத்திரத்தில் எடுத்து உப்புப் போட்டுக் கரைத்துக் கல்லுரல் மீதேதூக்கி வைத்துவிட்டு, "அம்மாடி, இன்னும் மூன்று நாட்களுக்குக் கவலையில்லை'', என்று கூறி விட்டு எழுந்தாள் கமலம்.

"ராத்திரி என்ன சமையல்?'', என்று வினவியவாறு அங்கே தோன்றிஞர் சிவராம ஐயர்.

"மத்தியானம் செய்த மோர்க் குழமபு இருக்கிறது. கத்தரிக்காய் துகையல் அரைத்து சீரக ரஸம் வைத்திருக்கிறேன். அப்பளமோ வடகமோ பொரிக்க வேண்டும்'', என்று சொல்லி விட்டு, "கருப்பையா இருக்கிருஞ போய் விட்டாஞ?'' என்று கேட்டாள் அன்னம்மாள்.

"இருக்கிருன், ஏன்?", என்று கேட்டார் ஐயர்.

"கருவேப்பிலே இரண்டு மட்டை கிள்ளிக் கொண்டு வரச் சொல்லுங்கள் அவனை", என்ருள் அன்னம்மாள்.

"பொழுதோடு சொல்லக் கூடாதா இதை யெல்லாம்? நெடுகிலும் கதவை யெல்லாம் தாழிட்டுக் கொண்டுவந்த பிறகு 'கருவேப்பிலே, கொத்து மல்லி' என்கிருயே. "ஏ கருப்பையா", என்று இரைந்து கூப்பிட்டார் ஐயர்.

"அவனைக் கூப்பிடவேண்டாம். நானே போய்ப் பறித்துக் கொண்டு வருகிறேன்", என்று வெடுக்கென்று சொன்னுள் அன்னம்மாள்.

"அடேயப்பா! 'சர்க்கரை முத்துக்குட்டி, சாதம் குழைந்ததடி! 'என்ருனும் ஒருவன்'. 'ஆ! அப்படியா. போடடா பல்லக்கை, போகிறேன் பிறந்தகம் என்ருளாம் மனைவி!...' என்று ஐயர் கிண்டல் செய்ததைக் கண்டதும் கமலம் பகபக வென்று நகைத்தாள். அன்னம்மாளும் கோபம் தணிந்தவளாக, "எனக்கு பிறந்தகமுமில்லே; பல்லக்கும் தேவையில்லே! அதனுல் தான் வயிற்றில் பிறந்த பிள்ளைக்குக்கூட இளப்பமாகப் போய் விட்டேன்", என்ருள்.

> நிலங்கள் அனைத்துமே அரசாங்கத்திற்கு அல்லது இவற்றில் உழைக்கும் பாட்டாளி மக்களுக்குச் சொந்தமாகும் காலம் துரிதமாக வந்து கொண்டிருக்கிறது.

"சரிதான் போ, விடமாட்டேன் என்கிருயே! இந்தா ஏ கருப்பையா, கருவேப்பிலேயாம், ஒரு கொத்து பறித்துக் காண்டுவா போய்", என்று ஐயர் கூறும்போது, 'சரக், சரக்' என்று செருப்பு கொடுக்கும் ஓசை கேட்டுத் திரும்பினுர் ஐயர்.

துரை வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் கமலம், "ஏண்டா துரை, எங்கே போனுய் இவ்வளவு நேரமாக?", என்று வினவினுள்.

துரை சட்டென்று பதிலொன்றும் கூருததால், "கந்தப்பனைப் பார்க்கப் போயிருப்பான்", என்ருள் அன்னம்மாள். "இன்று போனது பற்றி ஒன்றுமில்லே, இனிமேல்பட அங்கே போக வேண்டாம்", என்று சாதுரியமாக விஷய விளக்கம் செய்தார் ஐயர்.

துரைக்குக் கொஞ்சம்கோபம் வந்தது." கந்தப்பனைப் பார்க்க வேண்டும் என்று போகவில்லே நான்; பழங்களைக் கொடுப்பதற்கு சிநேகிதன் வீட்டுக்குப் போனேன். போகிற வழியில் இருந்தது கந்தப்பன் குடிசை. எடுத்து வளர்த்த கிழவனுதலால் பார்க்கவேண்டும் போலத் தோன்றியது. உள்ளே புகுந்தேன். இதில் என்ன தப்பு?", என்று சீறினுன் துரை.

"தப்பு என்று யாரும் சொல்லவில்லே. இன்று போய்ப் பார்த்து விட்டு வந்தது சரிதான். அடிக்கடி போகவேண்டாம் என்று உங்கப்பா சொல்வது எதற்கு என்ருல்......"

''தெரிகிறது அத்தை. நாம் மிராசுதார், கந்தப்பன் பண்ணையாள். அவன் குடிசைக்கு நான் போவது அகௌரவம்; அப்படித்தானே?'', என்று கோபத்தைச் சிரிப்பாக வெளியிட்டான் துரை.

''அது கிடக்கிறது. கை கால் அலம்பு; இலை போட்டாச்சு'', என்று பேச்சை மாற்றினள் கமலம்.

துரை கால் கைகளை அலம்பிக்கொண்டு வந்ததும் தகப்பனும் பிள்ளையுமாகச் சாப்பிட உட்கார்ந்தார்கள். அன்னம்மாள் 'உம்' மென்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு பரிமாறுவதைக் கண்ட துரை, ''அம்மாவுக்கு என் மேலே கோபம்...'', என்று நகைச் சுவையோடு பேச ஆரம்பித்தான்.

''கோபமுமில்லை, தாபமுமில்லை'', என்றுள் அன்னம்மாள்.

''இல்லையில்லை! காலம்பரத்திலே யிருந்து என் மேல் கோபம் தான் உனக்கு!'', என்றுன் மறுபடியும்.

''பின்னே இவ்வளவு பெரிய பிள்ளை இப்படி அசட்டும் பிசட்டென்று பேசின...'', என்று அன்னம்மாள் கூறும் போதே, ''என்ன பேசிவிட்டேன். அசட்டுப் பிசட்டென்று?'', என்று அன்னம்மாளை நோக்கி வினவினுன் துரை.

''என்னவா? பெற்ற தாயிடமே கற்ற வித்தையைக் காட்டாதே. கந்தப்பனுக்கு பழங்களை அள்ளிக் கொடுக்கனும் என்றுல் தாராளமாகக் கொடு, உன்னை யார் தடுக்கிறுர்கள்? அதற்குப் பொய் சொல்வானேன்?'', என்று மனத்திலிருந்த கோபத்தை வெளியிட்டாள் அன்னம்மாள்.

''பொய்சொல்ல நான் 'பாப்பா' அல்ல! வடபாதி சோமு வந்திருக்கிறுன், ஊரிலிருந்து என்னுடன். அவனுக்காகத் தான் கொண்டு போனேன்....''

''காரியம் இன்னும் தரமாகப் போய்விட்டது! குடியைக் கெடுத்த பாவி அவன். அவன் பிள்ளையை, 'என் சிநேகிதன்' என்று வாய் கூசாமல் சொல்லுகிறுயே?'' என்று படபடத்தாள்.

''காலகதி மாறி வரும் போது அது அது வந்து நேருகிறதே தவிர, ஒருவர் குடியை ஒருவர் கெடுக்க நினைத்தாலும் முடியாது! பெரியவர்கள் மனஸ்தாபப் பட்டுக் கொண்டு இருந்தால் அதில் எங்களுக்கு ஆட்சேபமே கிடையாது. அதற்காக நாங்களும் விரோதிகளாகவே இருக்க வேண்டுமா என்ன?'', என்று குரலில் நிஷ்டூரம் ததும்பச் சொன்னுன்.

''சோழியன் குடுமி சும்மா ஆடுமா என்ன? ஏதோ வஞ்சகத்தை மனசிலே வைத்துக் கொண்டு பிள்ளையை உன் கிட்ட சிநேகிதமாக இருக்கச் சொல்லி சூது....''

> அடிப்படை வாழ்க்கைக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்யும் சாதனங்கள் அனைத்தும் பொது மக்களின் கைவசமே இருந்து வரவேண்டும்.

"இதோ பார் அம்மா! நாங்கள் சிநேகிதமாக இருப்பதற்கு நீ சண்டையிடுவது போல, அவர்கள் வீட்டிலும் அவனை சண்டைதான் போடுவார்கள், சிநேகிதம் என்பது தெரிந்தால். இன்னும் அவர்களுக்குத் தெரியாது இது. ஊஹும்......ரஸம் வேண்டாம் எனக்கு, மோர் கொண்டுவா", என்ருன் துரை.

"டே சீரக ரஸம்டா, உடம்பு கலகலவென்று இருக்கும்,...", என்று சிபார்சு செய்தாள் கமலம்.

"நம் உடம்பு ஏற்கனவே கலகலத்துத் தானிருக்கிறது, இன்னும் கலகலக்க வேண்டாம்", என்று சச்சரவின் மத்தியில் கேலியும் பேசினன் துரை.

"என்றைக்கும் பிடித்தால் பிடிவாதம் தானே உன்னிடம். ஒரு கை வாங்கியாவது சாப்பிடு", என்று கரண்டியில் ரஸத்தை மொண்டாள் அன்னம்மாள்.

"சரி, விடமாட்டாய் போலிருக்கிறது" என்று ஒரு கை. ரஸத்தை ஏந்திக் குடித்துவிட்டு மோர் வார்த்துக் கொண்டான் துரை. தனது தகப்பனர் இவ்வளவுக்கும் வாயைத் திறக்காமலிருந்தது அவனுக்கு பெரும் வியப்பாக இருந்தது.

சாப்பிட்டு முடிந்ததும் கை அலம்பிக் கொண்டு வாசலுக்குச் சென்ருர் ஐயர். துரை மாடியிலுள்ள தன் அறைக்குச் சென்று படுக்கையில் சாய்ந்தான்.

எண்ணங்கள் எழுந்தன; காட்டு கொடிபோல வளர்ச்சி பெற்ற வள்ளியின் வனப்பு; அருமை மிக்க நண்பன் சோமு; பாத்தியதை கொண்டாடி சண்டையிடும பெற்ரேர்கள்; எல்லோரும் நினைவில் நின்ருர்கள.

உணர்ச்சி உலுக்க அவன் உடல் ஒரு தரம் சிலிர்த்து அடங்கியது! 'ஆ, வாழ்க்கைக்காகப் போராடத்தான் வேண்டுமா! சரி', என்று தனக்குள் கூறி சிரித்துக் கொண்டான் துரை.

சந்தா விகிதம்

தனிப்பிரதி	25 ந. பை.
6 மாதச் சந்தா	ரூ. 1. 50
வருடச் சந்தா	ரூ. 3

விளம்பர விகிதம்

மேலட்டை: பின்பக்கம்		
மூன்று கலர்	ரூ.	250
,, உட்பக்கம்	ரூ.	150
உட்பக்கம்:		
முழுப்பக்கம்	ரூ.	100
½ பக்கம்	ரூ.	60
¼ பக்கம்	ரூ.	30
1 கலம் 1 அங்குலம்	ரூ.	10

THE LAKSHMI MILLS COMPANY LIMITED

Pappanaickenpalayam,

COIMBATORE.

Telephone: 18 & 818
Telegrams: 'LAKSHMI'

Branch at Kovilpatti: Telephone: 18
Telegrams: 'LAKSHMIMIL'

SPLINDLAGE AT { *Coimbatore—59,680 & Looms 200*
Kovilpatti —51,120 }

★

SPINNERS OF:

Quality Cotton Yarn 20^s to 100^s Combed and Staple Fibre Yarn

★

Manufacturers of:

GREY LONGCLOTH AND MULLS

: MANAGING AGENTS :

G. KUPPUSWAMY NAIDU & CO.,

COIMBATORE.

பீடி சக்கரவர்த்தி
கு.பி. சொக்கலால்
ராம்சேட் பீடி
TRADE MARK
REGISTERED
RAMSAIT
BEEDI
கு.பி. சொக்கலால்
ராம்சேட்
பீடி
INDIA No.5901
முக்கூடல்
CEYLON No.5929
By
RAJAN & Co.. SVKS.

வகைக்கு ஒன்று!

ராஜன்

(நவதானிய வியாபாரி நவகோடி இருளப்பச் செட்டியார் பங்களா. செட்டியார் முன் ஹாலில் தனியாக உட்கார்ந்திருக்கிருர். கல்யாணத்தரகர் மணவாள நாயுடு வருகிருர்.)

இருளப்பச் செட்டியார் : வாருங்கள் நாயுடு காரு. வரணும் வரணும்.

மணவாள நாயுடு : வணக்கம் செட்டியார்வாள், ரொம்ப நாளாகிவிட்டது. பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தேன்.

இ. செ: ரொம்ப நாளென்ன? ஆறு மாசந்தானே ஆச்சு.

ம. நா: பெண்களும் மாப்பிள்ளைகளும் சௌக்கியந்தானே!

இ. செ: சௌக்கியந்தான். என் ஐந்து பெண்களுக்கும் மாப்பிள்ளைகள் தேடிப்பார்த்து கல்யாணம் முடித்து வைத்த பெருமை உங்களுடையது தான். எனக்கு இப்பொழுது தான் நிம்மதியாயிருக்கிறது.

ம. நா: இதிலென்ன பெருமை; என் கடமை தானே, தொழிலுங் கூட! உங்களுடன் சிறு பிராயத்திலிருந்து பழகியதற்கு இது கூடவா செய்யக் கூடாது! உள்ளே பெண்

கள் பேச்சுக் குரல் அதிகமாயிருக்கிறதே?

இ. செ: நம் பெண்கள் வந்திருக்கிறார்கள்.

ம. நா: யார் யாரெல்லாம் வந்திருக்கிறார்கள்? டாக்டர் சம்சாரம், வக்கீல் சம்சாரம்...

இ. செ: டாக்டர், வக்கீல், இன்ஜினியர், போலீஸ் சூப்பிரண்டு, சப் கலெக்டர் சம்சாரங்கள் ஐந்து பேருமே வந்திருக்கிறார்கள்.

ம. நா: என்ன விசேஷம்?

இ. செ: அவர்கள் வருவதற்கு விசேஷம் என்று வேண்டுமா? நினைத்தால் வருவார்கள். ஒருத்தி வரும்போது மற்றவர்களுக்குத் தகவல் கொடுத்து விடுகிறாள். மதுரை, திருச்சி, கோயம் புத்தூர், திருநெல்வேலி, சேலம்...

ம. நா: நிறுத்துங்கள், நிறுத்துங்கள்! ஒவ்வொருவரும் இப்போது எங்கே, எங்கேயிருக்கிறார்கள் என்று விவரமாகச் சொல்லுங்கள், செட்டியார்வாள்?

இ. செ: மூத்தவளை டாக்டருக்குக் கொடுத்தோமல்லவா? அவள் இப்போது மதுரையிலிருக்கிறாள். இரண்டாவது வக்கீல்...

ம. நா: (சிரித்து) இரண்டாவது பெண்ணை இன்ஜினியருக்கல்லவா கொடுத்தோம்?

இ. செ: ஆமாம், ஆமாம். இதெல்லாம் எங்கே நினைவுக்கு வருகிறது? ஒரு பெண், இரண்டு பெண்ணென்றால் யார் யாருக்கு மணம் செய்து கொடுத்தோமென்று ஞாபகத்தில் இருக்கும். ஐந்து பெண்ணென்றால் அடி பிசகத்தானே செய்யும்! இரண்டாவது இன்ஜினியர் மனைவி திருச்சியில் இருக்கிறாள். மூன்றாவது வக்கீல் கோயம்புத்தூர்; நான்காவது போலீஸ் சூப்பிரண்டு திருநெல்வேலி; ஐந்தாவது சப் கலெக்டர் சேலம்.

ம. நா: இத்தனை மாப்பிள்ளைகளை அணிவகுத்து வைத்துக்கொண்டு நீங்கள் இங்கே சென்னையில் ஆட்சிபுரிகிறீர்கள். நவதானிய வியாபாரத்தில் நவகோடி லாபம் கிடைக்காமல் வேறென்ன செய்யும்? சரி, உங்கள் பெண்கள் எல்லாருக்கும் பரம திருப்தி தானே!

இ. செ: அதைத் தான் சொல்ல வருகிறேன், நாயுடுகாரு. ஒவ்வொருத்தியும் இருக்கிற ஊரைக் கேட்டு விட்டு அங்கங்கே போய் நின்று விடாதேயும். நம் பெண்களுக்கு இப்போ உங்கள் பேரில் ரொம்ப கோபமாம்!

ம. நா: என்ன, செட்டியார்வாள்? என் பேரில் என்ன கோபம்! இப்படி அயனை சம்பந்தங்கள் வேறு யாருக்குக் கிடைக்கும்?

இ. செ: எனக்குப் பரம திருப்தி. என் ஜன்மமே சாபல்யமடைந்து விட்டது. எனக்கு வரதட்சனை வகையில் ஐந்து லட்சம் போனது பற்றிக்கூடக் கவலையில்லை. இப்படி வகைக்கொரு மாப்பிள்ளை யாருக்குக் கொடுத்து வைத்திருக்கிறது? தும்மினால் டாக்டர்; கோர்ட் என்றால் வக்கீல்; வீடுகள் கட்டவேண்டுமென்றால் இன்ஜினியர்; போலீஸ் சூப்பிரன்டும், சப்கலெக்டரும் நம் வியாபாரத்திற்கு அநுசரணையாகயிருக்கவே யிருக்கிறார்கள்? ஆனால் நம் பெண்கள், அந்தக் கோணத்தில் விஷ

யங்களைப் பார்க்கமாட்டேன் என்கிறார்களே. நீங்கள் அவர்களுடைய வாழ்க்கையைப் பாழாக்கிவிட்டீர்களாம். குடும்பத்தை "மியூஸியம்" ஆக்கிவிட்டீர்களாம். அவர்கள் கண்ணில் படாமல் நீங்கள் போய் விட்டால் நல்ல காலந்தான்.

ம. நா: இது ஏதடா வம்பாகயிருக்கிறது. நல்லதற்குக் காலமில்லை... ஊம்...

(டாக்டரின் மனைவி சிவகாமி வருகிறாள்.)

சிவகாமி: நாயுடு தாத்தா, வணக்கம்!

ம. நா: ஓ, சிவகாமி அம்மாளா? சௌக்கியந் தானே, அம்மா! டாக்டர் சௌக்கியமா?

சிவகாமி: டாக்டர் மனைவியாக யிருக்கும் போது சுகத்திற்கு என்ன குறைச்சல்? உங்களைச் சந்தித்துப் பேச வேண்டுமென்று தான் ரொம்ப நாளாய்க் காத்திருந்தேன்.

ம. நா: தங்கள் சித்தம் என் பாக்கியம்!

சிவகாமி: சித்தமுமில்லை, பாக்கியமுமில்லை. வீட்டுக்கு முதல் மருமகன் டாக்டராக வந்ததிலிருந்து குடும்பத்திலே எல்லாருக்கும் சுகக்கேடு என்று என் தங்கைகள் என்னைப் பார்க்கும் போதெல்லாம் குத்திக் காட்டுகிறார்கள். எனக்கு ஏன் டாக்டரைத் தேர்ந்தெடுத்தீர்கள்?

ம. நா: அப்படிச் சொல்லாதே, அம்மா. அந்தச் சாட்சாத் விஷ்ணு பரமாத்மாவைப் போல டாக்டர் உயிர்களைக் காப்பாற்றுகிறவர். உங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று தான் முதன் முதலில் டாக்டர் கிடைத்தார்.

சிவகாமி: நீங்கள் தான் இதை அவர்களுக்குச் சொல்லவேண்டும்.

(டாக்டரின் மனைவி போய் விடுகிறாள்.)

இ. செ: நாயுடுகாரு, நல்ல போடு போட்டீர். டாக்டர் விஷ்ணு வென்றால், இன்ஜினியர்?

ம. நா: இன்ஜினியர் பிரம்மா; வக்கீல் நாரதர்.

இ. செ: அப்படியானால் போலீஸ் சூப்பிரண்டும், சப்கலெக்டரும் கலிகால சிவபெருமான்களா?

ம. நா: சரியாய்ச் சொன்னீர்கள்!

இ. செ: இதை அவர்கள் காதில் போட்டு விடாதேயும் ஐயா.

(இன்ஜினியர் மனைவி விசாலம் வருகிறாள்.)

விசாலம்: தாத்தா வணக்கம்.

ம. நா: வாம்மா விசாலம். இன்ஜினியர் சௌக்கியந் தானே.

விசாலம்: சௌக்கியந்தான். ஆனாலும்...

ம. நா: என்னமா ஆனாலும்...

விசாலம்: நல்ல இன்ஜினியரைப் போய்ப் பார்த்தீர்கள்?

ம. நா: நல்ல பையனாச்சே!

விசாலம்: நல்லவர் தான் ஆனால் வீட்டில் எல்லாம் நீட்டல் அளவையிலும், நிறுத்தல் அளவையிலும் தான் நடந்து வருகிறது. மூன்றடி ஏழு அங்குலம் தள்ளி நின்றுதான் பேச வேண்டுமாம். பேச்சு மணிக்கு மூன்று மைல் வேகத்திற்கு மேல் போகக் கூடாதாம். கழுத்திலிருக்கும் மாங்கல்ய செயின் பத்துப் பவுண் இருந்தால், கையில் வளையல்கள் பன்னிரண்டரைப் பவுணுக்கு மேல்

செய்யக்கூடாதாம். இன்னும் எத்தனையோ கட்டுப்பாடு. செக்கு மாடு போல ஒரே வட்டத்தில் வளைய வளைய வந்து கொண்டிருக்கிறேன், எந்த நாளில் எனக்கு அவரை முடித்தீர்களோ அன்றிலிருந்து...

(விம்மிக் கொண்டே உள்ளே சென்றுவிடுகிறாள்.)

இ. செ: பார்த்தீர்களா, நாயுடு காரு. கட்டிய கல்யாணத்துக்கு எட்டுக் குற்றம்?

ம. நா: எனக்கும் ஆச்சரியமாகத் தானிருக்கிறது. பெண்களுடைய சுபாவமே தனி. இனி மற்றவர்களும் இப்படி ஏதாவது ஆவலாதிதான் சொல்வார்கள். எனக்கும் பயமாயிருக்கிறது, செட்டியார்வாள், நான் போய் வரட்டுமா?

ஒருவர்: என்னய்யா இது! கச்சேரி கேட்காம கல்லைப் பாத்துக்கிட்டு உட்கார்ந்திருக்கே?

மற்றொருவர்: இவர் பாடினால் கல்லும் கரையுமின்னு சொன்னீர்களே, நிசமான்னு பார்க்கிறேன்.

(வக்கீல் மனைவி சுந்தரி வருகிறாள்.)

சுந்தரி: நமஸ்காரம், நாயுடுகாரு.

ம. நா: வா, அம்மா, சுந்தரி. உனக்காவது உன் கணவர் மீது பாசமிருக்கிறதா?

சுந்தரி: பாசம் எங்கிருந்து வரும்? அவர்தான் ஆசாபாச மற்ற தராசு முனை வக்கீலாயிருக்கிறாரே! எதையும் சந்தேகக்கண் கொண்டே பார்க்கிறார். சிரித்தால் நீதி கிடையாது. அழுதால் கிடையாது. வேண்டிய காரியத்தைத் தகுந்த காரணங்களோடு அரை மணி நேரம் விவாதித்த பின்புதான் நடத்த விடுவார். அவரிடம் ஒப்படைத்ததைவிட என்னை ஆயுள் தண்டனைக் கைதிகளோடு ஒரு சிறையில் தள்ளியிருக்கலாம். வீடே ஒரு ஜெயில் மாதிரியிருக்கிறது.

ம. நா: நீதான் படித்த பெண்ணாச்சே. விவாதிப்பதில் கஷ்டமென்ன யிருக்கிறது?

சுந்தரி: விவாதிப்பதில் கஷ்டமில்லை. ஆனால் ருஜுவும் சாட்சியும் வேண்டுமென்று சித்திரவதை செய்தால் நான் என்ன செய்வது? இரண்டு வீசைச் சீனிக்கு வேலைக்காரி, கடைக்காரன் இவர்களைக் சாட்சிக்கு அவர் முன்னே மாதந்தோறும் கொண்டு நிறுத்தமுடியுமா?

ம. நா: அப்படியா சங்கதி? நான் வந்து அவரிடம் பேசிக் கொள்கிறேன். அடுத்த மாதம் கோயம்புத்தூரில் ஜோலியிருக்கிறது, வருகிறேன்.

சுந்தரி: வரும்போது அப்பாவையும் இன்னும் இரண்டு பேர்களைச் சாட்சிக்கும், எழுத்து ருஜுவுக்குப் பத்துப் பன்னிரண்டு பேர்களுடைய எழுத்து ஒப்பந்தமும் கொண்டு வாருங்கள். நல்ல தரகர்... நல்ல வக்கீல்......

(கோபத்தில் போகிறாள்.)

ம. செ : நாயுடுகாரு, எப்படியிருக்கிறது சமாசாரம்?

ம. நா : என் தலை சுற்றுகிறது, செட்டியார்வாள்! இப்படி டாக்டர், இன்ஜினீயர், வக்கீல் என்று மாப்பிள்ளைகளைத் தேடுவதை விட நம்மைப்போல சாதாரண மான ஸ்திதியில் இருப்பவர்களை முடித்திருந்தால் போதும் போல் தோன்றுகிறதே!

இ. செ : வாஸ்தவந்தான். அனுபவித்தபின் தானே இதெல்லாம் தெரிகிறது. ஒவ்வொரு வகையிலும் ஒரு மாப்பிள்ளை வேண்டுமென்று ஒவ்வொரு லட்சம் செலவழித்தேன், பாருங்கள். என் புத்தியை...

ம. நா : வேண்டாம் செட்டியார்வாள், வேண்டாம். இதில் முழுப் பொறுப்பையும் நானே ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால் நம் குடும்பத்தில் எப்படி யிருந்தபோதிலும் வெளியே உள்ளவர்கள் நம்மைப் பார்த்துப் பிரமித்து நிற்கிறார்கள்.

இ. செ : பிரமிப்பு என்ன? மயங்கியே விழுவார்கள். டாக்டர், இன்ஜினியர், வக்கீல் போலீஸ் சூப்பிரண்டு, சப் கலெக்டர்...

ம. நா : நிறுத்துங்கள், செட்டியார்வாள். இன்னும் போலீஸ் சூப்பிரண்டின் மனைவி அமராவதியும், சப் கலெக்டரின் மனைவி திலகவதியும் பாக்கியிருக்கிறார்கள். அவர்கள் வந்தால் கண்டிப்பாக என்னை லேசில் விடமாட்டார்கள். சூப்பிரண்டின் மனைவி என் மேல் ஒரு கேஸ் சிருஷ்டித்து விடுவாள். சப் கலெக்டரின் மனைவி எனக்கு ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை போட்டுவிட்டால், அவர்கள் இருவரும் வரும் முன்னே நான் போய்விடுகிறேன்.

இ. செ : அது உண்மைதான். நான் தான் இருந்து எல்லாத் தலை வேதனையையும் அநுபவிக்கிறேன். நீங்கள் ஏன் கஷ்டப்பட வேண்டும்?

ம. நா : எல்லாரும் ஊருக்குப் போனவுடன் ஒரு கடிதம் போடுங்கள். வந்து சாவகாசமாகப் பேசிக் கொள்வோம்.

(போலீஸ் சூப்பிரண்டின் மனைவி அமராவதியும், சப் கலெக்டரின் மனைவி திலகவதியும் சேர்ந்து வருகிறார்கள்.)

அமராவதி / திலகவதி : நமஸ்காரம், தாத்தா நீங்கள்...

(மணவாள நாயுடு மான் போலத் துள்ளி எழுந்து வெளியே ஓடுகிறார்.)

ஏன் அப்பா, அவர் அப்படி ஓடுகிறார்?

இ. செ : அது உங்கள் தமக்கைமார் செய்த வேலை, அம்மா. தரகர்களும் சில சமயம் இப்படி ஓடிப் பழக வேண்டுமல்லவா, அதற்காக ஓடுகிறார்.

நீங்களே பாருங்க, ஸார்! என் மண்டையில சுத்தமா ஒண்ணுமில்லேன்னு சொல்றான். இவனைச் சும்மா விடலாமுங்களா?

த. பெ. நெ. 297

S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

83-85, குமாரவீதி :: கொழும்பு-11.

—:●:—

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனுமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகாரவகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத் திரவியங்கள், பவுன்டன் பேனு, சிலேட் பென்சில் வகைகள், சாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விலை சகாயமாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிராஞ்சு:

போன்: 333

19, கொட்மலே ரோடு

நாவலப்பிட்டிய.

—:●:—

ஏஜன்ட்ஸ்:

போன்: 3262 **த. பெ. நெ. 2345**

S. சந்தோச நாடார் & சன்

1/4. ஈவனிங் பஜார் :: :: P. T. மதரூஸ்.

&

37, ஹைரோடு

திருநெல்வேலி ஜங்ஷன்.

சந்திரகிரி மன்னன் சூரிய கேதுவுக்கு ஒரு மெய்க்காவலன் தேவையாக இருந்தது. ஆகவே தன் மந்திரி தூமகேதுவை அழைத்து, "மெய்க்காப்பாளன் தேவை" என்னும் விஷயத்தை ராஜ்யம் முழுமையும் பறை சாற்றும்படிக் கட்டளையிட்டான்.

மன்னனின் கட்டளைப்படி மந்திரியின் உத்திரவின் பேரில் செய்திஅறிவிப்பவன் நகரத்தின் முக்கிய நாற்சந்திகளில் டமாரம் அடித்து, "திடகாத்திரமும் தைரியமும் மிகுந்த ஒரு மெய்காவலன் சூரியகேது மன்னனிடம் உத்தியோகம் ஏற்கத் தேவை. விருப்பமுள்ளவர்கள் இன்றைக்கு மூன்றும் நாள், அரண்மனையில் மந்திரியிடம் ஆஜராக வேண்டும்", என்று தெரிவித்தான்.

அவ்வூரிலுள்ள திடகாத்திரமான இளம் வாலிபர்களுக்குள்ளே இந்த செய்தி மிகுந்த பரபரப்பை உண்டாக்கியது!

"நான் தான் தகுதியானவனாக இருப்பேன்", என்று ஒருவருக்குள் ஒருவர் பலவிதமாக போட்டி போட்டுக் கொண்டார்கள்.

மன்னன் குறிப்பிட்ட நாள் வந்தது. ராஜ்யத்தின் பல பாகங்களிலிருந்தும் உத்தியோகத்திற்காக வாலிபர்கள் வந்திருந்தார்கள். மன்னரும் மந்திரியும் அவர்களை ஒவ்வொருவராக அழைத்தனர். ஒரு பார்வையின் மூலமே, "நீ வேண்டியதில்லை, போகலாம்." என்று சொல்லிக் கழித்தார்கள். கடைசியாக 10 நபர்களைத்தேர்ந்தெடுத்தார்கள். அந்த 10 பேருக்கும் பரீக்ஷை நடத்த வேண்டும்; அவர்களில் யார் ஜயமடைகிறானோ அவனுக்கு தான் மெய்க்காவலன் உத்தியோகம்.

ஆகவே என்ன விதமான பரீக்ஷை நடத்துவது என்று மன்னன் யோசனை செய்யலானான்.

மறு நாள் காலை மன்னன் சூரியகேது மந்திரியை அழைத்தான். என்ன விதமான பரீக்ஷை நடத்த வேண்டும் என்பதை ரகஸியமாகச் சொன்னான்.

மன்னனின் உத்திரவின் படி மந்திரி ஒரு சிறு பை நிறைய நல்ல முத்துக்களை எடுத்துக்

கொன்டான். ஒரு வெள்ளைக் குதிரையின் மீது ஏறிக் கொண் டான். அரண்மனை வேலைக் காரர்கள் சிலரையும் அழைத்துக் கொண்டான். அவர்களுடன் உத்தியோக பரீக்ஷைக்கு காத்

ஒரு இடத்தை அடைந்தான். அப்பொழுது மந்திரியின் கையி லிருந்த நல்ல முத்துக்களுடன் கூடிய அந்தப்பை கை தவறி கீழே சாலையில் விழுந்துவிட்டது. பையிலிருந்த முத்துக்கள் சிதறி



திருக்கும் 10 வாலிபர்களையும் அழைத்துக் கொண்டு, மந்திரி அந்த ராஜ்யத்தின் பிரதான நகரை நோக்கி பிரயாணப்பட் டான்.

மந்திரி, தன்னுடன் வந்த ஆட்களுடன் நாற் சந்தி கூடும்

சாலையில் விழுந்து உருண் டோடின! இந்த நிகழ்ச்சியைக் கண்டதும் மந்திரியுடன் வந்த வேலையாட்கள் ஓடிச் சென்று அவைகளைப் பொருக்கி எடுப் பதில் ஈடுபட்டனர். உடனே உத்தியோக பரீக்ஷைக்கு

வந்திருந்த வாலிபர்களும் ஓடிச் சென்று முத்துக்களை பொருக்கினார்கள். ஆனால் அவர்களில் ஒருவன் மட்டும் மந்திரியின் குதிரையின் பக்கத்திலேயே நின்றான். இப்படி அப்படி நரகவேயில்லை!

சிறிது நேரத்திற்குள்ளாக சிதறி ஓடின முத்துக்களைப் பொருக்கி எடுத்துப் பையில் நிரப்பி மந்திரியிடம் ஒப்படைத்தார்கள்.

அதைப் பெற்றுக்கொண்டான் மந்திரி. குதிரையைத் திருப்பிக்கொண்டு அரண்மனையை நோக்கிச் சென்றான்.

வழி நெடுகிலும், முத்துக்களை பொருக்காது மந்திரியின் பக்கத்தில நின்றுக்கொண்டிருந்த அந்த வாலிபனை, "தவறு செய்து விட்டாய்", என்று நிந்திப்பது போலே எல்லோரும் அவனை உற்றுப்பார்த்துக் கொண்டு சொன்னார்கள்.

மன்னன், மந்திரியின் வருகைக்காக அரண்மனையில் காத்திருந்தான். அவன் எதிர்பார்த்தபடி மந்திரி தன் பரிவாரங்களுடன் அரண்மனையை அடைந்ததும், அவன் அரசனைப் பார்த்து, "மகாராஜா! தங்களுடைய கட்டளைப்படி செய்தேன். இவன் ஒருவன் மட்டும் கீழே விழுந்த முத்துக்களை பொருக்காது என் அருகில் நின்றான். மற்றவர்கள் எல்லாம் முத்துக்களை தேடிப் பொருக்கினார்கள்", என்று சொல்லி விட்டு, கூட்டத்திலிருந்து அந்த வாலிபனை இழுத்துத் தனியாக நிற்க வைத்தான், மந்திரி.

மன்னன் சூரியகேது அந்த வாலிபனைப் பார்த்து, "நீ ஒருவன் மட்டும் ஏன் முத்துக்களைப் பொருக்கவில்லை?", என்று மிக கடுமையாகக் கேட்டான்.

அதற்கு அந்த வாலிபன் சற்றும் தயங்காமல், "மன்னவா! என்னை மன்னிக்க வேண்டும். சிதறிய முத்துகளை பொருக்கி எடுப்பது வேலையாட்களின் வேலையாகும். மன்னருக்கும், மந்திரிக்கும் பாதுகாப்பளிக்க வேண்டியது மெய்க்காவலனின் வேலை. ஆகவே எங்களுடன் வந்திருக்கும் மந்திரிக்கு பாதுகாப்பாக நிற்க வேண்டியது தான் என் கடமை யாகும்", என்று சொன்னான்.

அந்த இளைஞன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு அரசன் கோபம் கொள்வான் என்று மற்ற ஒன்பது வாலிபர்களும் எண்ணினார்கள்.

ஆனால் அரசன், அந்த வாலிபன் வார்த்தைகளை கேட்டு மகிழ்ச்சி அடைந்து, "இவன் தான் மெய்க்காவலன் என்னும் உத்தியோகத்தின் உட்கருத்தை அறிந்து நடந்து கொண்டான். ஆகவே இவனையே மெய்க்காவலனாக நியமிக்கிறேன்", என்று சொன்னான்.

மன்னனின் இவ்வார்த்தைகளைக் கேட்ட மற்ற ஒன்பது வாலிபர்களும், புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளாததற்காக, வெட்கித் தலைகுனிந்து கொண்டார்கள்.

சிறுவர்

போட்டித் திட்டம்

1. அடுத்த இதழில் இருந்து 14 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமிகளுக்கென ஒரு பரிசுப் போட்டி ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

2. நிபந்தனைகள் :

a. 14 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமிகள் மட்டுமே எழுதலாம்.

b. அவர்கள் எழுதும் கதை, கவிதை, கட்டுரைகளுடன் அவர்கள் வயதுக்கு ஆதாரமாகத் தலைமை உபாத்தியாயர் கையெழுத்தும் உடன் அனுப்பப்பட வேண்டும்.

c. எழுத வேண்டிய தலைப்புக்கள் அவ்வப்போது அறிவிக்கப்படும். அது 'புதுமை'யின் ஒரு பக்கத்தில் அடங்குவதாய் இருக்க வேண்டும்.

. வெள்ளைத் தாளில் ஒரே பக்கத்தில் எழுதப்பட வேண்டும்.

e. பரிசு பெற்றவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் ஆசிரியரால், தகுதிக்கேற்றாற்போல் பரிசுகள் அளிக்கப்படும்.

3. ஒவ்வொரு மாதமும், 10-ந் தேதிக்குள் கிடைக்கும்படி கட்டுரை, கவிதை, கதைகள் அனுப்பப்பட வேண்டும். 10-ந் தேதிக்கு மேல் அனுப்பப்படுபவை போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டா.

4. பரிசு பெருதவைகளை திருப்பிப் பெற விரும்புவோர் திருப்பி அனுப்ப உரிய தபால் பில்லைகள் அனுப்ப வேண்டும். போதிய தபால் தலைகள் இல்லையென்றால் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

5. போட்டியில் கலந்து கொள்வோர் அனுப்பும் போது கவரிலே—புக்போஸ்டின் மேலேயே—'சிறுவர் போட்டித் திட்டம்' என்று குறிப்பிட்டு,

நிர்வாக ஆசிரியர்,
புதுமை,
283-A, திருவல்லிக்கேணி
ஹைரோட்,
சென்னை—5

என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

6. பரிசு சம்பந்தப் பட்ட எல்லா விஷயங்களிலும் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

1-12-57க்குக் கீழ்க்காணும் தலைப்பு பற்றிய எழுத வேண்டும்.

"உழைப்பால் உயர்ந்த ஒரு தமிழன்."

அறிவிப்பு

விமர்சனத்துக்கு புத்தகம் அனுப்பும் போது இரண்டு பிரதிகள் அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம். —**ஆசிரியர்.**

விமர்சனம்

முதலாளி

'தொழிலாளி இல்லாவிட்டால் முதலாளி இல்லை. அதுபோல் முதலாளி இல்லாவிட்டால் தொழிலாளியும் இல்லை' என்ற கருத்தைப் பின்னணியாகக் கொண்டு, விழிப்படைந்து வரும் தொழிலாளி வர்க்க உணர்ச்சியைப் பணமாக்கி, பாங்கிக் கணக்கிலேற்ற, இந்த சோஷலிஸ மாடல் முதலாளியைத் திரைக்குக் கொண்டுவந்து இருக்கிறார், முதலாளி ஸ்ரீ வேணு.

கதை சாதாரணமானது தான். அமெரிக்காவில் படிக்கச் சென்ற கண்ணாடி ஆலை முதலாளி வசந்தன் திரும்பும் வழியில் பம்பாய் ஓட்டல் அறையில் தங்கியிருக்கும் பொழுது தொழிலாளியின் உண்மை வாழ்வை அறியத் திடீரென்று ஓர் துடிப்புக் கொள்கிறான். சாதாரணத் தொழிலாளி, 'வரதனாக' மாறி தனது தொழிற்சாலையிலேயே வேலைதேடிக் கொண்டு மானேஜர் பாலுவின் அட்டூழியங்களையும் அத்தை மகள் கோகிலத்தின் சாகஸத்தையும், தொழிலாளர்களின் சோகவாழ்வையும் அநுபவபூர்வமாக அறிகின்றான்.

தொழிலாளி வரதனுக்கு, சக தொழிலாளியாகிய வள்ளியின் காதலும் கிடைக்கின்றது. இப்படி மாறு வேடத்திலே உண்மை நிலைகளை உள்ளபடி அறிந்த பிறகு, மீண்டும் 'முதலாளி'யாகமாறி ஆணவக்காரர்களின் முகத்திரைகளைக் கிழித்தெறிந்து, தொழிலாளர்களின் துயரைத் துடைக்கின்றான்.

கதையில் காணப்படாத கவர்ச்சி, வசனத்தின் உயிர்த் துடிப்பால் ஈடு செய்யப்பட்டு விடுகின்றது. காதல் கட்டங்களிலிருந்து, மேடைப் பிரசங்கம் வரை வசனம் தரமாக இழைந்தோடுகின்றது. பொதுவாக ஸ்ரீ வேங்கடராமானுஜத்திற்கு இது ஓர் வெற்றிப் படைப்பு என்றே சொல்லலாம்.

படத்திலே வெகுவாகப் பாராட்டப் படவேண்டிய அம்சம், துணிவாக எம். ஏ. வி. பிக்சர்ஸார் புதியன பல புகுத்தியிருப்பதைத்தான்; 'ஸ்டார் வேல்யூ' இல்லாமல் போய் விடும் என்று எண்ணி அநுபவப் பாட்டிகளுக்கும் 'மேக்கப்' போட்டு வரும் இந்தக் காலத்திலே, துணிச்சலாக, இரண்டொன்றிலே மாத்திரம் தோன்றியுள்ள சாதரரண உப நடிகையை கதாநாயகியாக உயர்த்தியிருப்பதும்இராஜேந்திரனை முதல் முறையாக கதாநாயகர் ஆக்கி இருப்பதும், புத்தம் புதிய

கதை வசனகர்த்தா, டைரக்டரை ஊக்குவித்திருப்பதும் புதுமைகள் அல்லவா? புதிதாகச் 'சான்ஸ்' பெற்றிருப்பவர்களும் பாதகமில்லாமல் பணியாற்றி உள்ளார்கள்.

நடிகர் இராஜேந்திரனுக்கு, நல்ல எதிர்காலம் உள்ளது என்பதற்கு 'முதலாளி' ஓர் சான்று. நாடக மேடை வாடை இடைஇடையே வீசினாலும், சில சமயங்களில் 'எக்ஸ்பிரஸ்' போல வசனங்கள் பேசப்பட்டாலும் கூட தரங்குறையாத நடிகர் என்பதை நிருபித்துள்ளார். கோகிலத்தைப் பாலுவுடன் ஆபீஸ் அறையில் உல்லாச நிலையில் காணும் போதும், தாயுடன் தான் உண்மை வசந்தன் தான் என்பதைக் காட்ட வாதிடும் பொழுதும் அவர்காட்டும் உணர்ச்சி முத்திரைகள் 'சபாஷ்' பெறுகின்றன.

தேவிகாவின் நடிப்பிலும் குறை அதிகம் கூற முடியாது. ஒரு பிரபல நடிகையைப் போல முகத்தைச் சுளித்துக் கொள்ள அவர் முயற்சிக்கையில் தான், மனது சங்கடப்படுகின்றது. தமிழ் நடிகைகளை ஆதரிக்க வேண்டும் என்ற உணர்வை ரசிகர்கள் மனத்தில் ஏற்படும்படியாகச் சில பெரிய புள்ளிகள் நடந்துவரும் இந்த நேரத்தில், தேவிகா உழைப்பை அதிகப்படுத்திக் கொண்டால் முன்னேற வழிகள் இல்லாமல் இல்லை, மிகச் சிறந்த போட்டோ சினிக் 'பேஸ்கட்' என்று சொல்ல முடியாவிட்டாலும் கூட.

வில்லன் டி. கே. ராமச்சந்திரன், எம். என். ராஜம், தங்கள் பங்கை பரவாயில்லை என்று சொல்லும்படி செய்துள்ளார்கள்.

இப்போது ஹாஸ்யப் பாத்திரங்களுக்கு என்றே வேலைக்காரர்களைப் படைக்கிறார்கள் என்பது வெளிப்படை. அதனால் தானோ என்னவோ, வேலைக்காரர்கள் அளவு மீறுகிறார்கள்! குரங்கு, குரங்கு என்று கணவனைச் சென்று அடிக்கடி அழைப்

பது 'ஹாஸ்யம்' என்று கருத மிகுந்த தாழ்ந்த உள்ளம் வேண்டும். ஏதாவது ஒரு சொல் தொடரை ஹாஸ்ய நடிகர் அடிக்கடி சொல்லுவது என்பது மரபாகி விட்டது.

'முதலாளிகள்' பத்துப் பேரிருந்தால்...?

'கர்ப்பத் தடைப் பிரசாரம்' நாசூக்காக 'இன்ஜெக்ட்' செய்யப்பட்டுள்ளதைப் போற்ற வேண்டும். 'லோகம்' என்ற வார்த்தை மீது ஏன் இவ்வளவு மோகமோ? "பில் கலெக்டர்' ஹாஸ்யம் பத்தாம் பசலி.

ஒலிப்பதிவு 'மோசம்' என்பதைக் குறிப்பிடாமல்இருப்பது குற்றம். தொழிலாளிப் பெண் வள்ளி என்பதை மறந்துவிட்டு மேக்கப் செய்துள்ளார்கள்.

டைரக்டர், 'ஐந்து வருடம் பார்க்காவிட்டால், மகனைத் தாய் மறந்து விடுவாளா? மற்றையோருக்கும் கூட, முதலாளி வசந்தன் ஓர் 'போப்' போட்டு வந்தால் தெரியாது போய் விடுமா?' என்று ரசிகர்கள் கேட்பார்களே என்பதை எண்ணியே எவ்வளவோ முயன்று, இடைவேளை வரைப் பல சந்திப்புக்களை ஏற்படாது பார்த்துச் சமாளிக்கிறார் என்றாலும், பிறகு அவரைக் கதை காட்டிக் கொடுத்து விடுகின்றது. வள்ளி, காரை நிறுத்திக் கொண்டு பாலு பேசும்பொழுது 'உம்' வரிசையில் பதிலிறுப்பதும், தொழிலாளியின் மகன், 'தனியொரு

'நேத்திக்கு வந்தவா?'......அதன் அவசியம்......?

பாடல்கள் நினைவில் இருப்பதாக இல்லை. 'குங்குமப் பொட்டுக்காரா' சுமார். 'முதலாளி'யை வர்ணிக்கும் பாடல் முதலாளியைக் கடவுளாகவே ஆக்கிவிடுகிறது. இப்படி

வனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று எழுதுவதும் நன்ருக உள்ளன. காதல் கட்டங்கள், சில புதிதான உத்திகளை காட்டுகின்றன. ஆனல் கண்ணுடி ஆலைக்கும் வள்ளி வீட்டிற்கும் இடையிலே மலை, மடு என்ன எல்லாமோ வருகின்றன. சமீபத்திலே ஓரிடத்திலே மலை பிஞ்சு கூட இல்லாத மாயவரத்திலே 'குன்றுகள்' வந்ததை அவை நினைவூட்டுகின்றனவே!

முடிவாக ஓர் வார்த்தை சில, சில குறையாக இருந்தாலும், 'முதலாளி' என்னவோ, தன்னை படம் எடுத்த 'முதலாளி'யின் முதலுக்கு மோசம் செய்து விடுவான் என்று நான் எண்ணவில்லை!

ஆர். எஸ். எஸ்.

போன் : 1259 தந்தி : "FASHION" தபால் பெட்டி நெ. 16

கலை நிரம்பிக் காண்பதற்கு இனிதாகி
மலர்க்கொடியாள் மனதினை மகிழவைத்து,
தளிர்மேனி செவ்விதழாள்
மலர்க்கண்ணைத் தன்னகத்தே ஈர்த்து
அழகொளியை அள்ளி வீசும்,
எமது கோயமுத்தூர்

சௌடாம்பிகை

சேலைகளை

வாங்கி கைத்தறியை ஆதரியுங்கள்.

தயாரிப்பாளர்கள்

ஸ்ரீ சௌடாம்பிகை தேவாங்க நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனை சொசைட்டி லிட்.,
நெ. K. 1517 ; கோயமுத்தூர்.

தலைமை ஆபீஸ் :	விற்பனைக் கிளைகள் :	ஸ்டாக்கிஸ்டு:
& சாயச்சாலை :– 22/307 ரங்கே கவுடர் வீதி, கோவை.	11/47, சுக்ரவார்ப்பேட்டை, கோவை.	நியூ ராதா ஹால்,
	56, பெரியதெரு, திருவல்லிக்கேணி, சென்னை.	பஜார் தெரு, சேலம்.

தலைவர் : A. K. பழனிசாமி

197688

நாடக விமர்சனம்

ஹலோ போலீஸ் ஸ்டேஷனு......?

இந்நாடகக் கதையையும் வசனங்களையும் பிரபல துப்பறியும் நாவலாசிரியர் திரு. **ஆர். எஸ். மணி** சிறந்த முறையில் செய்துள்ளார் என்று தாராளமாகக் கூறலாம்.

இந் நாடகத்தில் ஹாஸ்ய பாகத்தை அமைத்து டைரக்ட் செய்த ஸ்ரீ டி. பி. வேணுகானன் நாடகத்தின் வெற்றிக்காக அரும்பாடு பட்டிருக்கிறார். ஆனால் ஹாஸ்யத்தை ஓரளவு குறைத்திருந்தால் நாடகம் இன்னும் விறு விறுப்பாக இருந்திருக்கும்.

வஞ்சகன் கோபால்சாமியின் வீட்டிற்குச் சென்று துப்பாக்கியினால் நெஞ்சுக்கு நேராகக் குறி வைத்து டுமீல் என்று சுட்டு விட்டு ஓடி விட்டாள் பிரேமா. துப்பறியும் சிங்கம் ராம்குமார் குற்றவாளியைக் கண்டுபிடிக்க சாகசம் செய்கிறான். இன்ஸ்பெக்டர் சேகர் கொலைகாரியான பிரேமாவை காதலித்தவன். அவளுக்கு உதவி செய்கிறான். இருந்தும் அவன் தன் கடமையை மறக்கவில்லை. பிரேமா ஓர் நிரபராதி என்று அவனுக்குப் படுகிறது. அதே சமயம் பிரேமாவைக் கைது செய்ய முன்கோபியான ராம்குமார் அலைகிறான். கடைசியாக உமாராணி, "நான் தான் குற்றவாளி" என்று ஒத்துக் கொள்கிறாள். இதுதான் கதை.

கம்பீரமான தோற்றத்துடன் கூடிய துப்பறியும் ராம்குமாராக நடித்த திரு. சாம்பசிவம் செட்டியார் பாத்திரத்திற்கு ஏற்ப பேசியும் உணர்ச்சியுடன் நடித்தும் வெகு எளிதில் முதல் இடத்தைப் பெற்று விட்டார்.

அடுத்தபடியாகக் குலுங்க குலுங்க ரஸிகர்களை சிரிக்க வைக்கும், உதவி துப்பறியும் நிபுணர் சிங்காரமாக நடித்த கிருஷ்ணராஜு...பல வேடங்களில் தோன்றி நன்றாக நடித்தார்.

சிங்காரத்தின் காதலி வேணியாக நடித்த பிரேமகுமாரி மிகக் கச்சிதமாக நடித்தாள். வார்த்தை உச்சரிப்பைத் தெளிவு படுத்திக் கொண்டால் ஒரு நல்ல நடிகை யாவது நிச்சயம்.

பிரேமாவாக நடித்த ஸ்ரீ சரோஜா பரவாயில்லை. வசனங்கள் இன்னும் சற்றுத் தெளிவாகப் பேசி இருக்க வேண்டும்.

இன்ஸ்பெக்டராக நடித்த திரு. சேனாபதி தன்னுடைய பாத்திரத்தை உணர்ந்து சந்தர்ப்பங்களுக்குத் தகுந்த முறையில் வசனங்களை நிறுத்தி, கேட்பவர்களுக்குப் புரியும்படி பேசியிருந்தால் நாடகம் மேலும் சோபையாக இருந்திருக்கும்.

கனவு சீன் நன்கு அமைந்து விட்டது. வேணியின் தந்தையாக வரும் ஏட் சீனிவாசன் நன்றாகவே நடித்தார்.

சங்கீதக் கோஷ்டியின் பின்னணி வாத்தியங்களின் ஒலி மிக அதிகம். சந்தர்ப்பத்திற்கேற்ப தாழ்த்தியும் இனிமையாகவும் வாசித்திருந்தால் நாடகத்தின் போக்கு இன்னும் உயர்ந்திருக்கும்.

எஸ். கே. மூர்த்தி.

'வாய்வு சூரணம்'

உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, பித்த வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீரணம், புளியேப்பம், கை கால் அசதி, பசியின்மை, செரியாமை, வயிற்றுவலி, பித்தமயக்கம், பித்தசூலை, சோம்பல் முதலான வாய்வு ரோகங்களை அறவே நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும், தேகாரோக்கியத்துக்கும் மிகச் சிறந்த சூரணம். மூலிகைகளினால் தயாரிக்கப்பெற்றது.
(பத்திய மில்லை)

5 பலம் டின் ரூ. 3-0-0

தேவைக்கு :—

சம்பு இண்டஸ்ட்ரீஸ்

சேலம்-2 (S. R.)

குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்!

லிங்கம் பிஸ்கட்ஸ்

எல்லா இடங்களிலும்
கிடைக்கும்.
T. U. C. S. பிராஞ்சுகளிலும்
கிடைக்கும்

காமதேனு பிலிம்சார்
சென்னை-17
அளிக்கும்

தமிழரசி

(Production No- 2)

எங்கள் 40 குச்சி கோபுரம் மார்க், சிம்கோ லேட் மார்க், சிம்கோ சைகிள் மார்க், மைனர் சைஸ் சீனு லேடி மார்க்
60 வேட்டை சிங்கம் மார்க்
தீப்பெட்டிகள்.

கடற்கரை குளிர்ப்பிரதேசங்களுக்கும், மற்றும் மலபார் மழைக்கும் உகந்தது.

சிறந்த விதமான சரக்கு உற்பத்தி!

சிறப்பான பொதுஜன ஆதரவு

தினம் குடிசைத் தொழிலாகத் தயாராகும் 3300 குரோஸ்கள் தீப்பெட்டிகளும் எங்களுடைய டெப்போக்களிலேயே செலவாகின்றன.

சிம்கோ :: :: சிவகாசி S. I.

போன் : **63** — தந்தி : ***SIMCO***

சேவைக்கும் பாதுகாப்பிற்கும் சிறந்தது !

பாண்டியன் பாங்க் லிட்.

சென்ட்ரல் ஆபீஸ்: மதுரை

சென்னை கிளை : ஆபீஸ் 121, அரண் மனைக்காரத் தெரு.

எங்கள் சேவிங்ஸ் பாங்க் பரிசுத் திட்டத்தில் கலந்து கொண்டு பயனடையுங்கள்.

எல்லாவித பாங்க் அலுவல்களும் கவனிக்கப்படும்.

தென் ஜில்லாக்களில் மட்டும் 46 இதர கிளை ஆபீஸ்கள் உள்ளன.

S. N. K. சுந்தரம்
மானேஜிங் டைரக்டர்.

போன் : 151 தந்தி : VESSELS

குறைந்த விலையில் சிறந்த பாத்திரங்கள்

எவர் சில்வர் பாத்திரம், எவர் சில்வர் தகடு,
பித்தளை, செம்புப் பாத்திரம், பித்தளை,
செம்புத் தகடுகள் உத்திரவாதத்
துடன் கிடைக்கும்.

பெ. சி. சி. சுந்தரம்மாள் அன் கோ.,

பாத்திர வியாபாரம்

28, வெங்கலக்கடைத் தெரு,

மதுரை.

"Standard Fireworks"

FOR

QUALITY

AND

Superb Performance

- ★ Thouhtfully styled with glittering ideas.
- ★ Artistically designed with an imaginative touch.
- ★ Delightfully made with grace and symmetry.
- ★ Exquisitely detailed with splendour and performance.

From the powder to the finished Fire work-nothing is left to chance. Painstaking is the planning of each step in the production of each piece. The minds and hands that direct and perform these tasks are those of highly skilled technicians and talented designers......a team that has produced superb pieces of work...... an experienced group of Pyrotechnicians who eliminate chance in their constant search for a beautiful piece of work synonymous with not only quality, but also style embodying originality and superb performance.

'he name "STANDARD FIREWORKS" eloquently speaks for itself. The well-deserved popularity of this name is an attestation of wide-spread public approval and recognition.

THE STANDARD

FIREWOKS INDUSTRIES.

Sivakasi *S. India.*

உலகப் பிரசித்திபெற்ற

டாடா - மெர்ஸிடிஸ் பென்ஸ்

டீஸல் டிரக் - பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்

இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின் டெய்ம்லர்
பென்ஸ் தயாரிப்பு

மாடல் LP 5200/48—5டன்

"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.

பஸ் சொந்தக்காரர்களுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும்
உகந்தது.

எல்லா மேக்குகளுக்கும் மாற்றி அமைக்க

தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.

மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு
அதிகாரம்பெற்ற டீலர்ஸ்:

பாண்டியன்

ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட்,

5, ஸ்காட் ரோடு : : மதுரை.

Regd No. M. 6928 PUTHUMAI

தந்தி : 'ஜுவல்லர்ஸ்' போன் : 49

பவுண், தங்கம், வெள்ளி,
வைர நகைகளுக்கு

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

திருச்சிராப்பள்ளி

கிளைகள் : சென்னை, காயல்பட்டணம்,
யாழ்ப்பாணம் & கொழும்பு.

Edited and Published by K. T. Kosalram and Printed by G. Rengiah, Manager, Mohan Ram Press, at 283-A, T. H. Road, Madras-5.